
குண்டூசி
746
நேஷனல் புரடக்ஷன்ஸ்
உலகம் பலவிதம்
டைரக்ஷன்... முருகேஷ்
RKF
RIGHTS CONTROLLELED by




Distributors: A. V. R. A. & Co., Madras, Bombay.

403
3 MAY 1955
MADRAS



சென்னையில் தினசரி 3 காட்சிகள்—2-30, 6, 9-30

யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ்

# வள்ளியின் செல்வன்

ஜெமினி ரிலீஸ்

இப்பொழுது
சென்னை
**வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி**
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும் தமிழ்நாடெங்கும்...



"நான் பெற்ற குழந்தையை நான் பார்க்க முடியவில்லை. அது யாரு வீட்டிலே வளர்ந்து என்ன? என் வீடு சூன்யமாய்ப் போச்சு... பிள்ளையைப் பார்க்கப் போய் கழுத்தைப் பிடுச்சு வெளியே தள்ளிவிட்டாங்க."

தி

# யுனைட்டெட் கமர்ஷியல் பாங்க் லிமிட்டெட்

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் 2 கோடி ரூபாய்

ஒதுக்கப்பட்ட மூலதனம் 86½ லக்ஷ ரூபாய்

வேலையும், சேவையும்

இந்த பாங்க், டெபாஸிட்களை பெற்றுக்கொள்கிறது; அங்கிகரிக்கப்பட்ட ஈடுகளின்பேரில் கடன் கொடுக்கிறது; பில்களை விலைக்கு வாங்குகிறது; உண்டிகளை விற்கிறது; தந்தி மூலம் பணம் மாற்றிக் கொடுக்கிறது; மற்றும் எல்லா விதமான வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரங்களையும் செய்கிறது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏராளமான கிளை ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு, அகில உலக வியாபகமான ஏற்பாடுகளைச் செய்திருப்பதால், உங்களுக்கு ஒரு பாங்க் மூலம் ஆக வேண்டிய எந்தக் காரியமானாலும் இந்த பாங்க் செய்துகொடுக்கும்.

ஜி. டி. பிர்லா,
அக்ராசனர்.

பி. டி. தாகூர்,
ஜெனரல் மானேஜர்.






பிராஞ்ச் : 5. மேல கோபுர வாசல், மதுரை.

மார்ச்
1955

# குண்டூசி

பட்டை 8
ஊசி 6
பிரதி 90

ஆசிரியர் : பி. ஆர். எஸ். கோபால்

## புதிய சகாப்தம்

இந்திய சினிமாத் தொழிலுக்கு ஒரு புதிய சகாப்தம் பிறந்திருக்கிறது. நாற்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்பு அனாதையாய் பிறந்து, தாயில்லா சேய் போல் வளர்ந்து, தனக்குத்தானே எதிர்ப்புகளைச் சமாளித்துக் கொண்டு, சிரஞ்சீவியாய் வாழ்ந்துவரும் இத்தொழிலுக்கு—இந்திய சர்க்காரின் மனமுவந்த ஒத்துழைப்பு, சமூகத்தினருடன் சம அந்தஸ்து, ஜனாதிபதி, பிரதம மந்திரி முதலான தேசத் தலைவர்களின் பாராட்டு—இவ்வளவும் ஒரே நாளில்—பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று—கிடைத்து விட்டது. சங்கீத நாடக அகேடமியின் சினிமா அரங்கு டில்லியில் அன்று கோலாகலமாய் ஆரம்பமாகி நடந்தேறியது.

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் சங்கீத நாடக அகேடமி இந்திய சர்க்காரின் பொருளுதவியுடன் — ஆனால், அவர்களது தலையீடற்ற சுயேச்சாதிகாரத்துடன் —தோற்றுவிக்கப் பட்டது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே.

நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய மூன்று கலைகளையும் சினிமா தன்னுள் கொண்டு, அவற்றைப் பெருமளவு வளர்த்து வருவதால், இக்கலையை மக்களின் மதிப்பிற்குரிய உன்னத நிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இந்த அகேடமி ஈடுபட முன்வந்திருக்கிறது. அதன் பயனாகவே இந்த சினிமா அரங்கு கூட்டப்பட்டது. பழம் பெரும் நக்ஷத்திரங்களான தேவிகா ராணியும், பிருதிவி ராஜ் கப்பூரும் இந்த அரங்கின் ஏற்பாடுகளுக்காக மிகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரபல படமுதலாளிகள், டைரெக்டர்கள், நக்ஷத்திரங்கள், டெக்னிஷியன்கள் முதலானோர் ஏராளமாக டில்லியில் கூடியிருந்தார்கள். அவர்களில் பலர் தாம் பெற்றுள்ள அனுபவத்தை யொட்டி சினிமாக் கலை வளர்ச்சி சம்பந்தமான பிரசங்கங்களையும், விவாதங்களையும் நிகழ்த்தினார்கள். இவை மூலம் சினிமாப் பிரமுகர்

களிடையே நட்பும், ஒத்துழைப்பும், கலை வளர்ச்சியும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

பிரபல வங்கப் பட முதலாளியான பி. என். சர்க்கார் தலைமை வகித்த இந்த சினிமா அரங்கை பிரதம மந்திரி நேருஜி ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ. நேரு ஆணித்தரமாகப் பேசுகையில், "கற்பனை கூடிய கலைகள் சர்க்காரின் தலையீடு அதிகமின்றி—சுயமாக செழித்து வளருவதையே நான் விரும்புகிறேன். ஆனல், இவை சமூகத்தைப் பாழ்படுத்தும் நிலையை அடைந்தால், சர்க்கார் தலையிட்டு, கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். புஸ்தகங்களும், பத்திரிகைகளும் பொது மக்களிடையே பெற்றுள்ள ஆதரவைப்போல் பன்மடங்கு ஆதரவை சினிமா பெற்றுள்ளது. ஆக, நம் சினிமாப் படங்களின் தரம் சம்பந்தமாக சர்க்கார் மிக அக்கரை கொண்டுள்ளது. பொது ஜன ரஸனைக்கு ஏற்றபடியே படம் தயாரிக்கப்பட வேண்டியதுதான்; அதே சமயத்தில், நீங்கள் தயாரிக்கும் படங்கள் மூலமும் பொது ஜன ரஸனை உருவாகிறது என்பது உண்மை அல்லவா?" என்று கூறினர்.

சினிமாக் கலை பற்றி இந்திய சர்க்காரின் கொள்கை என்னவென்பதை நேருஜி சந்தேகமற விளக்கிவிட்டார். "சினிமா ஒரு கலையல்ல; தொழில்தான். ஆதலால், பொதுமக்களுக்கு படங்கள் மூலம் நற்போதனை செய்வது எங்கள் வேலையல்ல" என்ற ரீதியில் இனியும் நம் படமுதலாளிகள் விதண்டாவாதம் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர்களால் நற்போதனை செய்வது சாத்தியமில்லாவிட்டாலும் பரவாயில்லை; மக்களிடையே தற்போது இருந்து வரும் நல்லுணர்ச்சி, ஒழுக்கம், இவைகளைச் சீர்குலைக்காமல் இருந்தாலே போதுமானது.

இந்திய சர்க்கார் சினிமாக் கலைக்கு தாராளமாக ஆதரவளிக்கத் தயார் என்பதை இந்த சினிமா அரங்கு நிரூபிக்கிறது.

சினிமா ஒரு கலை—என்ற கருத்துடனே சங்கீத நாடக அகேடமி சேவை செய்ய முற்பட்டிருக்கிறது. படத் தொழிலினர் பெருவாரியாய் அதில் கலந்து கொண்டிருப்பதிலிருந்து, இந்தக் கருத்தை அவர்களும் ஆதரிப்பதாகவே ஆகிறது. உண்மையில், "சினிமா ஒரு கலைத் — தொழில்". அதிலிருந்து கலையையோ தொழிலையோ பிரிக்க முயன்ருல் கேடுதான் விளையும். தேசத்திற்கும் பொது மக்களுக்கும் தாங்கள் கடமைப் பட்டவர்கள் என்ற எண்ணத்துடன் ஒவ்வொரு படமுதலாளியும் படம் தயாரிக்கத் தொடங்கி விட்டால், தணிக்கை போர்டை சர்க்கார் தாமாகவே கலைத்து விடுவார்கள். அதோடு, மக்களும் சினிமாத் தொழிலினரை சம அந்தஸ்துடன் மதிக்க முற்பட்டு விடுவார்கள்.

## நேயர்களுக்கு

அடுத்த மாதம் தமிழ் மக்களின் புது வருஷம் பிறக்கிறது. "குண்டூசி"யும் முற்றிலும் புதிய சோபையுடன் வெளிவரப் போகிறது. உங்கள் மனதைக் கவரும் படங்கள், புத்தப் புதிய பல அம்சங்கள், மற்றும், "குண்டூசி"யில் சீக்கிரமே ஆரம்பமாகப் போகும் "புதிய தொடர் கதை"யைப் பற்றிய அறிவிப்பு இவையெல்லாம் அடுத்த மாத ஊசியில் வெளிவரும்.—ஆசிரியர்.

# உள்ளமுருக்கும் "வள்ளியின் செல்வன்"

## சுப்பய்யா—சுந்தரிபாயின் சிறந்த நடிப்பு

யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸின் முதல் தயாரிப்பான "வள்ளியின் செல்வன்" படம் இப்பொழுது பல ஊர்களில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இப்படத்தின் கதை ஒரு ஹிந்திப் படத்தின் கதையைத் தழுவி எழுதப் பட்டிருக்கிறது. கதையில் புதுமை எதுவுமில்லை; ஏற்கெனவே கிட்டத்தட்ட இதே கதை "வேலைக்காரியின் மகளா"க வெளிவந்திருக்கிறது. "வனயாபதி" யிலும் பிள்ளை மாற்றும் படலம் வருகிறது. சுருங்கச் சொல்ல வேண்டுமானல் சரக்கு பழசு; பாக்கிங்தான் புதிது.

உள்ளத்தைத் தொடும் பல சம்பவங்களைக்கொண்டு பின்னப்பட்ட இக்கதை விறுவிறுப்பான முறையில் படமாக்கப் பட்டுள்ளது. வசனங்கள் எளிய நடையிலே, கருத்து மிகுந்ததாய் உள்ளன.

உண்மை ஊழியன் கந்தனை நடிக்கும் எஸ். வி. சுப்பய்யா படத்தின் ஜீவ நாடியாக விளங்குகிருர் என்ருல் அது மிகையாகாது. அவருக்குள்ள நடிப்புத் திறமை பல சந்தர்ப்பங்களில் வெளிப் படுகிறது.

மனைவியின் சமாதியிலே அவர் கண்ணீர் வடிப்பதையும், தான் பெற்ற செல்வனிடம், "அப்பா என்று உன் வாயால் இன்னெரு முறை சொல்லடா கண்ணே!" என்று நெக்குருகப் பேசுவதும் கல்நெஞ்சனையும் கண்ணீர் வடிக்கச் செய்யும்.

அதே போலத்தான் இருக்கிறது வள்ளியின் பாத்திரமும். இக்கதாபாத்திரமாக வரும் எம். எஸ். சுந்தரிபாய் தமது சிறந்த நடிப்பின் மூலம் பல இடங்களில் நம்மை உணர்ச்சி வசப்படச் செய்கிருர். ஹாஸ்ய நடிகையான இவர் சோக பாத்திரம் ஏற்று நம்மை பிரமிக்க வைக்கிருர். பல இடங்களில் அதிகம் பேசாமல் தமது முக பாவங்களினுல் படம் பார்ப்பவர்களை பாகாக்கி விடுகிருர். பிறக்கவிருக்கும் குழந்தையை எண்ணி இவர் மனக்கோட்டை கட்டும் இடத்தில் இவரது நடிப்பு மிகவும் தத்ரூபமாக உள்ளது.

பெரும் பகுதி சோக கட்டங்களைக் கொண்ட இப் படத்தில்—சிரஸ்தார் துரைஸ்வாமியின் பாகம்தான் படம் பார்ப்போர் அதை உணராதபடி செய்து படத்தில் ஒரு கலகலப்பை ஏற்படுத்துகிறது. சிரஸ்தார் துரைஸ்வாமியாகவே மாறிவிட்ட டி. எஸ். துரைராஜ் ஆரம்ப முதல் இறுதிவரை தமக்கே உரித்தான உயர்ந்த பாணியில் இயற்கையாக நடித்திருக்கிருர்.


மூர்த்தியாக வரும் ஆர். கணேசன் குறைமற்ற முறையில் தமது பாகத்தை நடித்திருக்கிருர். சகோதரி வத்ஸலாவிடம் வாதாடும் கட்டங்களில் அவர் உணர்ச்சியுடன் பேசி ஜீவனுடன் நடித்திருப்பது குறிப்பிடத் தக்கது. மனோஹரம் பிள்ளையாக வரும் எஸ். வி. ஸஹஸ்ர நாமத்தின் நடிப்புத் திறமை இறுதிக் கட்டங்களிலே—ராஜூ வள்ளியின் மகன் என்ற உண்மை தெரிந்த பின்னர் — நன்கு வெளிப் படுகிறது. வள்ளியின் சமாதி முன் கந்தனிடம் மன்னிக்கும்படி மன்ருடும் கட்டத்தில் அவரது நடிப்புத் திறமை உச்ச நிலையை அடைகிறது.

குறும்புக்காரப் பெண் லீலாவாக வனஜா குற்றம் கூற முடியாத வகையில் நடித்திருக்கிருர். தன் கணவனுடன் கொஞ்சி-கெஞ்சிப் பேசும் கட்டங்களிலும், தன் கணவனுக்காகத் தந்தையிடம் தர்க்கம் பண்ணும் இடங்களிலும் வெடுக் வெடுக்கென்று பேசி வெகு சுபாவமாக நடித்திருக்கிருர்.

வத்ஸலாவாக நடிக்கும் லலிதாவின் நடிப்பு நன்கு சோபிக்கிறது. கண்ணீர் மல்கக் கணவனிடம் மன்ருடும் இடத்திலும், ராஜூவைக் கொடுமைப்படுத்தும் சந்தர்ப்பங்களிலும், இறுதியில் கணவனிடம் மன்னிப்புக் கோரும் கட்டத்திலும் இவரது நடிப்புத் திறமை நன்கு புலனுகிறது.

ராஜூவாகவும் — பாலுவாகவும் வரும் சிறுவர்கள் தங்கள் மழலை மொழியினுலும், துடிதுடிப்பான நடிப்பினுலும், குறுகுறுத்த பார்வையினுலும் பாராட்டுதலைப் பெறுகின்றனர். சிறுவர் சிறுமியர் சேர்ந்து ஆடும் ரயில் விளையாட்டு தமாஷாக உள்ளது.

[தொடர்ச்சி 80-ம் பக்கத்தில்]


நான்
இவை இல்லாமல்
இருப்பதில்லை
WILL'S Berkeley
WILLS'S Berkeley
CIGARETTES
Berkeley
CIGARETTES
5 அணுவுக்கு 10. ½ அணுவுக்கு ஒரு சிகரெட்
சென்னை, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர் அல்லது
குடகு விற்பனை வரி உள்பட



# எஸ்.வி.சுப்பய்யா

சினிமா உலகத்தைப் பற்றி நினைக்கும் ஒருவருக்குப் பெரும்பாலும் சந்தோஷமும், சில சமயம் வருத்தமும் ஏற்படச் செய்யும். சினிமா உலகம் எங்கெங்கோ மூலை முடுக்குகளிலிருந் தெல்லாம் புதுப்புது முகங்களைத் தேடிப் பிடித்து ரஸிகர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களைப் பிரபல நக்ஷத்திரங்களாகவும் ஆக்கியிருக்கிறது. நாடக மேடையில் நாலு சதவிகிதம் பாராட்டுக்கூடப் பெற முடியாதவர்களை சினிமாவில் நூற்றுக்கு நூறு பாராட்டுதல் பெறும் வண்ணம் செய்திருக்கிறது. நடிக நடிகைகளுக்கு உள்ள குறைபாடுகள் ரஸிகர்களின் கண்களில் படாதபடி மறைத்து அவர்களை லக்ஷக்கணக்கில் சம்பாதிக்கும் நக்ஷத்திரங்களாக ஆக்கியிருக்கிறது. சுமாராகவே நடிக்கக் கூடியவர்களை திரைமூலம் பிரமாதமாய் நடிக்கக்கூடியவர்கள் போல் காட்டும் சக்தியும்

சினிமாவுக்கு உண்டு. இதெல்லாம் சந்தோஷப்படத்தக்க விஷயங்கள் தான். ஆனல்........?

நாடக மேடையில் சிலர் அமோகமான புகழுடன் விளங்கியிருக்கிருர்கள்; விளங்குகிருர்கள். இவர்களில் சிலரை சினிமா உலகம சரிவரப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி யிருக்கிறது. இப்படி வந்து, சினிமா உலகில் விடாப்பிடியாய் ஒட்டிக் கொண்டிருக்கும் சிலரோ ஒளி மங்கி பரிதாபப்பட வேண்டிய நிலையில் இருக்கிருர்கள். இதற்காக நாம் வருந்த வேண்டியதுதானே?

உதாரணமாக, "வள்ளியின் செல்வனி"ல் நடிக்கும் எஸ். வி. சுப்பய்யாவை எடுத்துக் கொள்ளுவோம். இவர் சில வருஷங்களுக்குமுன் சக்தி நாடக சபையின் நாடகங்களில் நடித்தபோது நாடக ரஸிகர்களின் பிரமாதமான ஆதரவைப் பெற்றது அநேகருக்குத் தெரிந்திருக்கும். சக்தி நாடக சபா நாடகங்கள் மிகப் புகழ் பெற்றதற்கு சுப்பய்யாவின் சிறந்த நடிப்பும ஒரு காரணமாய இருந்தது. "கவியின் கனவு" நாடகத்தில் இவா அபாரமாய் நடித்ததன் விளைவாக இவரை எல்லோரும் "கவியின் கனவு சுப்பய்யா" என்றே குறிப்பிடலாயினர்.

இத்தகைய பண்பட்ட நடிகரை சினிமா உலகம் தன் வசம் இழுத்துக் கொண்டது சந்தோஷிக்கத்தக்கதே. ஆனல், அதன் பிறகு அவரை நேற்று வரை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாமல், குடத்தில் இட்ட விளக்கைப் போல் இருக்கும்படி சினிமா உலகம் அவரை விட்டுவிட்டது வருந்தத்தக்க விஷயமாகும்.

சுப்பய்யா இதுவரை ஒரு டஜன் படங்களில் நடித்துவிட்டார். ஆனல், அவருக்குக் கிடைத்த வேஷங்களில் பெரும்பாலானவை சோபிக்கக்கூடியவையே அல்ல; மற்றும் அவர் நடிப்பை—முக பாவங்களை—நாம் நன்கு கவனித்து ரஸிக்கக்கூடியவையும் அல்ல. சினிமா உலகம் அவரது திறமைகளை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாமல் அசட்டையாக இருந்துவந்தது. இந்த நிலைமையில்தான் யுனைட்டெட் பிலிம்

"வேலைக்காரன்"





''வள்ளியின் செல்வன்''


''புது யுகம்''



ஆர்ட்ஸ் அவருக்குக் கை கொடுத்து, '' வள்ளியின் செல்வ ''னில் நடிக்கச் செய்திருக்கிறது. அவரது திறமை எவ்வளவு என்பதை நன்கு புரிந்து கொண்டு, அவர் அதைச் சரிவர வெளியிடுவதற்குச் சரியான சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. ஒரு சாதாரண வேலைக்காரன் வேஷத்தில் அவர் எவ்வளவு அபாரமாய் நடித்திருக்கிறார்! திடமனதுடைய ஆண்களைக் கூட வல்லவா ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுக்கும்படிச் செய்து விடுகிறார்!

''வள்ளியின் செல்வனி''ல் பல பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கிறார்கள். இருந்தபோதிலும் தம் நடிப்பின் மூலம் சுப்பய்யாவே படத்தின் ஹீரோ போல விளங்குகிறார். இப்படத்தைப் பார்த்தபோது, 'இப்பொழுதாவது சுப்பய்யாவின் நடிப்புத் திறமையை சினிமா உலகம் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறதே' என்ற சந்தோஷம் ஏற்பட்டது எனக்கு.

இந்த சினிமாவோ நாடகமோ இல்லையென்றால் இந்தக் கலைஞரை நாம் எங்கே அறியப் போகிறோம்? எங்கோ



"வள்ளியின் செல்வன்"

"புது யுகம்"



ஒரு கிராமத்தில் கையில் செதுக்குளியுடன் தேர் பொம்மைகளைச் செதுக்கி தேவாலயங்களை அலங்கரிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பார். அவரது முன்னோர்களின் குலத் தொழில் ஆயிற்றே அது. குற்றாலத்திலுள்ள தேர் ஜோடனைகள் சம்பந்தமான பொம்மை வேலைகள் பூராவும் இவர்களுடைய குடும்பத்தினர் செய்தவை தானாம். இவர் தகப்பனார் வெள்ளையன் ஆசாரி இத்தொழிலிலேயே ஈடுபட்டிருந்தார்.

சுப்பய்யாவின் சொந்த ஊர் செங்கோட்டை. 1920 வருஷத்தில், ஒரு புரட்டாசி சனிக்கிழமையன்று வெள்ளையன் ஆசாரி, ராஜவடிவம்மாள் இவர்களின் புத்திரராகப் பிறந்தவர் அவர். அவருக்கு மஹாலக்ஷ்மி, என்ற ஒரு தமக்கையும், பேச்சியம்மா என்ற ஒரு தங்கையும் மட்டுமே கூடப் பிறந்தவர்கள்.

சுப்பய்யாவின் உறவினர்களில் யாருமே நாடகம், சங்கீதம், போன்ற கலைகளில் பரிச்சயம் உடையவர்கள் அல்ல. அவர்கள் தச்சு வேலை, சிற்ப வேலை இவைகளிலேயே ஈடுபட்டிருந்

தார்கள். சுப்பய்யாவையும் இத் தொழிலிலேயே ஈடுபடுத்தி விடலாம் என்ற எண்ணத்தினாலோ, அல்லது அப்பாவுக்கு இவர் செல்லப் பிள்ளை என்ற காரணத்தாலோ, பத்து வயது நிரம்பும் வரையில் இவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்குமே ஏற்படவில்லை. பதினோராவது வயதிலேயே இவர் செங்கோட்டையிலுள்ள ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அந்தப் பள்ளிக்கூடத்தில் பத்தே நாட்கள்தான் சுப்பய்யா படித்தார். பிறகு ஒரு மலையாளப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆனால், அப்பள்ளியிலும் அவர் அதிக நாள் தங்கவில்லை. இந்த சமயத்தில் அவரது தகப்பனார் திடீரெனக் காலமாகிவிடவே, சுப்பய்யா சுமார் இரண்டு மாத



வாழ்வோடு படிப்பை நிறுத்திவிட்டார். பிறகு அந்தக் குடும்பம் கத்தளிக்கும் நிலைக்கு வந்து விட்டது. இனி செங்கோட்டையில் காலம் தள்ளுவது சாத்தியமில்லையென்று அவரது தாயார் குழந்தைகளை அழைத்துக் கொண்டு, செங்கோட்டைக்குப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள புதுக்குடி கிராமத்திற்குச் சென்று, தம் சகோதரரின் மேற்பார்வையில் வசிக்கலானார்.



புதுக்குடிக்கு வந்த பின் உறவினர் சகாயம் ஏற்பட்டதே தவிர, குடும்பம் என்னவோ தாயாரின் தேக உழைப்பின் பேரிலேயே நடக்கவேண்டியிருந்தது. அவர் நெல் குத்துவது, வீட்டு வேலைகள் செய்வது—இவற்றின் மூலம் கிடைத்த சொற்ப வருமானத்தைக் கொண்டே குடும்பத்தை சம்ரக்ஷித்து வந்தார். அப்போது குடும்பம் இருந்த சீர்கெட்ட நிலையில் சுப்பய்யாவைப் படிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணம் அவரது தாயாருக்கோ மாமனுக்கோ ஏற்படாதது ஆச்சரியமில்லை. அதனால் சுப்பய்யா கிராமத்தைச் சுற்றிச் சுற்றி வந்து, வீண்பொழுது போக்கிக் கொண்டிருந்தார். சில சமயம் சுப்பய்யா ஏழெட்டுப் பையன்களை கோஷ்டியாகச் சேர்த்துக் கொண்டு, ஆளுக்கொரு சைக்கிள் சக்கரத்தை

[தொடர்ச்சி 81-ம் பக்கத்தில்]



அகில இந்தியப் புகழ்பெற்ற நகை வியாபாரியும், கொடை வள்ளலும், பொதுநல ஊழியரு மான ஸ்ரீ. பி. ஏ. ராஜு செட்டியாரும, அவரது மனைவியார் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அமமையாரும் தங்களது சஷ்டி அப்த பூர்த்தி விழாவை ஒட்டி ஆசிகள், நற்செய்திகள், பரிசுகள் அனுப் பியவாகளுக்கு தம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்திருக்கிருர்கள்.

# ...இது செய்தி

### கணேசன்—பானுமதி ஜோடி

பிரபல நடிகர் சிவாஜி கணேசனும், நடிகை பி. பானுமதியும் முதன் முதலாகச்சேர்ந்து நடிக்கப்போகிறுர்கள். பரணி பிக்சர்ஸ் தயாரிக்கவிருக்கும் "சிந்தாமணி"யில் அவர்கள் முறையே பில்வமங்களாகவும், சிந்தாமணியாகவும் நடிப்பார்கள் என்று தெரிகிறது. இதுதவிர, பானுமதி, சிவாஜி கணேசனுடன் ரேவதி தயாரிப்பான "கள்வனின் காதலி"யிலும் நடிக்கக்கூடும் எனத் தெரிகிறது.

### மீண்டும் "அலிபாபா"

மாடர்ன் தியேட்டர்ஸார் அடுத்தபடி "அலிபாபாவும் நார்பதுதிருடர்களும்" என்ற கதையைப் படமாக்கப் போவதாக அறிவித்திருக்கிறுர்கள். இது முழு கலர்ப் படமாகத் தயாரிக்கப்படுமாம். பத்மினி பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தை கே. ராம்னுத் டைரெகட் செய்வாராம. தமிழில் தயாரிக்கப்படும் முதல் முழு சலர்ப் படம் இதுதான்.

### உலகத்திலேயே சிறந்தவை

சென்ற மாத ஆரம்பத்தில், 'கேவா' போட்டோ உற்பத்திக் கம்பெனி டைரெக்டரான, டாக்டர் ஏ. பீகன் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்கு சென்ற மாதம் 4ம தேதி வாஹினி ஸ்டுடியோவில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை, தென்னிந்திய ஸ்டுடியோக்கள் சங்கம் இவை சார்பில்இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. தமக்கு அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கையில் பீகன், வேலை நடைபெறும் விதத்திலும், நிர்வாகத்திலும் சென்னை ஸ்டுடியோக்கள் உலகத்திலேயே சிறந்தவை என்று கூறினுர். பின் இந்தியாவில் 'கேவா' ஸ்தாபனத்தின் வேலை விபரங்களை அவர் எடுத்துக் கூறினுர்.

### பெங்களூரில் ஸ்டுடியோ

டைரெக்டர்—நடிகர்—படமுதலாளியான ஆர். நாகேந்திர ராவ் முதல்தரமான ஒரு பெரிய ஸ்டுடியோவை பங்களூரில் சில பிரமுகர்களுடன் சேர்ந்து ஆரம்பிக்க முயற்சிகள் செய்து வருவதாகத் தெரிகிறது.

### சலுகை ரத்து

"பெரும்பாலும் கல்வி சம்பந்தப்பட்ட படம்" என்று அத்தாட்சி அளிக்கப்பட்ட திரைப்படங்கள் விஷயத்தில், படத் தணிக்கைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணத் தொகை முழுவதையுமோ, ஒரு பகுதியையோ திருப்பித் தருவதை இவ்வருஷம் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து நிறுத்தி விடுவது


நறுமண உலகின் மூவேந்தர்கள்



சேரன்
சோழன்
பாண்டியன்
K.T.R
ஜவ்வாஜி பத்திகள்
K.T.R வாசனதி திரவிய சாலை விஜயபுரம், தஞ்சை ஜில்லா.

என்று மத்திய திரைப்படத் தணிக்கையாளர் போர்டு தீர்மானித்துள்ளது.

### லண்டனில் ''பூட் பாலிஷ்''

ஆர். கே. பில்ம்ஸாரின் ''பூட் பாலிஷ்'' என்ற படம், லண்டனிலுள்ள இந்திய பில்ம் சொஸைட்டி மூலம் சென்ற மாதம் அங்கு திரையிடப்பட்டது. படம் நல்ல ஆதரவையும், பாராட்டுதலையும் பெற்றதாக அறிகிறோம்.

### ''ஆஸ்கார்'' பரிசுகள்


1954ம் வருஷத்திற்கான ''ஆஸ்கார்'' பரிசுக்கு லாயக்கான சிறந்த படங்களும், நடிகர்—நடிகைகளும் பொறுக்கப்பட்டுள்ளனர். இறுதித் தேர்வு பின்னல் நடக்கும். பின்கண்ட படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ''தி கண்ட்ரி கேர்ல'', ''தி கெய்னி ம்யூட்டினி'', ''த்ரீ காயின்ஸ் இன் தி பவுண்டன்'', ''ஸெவன் பிரைட்ஸ் பார் ஸெவன் பிரதர்ஸ்''. சிறந்த நடிகர்கள்: பிங் கிராஸ்பி, மார்லன் பிராண்டோ, ஹம்ப்ரி போகார்ட், டான் ஓ ஹர்லினி. சிறந்த நடிகைகள்: கிரேஸ் கெல்லி, ஆட்ரே ஹெப்பர்ன், ஜேன் வைமன், டோரோதி டாண்டிரிட், காஜூடி கார்லண்ட்.

### ஸினி டெக்னீஷ்யன்கள் கூட்டம்

ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் சார்பில், இந்த மாதம் 6ம் தேதி, மேக்கப் நிபுணர் ஹரிபாபு வீட்டில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது, ''காந்திபாத்'' என்ற படத்தைத் தயாரித்துள்ள டாக்டர் அலெக்ஸாண்டர் மார்க்கி, ''இந்தியப் படங்களும் உலகமும்'' என்பது குறித்துப் பேசினர்.

### கலாபிமானிகள் கழகம்

சென்ற மாதம் 13ம் தேதி திண்டுக்கல் கலாபிமானிகள் கழகக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அது சமயம் நிர்வாகக் கமிட்டி நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட விஷயம் தீர்மானிக்கப்பட்டது.



''வள்ளியின் செல்வனி''ல் திறம்பட நடிக்கும் சுப்பய்யாவும், மாஸ்டர் முரளியும். இந்தப் பையன் பிரபல கலாஸாகரம் ராஜகோபால் அவர்களின் புத்திரன்.

திண்டுக்கல் கிளைக் கழக ஆரம்ப விழாவிற்கு ஒரு பிரபல நடிகரின தலைமையின் கீழ் (கலாபிமானிகள் கழக நிதிக்காக) திண்டுக்கல் அமெச்சூர் நாடக சபையினரின் ''அன்பின் எல்லை'' என்ற நாடகத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### தடை செய்ய மகஜர்கள்

''தூக்குத் தூக்கி'' படத்தில் ''ஆனந்தக் கோனரே, அறிவு கெட்டுத்தான் போனரே!'' என்று ஒரு பாட்டு வருகிறது. அது 'யாதவ மக்களை இழிவு படுத்துவதாக இருக்கிறது' என்றும் அந்தப் பாட்டுக்குத் தடை விதிக்க வேண்டுமென்றும் கோரி மூதன் மந்திரியிடம் சென்ற மாதம் யாதவப் பிரமுகர்கள் ஒரு மகஜரை சமர்ப்பித்துள்ளனர். அப்படித் தடை செய்யப் படாவிட்டால் யாதவ மக்கள் போராட்டம் துவக்க

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]






# காட்சிகள்





காால்களில் எண்ணெய் தடவி உருவிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். நண்பர் தாமோதரம் வந்தார். "என்ன ஸார், காங்கிரஸ் கண்காட்சி எப்படியிருந்தது ஸார்" என்று கேட்டார்.

"என்னைக் கேட்பதைவிட என் கால்களைக் கேளுங்கள் மிஸ்டர்" என்று கூறினேன். நண்பர் விஷயம் புரியாது திகைத்தார். விளக்கினேன் விஷயத்தை.

கடந்த பல ஆண்டுகளாகச் சென்னையில் இக்கண்காட்சி நடைபெற்று வருகிறது. என்றாலும், இவ்வருஷத்தைப் போல் அவ்வளவு பிரம்மாண்டமாக எப்பொழுதுமே இருந்ததில்லை அறுபதாவது காங்கிரஸ் மகாநாடு இவ்வருஷம் ஆவடியில் கூடியதை முன்னிட்டு கண்காட்சியும் விச்வரூபம் எடுத்திருந்தது. ஒரே நாளில் அதை முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பியவர்கள் இருக்க முடியாது. அப்படிச் சுற்றினால் அவர்கள் என்னைப் போல் கால்களைப் பிடித்துக் கொள்ளாமல் என்ன செயவார்கள்.





முப்பது ஏக்கர் நிலப் பரப்பிலே பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த இவ் வருஷக் கண்காட்சியிலே ஆயிரத்துக்கு மேற்பட்ட ஸ்டால்கள் இருந்தன. இதில் கிட்டத்தட்ட பாதி ஸ்டால்களை இந்தியாவின் பலவேறு ராஜ்ய சர்க்கார்களும் எடுத்துக் கொண்டிருந்தனர். டாட்டா, ஏ. ஸி. ஸி. சிமெணட், சேஷஸாயி குருப், டி. ஐ. சைக்கிள் கம்



# காட்சியே!






பெனி, டீ போர்டு இப்படியாக இந்தியாவிலுள்ள மிகப் பெரிய தொழில் ஸ்தாபனங்கள் பலவும் இவ் வருஷம் பங்கெடுத்துக் கொண்டன.

பல ராஜ்ய சர்க்கார்களும் கலந்து கொண்டனர் என்றாலும் சென்னை சர்க்கார் பகுதி மற்றவைகளை விட உயர்வாகத்தான் இருந்தது. கல்வி, போலீஸ், தபால், வர்த்தகம், ஹைவேஸ், டிரான்ஸ்போர்ட் இப்படி சர்க்காரின் பல்வேறு இலாகாக்களும் அங்கு இடம் பெற்று அதைச் சிறப்பித்தன. 'டிரான்ஸ்போர்ட்' ஸ்டாலை ஒரு பெரிய பஸ்ஸைப் போலவே அமைத்திருந்தார்கள்.

சர்வோதயப் பகுதி என்று ஒரு பகுதியைத் தனியே ஒதுக்கியிருந்ததும் குறிப்பிடத் தக்கது. அங்கே இந்தியாவின் பல குடிசைத் தொழில்களும் இடம் பெற்றிருந்தன.

''இதென்ன கோயில்?'' என்று எண்ணச் செய்யும் முறையில் அலங்கரிக்கப்பட்ட ஸ்டாலுக்குள் நுழைந்தேன். இன்முகத்துடன் வரவேற்றார் டி. எஸ். ஆர். ஸ்டாலைச் சேர்ந்த ஆசாமி. ஊதுபத்தி முதல் அவர்கள் தயாரிப்புகளெல்லாம் ''வாங்க வாங்கு'' என்று சொல்லும் முறையில் அங்கு அழகாக அலங்காரமாகக் காட்சி அளித்தன.

'எங்கள் ஸ்நோவைப் பூசிக்கொண்டால் குளுமையாக இருக்கும்' என்று கூறுகிறது ''ரெமி ஸ்நோ''. அவர்கள் ஸ்டாலை உள்ளே நுழைந்ததுமே ஒரு ஜிலு ஜிலுப்புத்தான் ஏற்பட்டது.



ஒரு நிமிஷம் நின்று "சபாஷ் ரெமி ஸ்நோ" என்று சொல்லி விடுத்தான் மேலே போகத தோன்றியது.

அடடே, அதென்ன ஸ்டாலே மறைத்துக் கொண்டு ஒரே பெண்கள் கூட்டம் என்று ஆச்சரியத்தோடு ஒரு ஸ்டாலே நோக்கி ஓடினேன். சரிதான்! எவர்ஸில்வர் பாத்திரக் கடையா? ஸ்பூன் முதல் தொட்டில் வரை எவர்ஸில்வரில் பல பல வகைகளும் உள்ள எம். ஏ. எதிராஜுலு நாயுடுவின் கடையில் கூட்டம் நிரம்பி வழியக் கேட்பானேன். எனக்குத் தோன்றியது ஒரு புதுமொழி. பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல் என்பதைவிட எம். ஏ. எதராஜுலு நாயுடு கடையை மங்கைகள் மொய்ப்பது போல் என்று சொன்னல்தான் என்ன? இந்த ஸ்டாலில், இவர்கள் புதிதாக விற்பனைக்குத் தயாரித்திருக்கும் (விறகு, கறி, மின்சாரம் எதுவுமே இல்லாமல்) சூரிய ஒளிமூலயே சமையல் செய்யும் குக்கர் வைக்கப்பட்டிருந்தது. பெருங்காய வாஸனை மூக்கைத் துளேக்க அப் பக்கம் திரும்பினுல் எஸ். ஆர். பெருங்காயம் கம்பெனியின் ஸ்டால் கண்ணில் பட்டது. அவ்வழியாகப் போகும் யாரும் குறைந்தது ஒரு பலம் பொட்டலம் ஒன்ருவது வாங்காமல் அதைத் தாண்டிப் போகக் காணேம். வேறெருபுறம் இருந்த எல். ஜி. பெருங்காய ஸ்டாலும் கூட பலரைக் கவர்ந்திழுத்தது.

"வாங்கோ ஸார் வாங்கோ" என்று இன்முகத்துடன் வரவேற்கும் கே. டி. ஆர். பிரதிநிதி ம. வரதராஜனது வரவேற்பே ஒரு தனி ரகம்தான். கவிதை பாஷையிலே பேசியபடி கே.டி.ஆர். சரக்குகளைப்பற்றி விளக்கி ஒரு வாஸனைக்காகிதத்தையும் அனைவர் பையில் திணித்து விட்டார். அடேயப்பா, அந்த வாஸனையே வாஸனை தான்! அவர்களது சரக்குகளின் உயர்வை விளக்க அது ஒரு சிறந்த ஸாம்பிள் தான்!

"ஐயா கணக்கப் பிள்ளை, பார்த்தீரா? நீருமதான் இருக்கிறீர் அஞ்சும் மூணும் ஏழுனு கணக்குப் போட்டுக்கிட்டு" என்று யாரோ பேசும் குரல் கேட்டு அப் பக்கம் போனேன். அங்கு கிளி ஒன்று கணக்குப் போட்டுக் காட்டும் அதிசயத்தைப் பலரோடு நான் பார்த்துக் களித்தேன்.

'இனிமேல் என்னல் ஒரு அடிகூட எடுத்துவைகக முடியாது என்று என் கால்கள் சத்தியாககிரஹம் பண்ணியபோது டீ போர்டு ஸ்தாபனத்தாரின் மணம் கமழும் டீ அங்கே இழுத்தது. அவர்கள் 'பவிலியனி'ல் உட்கார்ந்து ஒரு கப் டீயை உள்ளே தள்ளினதும்தான் எவ்






வளவு. ஆறுதலாக இருந்தது. அது மட்டுமா? மேற் கொண்டு சுற்றிப் பார்க்க ஒரு தெம்பை யும் அல்லவா கொடுத்து விட்டது தேயிலை பானம். "வாழ்க டீ போர்டு" என்று வாழ்த்திக் கொண்டே நடையைக் கட்டினேன்.




கம்பீரமாகத் தோற்றமளிக்கும் டாட்டா மண்டபத்தில் நுழைந்ததும் அவர்கள் தயாரிப்புகளைப்பற்றி நாம் நன்ருகத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஏ. ஸி. ஸி. செமெண்டு பகுதியிலுள்ள பிரதிநிதி செமெண்டு தயாரிப்பு முறையை வருகிறவர்களுக்கு விளக்குருகிர். பளிச்சென்ற ஒளி விளக்கு அமைக்கப்பட்ட சேஷஸாயி குருப் ஸ்டாலைப் பார்க்காமல் ஒருவர் கூடத் தவறவிட்டிருக்க முடியாது.

"கலைத் தொண்டே பெரிது எனக் கொண்ட பானு பிரதர்ஸார், இவ்வருஷக் கண்காட்சிமூலம் மேலும் ஒரு படி தங்கள் புகழை உயர்த்திக் கொண்டுள்ளனர். அவர்களது காந்தி கண்காட்சியைப் பார்க்காதவர்கள் துரதிருஷ்டசாலிகள் தான். காந்திஜி போர்பந்தர் நகரில் பிறந்தது முதல் அமரர் ஆனது வரை அவரது வாழ்க்கையின் பல சம்பவங்களும் இங்கே சித்திரங்களாக இருந்தன. இது விசேஷ அம்சம் என்ருலும் இது தவிர, திருக்குறள் விளக்கச் சித்திரங்கள், தமிழன் வீரம், ஆகிய பல சித்திரங்களும்கூட இருந்தன.

"வா(ரு)மூங்கோ (ஸா)ஷார்" என்று வாய் நிறையத் தாம்பூலமும் புன்னகை வதனமுமாக வரவேற்கும் வி. எம். சுப்ரமண்யத்தின் அன்பு உபசரிப்பை ஏற்று அங்கு போனல் நாக்கில் ஜலம்தான் ஊறுகிறது. எண்ணெய் மிதக்கும் அவர் தயாரிப்பான லோடஸ் ஊறுகாய்கள், பாட்டில்களில் இருக்கும் போதே இந்த நிலை! ஸ்பூனில் எடுத்துக் கொடுதத ஸாம்பிளை ருசி பார்த்து விட்டு ஒரு பாட்டில் வாங்கிக்கொண்டு போகாதவர்கள் ருசி தெரியாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதை அடுத்திருந்த ஹோமியோபதி ஸ்டாலுக்குள் போனல் டாக்டர் வி. ஆர். மூர்த்தி கலையைப் பற்றித்தான் நம்மிடம் பேசினர். ஆனல் அவர் அஸிஸ்டெண்ட் கே. வீராசாமியிடம் ஹோமியோபதி வைத்தியம் எவ்வளவு மலிவானது நல்லது என்பதை நாம் தெரிந்து கொள்ளாமல் போய்விட முடியவில்லை.

அழகாக அமைக்கப் பட்டிருந்த 'ஓரியண்டல் பாம்', 'பமைா பிளேடு' ஆகிய ஸ்டால்களும் அடுத்து அடுத்து இருந்துகொண்டு மக்களைக் கவர்ந்திழுத்தன. இதற்கு சமீபத்தில்தான் "பிரஸிடென்ட்." ஹேர் ஆயில் தயாரிப்பாளர்களின் ஸ்டாலும் அமைந்திருந்தது. கங்கா ஒர்க்ஸின் "நீபா" ஹேர் ஆயில் ஸ்டால் அதிக ஆடம்பரமில்லாமல், கவர்ச்சிகரமாக இருந்தது.

ஆர். எம். எஸ். கம்பெனியாரின் ஸ்டாலுக்கு வந்ததும் கால்கள் மேலே செல்ல மறுத்தன.






அவர்களது பிரசித்தி பெற்ற 'போனிக்ஸ்' விசிறிகள் கிளப்பிய குளிர்ந்த காற்றை அனுபவித்து விட்டுத்தான் மேலே அடி எடுத்து வைத்தேன்.

இந்த வாயு ஜாலத்திலிருந்து விடுபட்ட என் கண்களில், கண்காட்சிக் குட்டையில் நடந்து கொண்டிருந்த ஜல ஜால வேடிக்கை தென்பட்டது. பிரசித்தி பெற்ற "சந்திரா பம்ப்" தயாரிப்பாளர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். பல பீச்சாங் குழாய்கள் தண்ணீரைப் பல கோணங்களிலிருந்து வாரி இறைத்தது கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது. "ஐடெக்ஸ்" கண் மை ஸ்டாலையும் பெண்கள் கூட்டம் சூழ்ந்து திக்கு முக்காடச் செய்தது.





கண்காட்சி மிக வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டது. ஏற்பாடுகளெல்லாம் அழகாகச் செய்யப் பட்டிருந்ததற்கு நிர்வாகிகள் பாராட்டப்பட வேண்டியவர்களே. ஆனால், கண்காட்சியிலே பங்கு கொண்ட பல ஸ்தாபனத்தாருக்கும் ஒரு அதிருப்தி இருக்கத்தான் செய்தது. பலர் அதை என்னிடம் குறிப்பிடவும் செய்தார்கள். அவர்கள் குறை இதுதான்: ஜனங்கள் அனைவரும், "பார்க்க வேண்டியது நிறைய இருக்கிறது" என்ற எண்ணத்தில் ஸ்டால்களைப் பரபரப்பாகப் பார்த்துக் கொண்டு போனார்களே தவிர, நின்று நிதானித்துப் பார்க்கவே யில்லை.


இவ்வளவு பெரிய கண்காட்சிக்கு இவ் வருஷம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொழுது போக்கு அம்சம் போதிய அளவில் இல்லை. மேடை அலங்காரமாக அமைக்கப் பட்டிருந்தது. நடனம், நாடகம் எல்லாம் நடந்தன. ஆனால் என்ன காரணத்தாலோ கடந்த வருஷங்கள் மாதிரி இவ் வருஷ நிகழ்ச்சிகள் ஜனங்களைப் பெருவாரியாகக் கவரவில்லை. கண்காட்சிக் கமிட்டியினர் இவ் விஷயத்தில் கவனம் செலுத்தி யிருக்கலாம். **"கோகுலன்"**

**போட்டோக்கள்: வி. கோபாலகிருஷ்ணன்**

---

### புரட்சிக் கண்காட்சி

அமெரிக்க விளம்பர இலாகா புத்தக சாலையில், "அமெரிக்கப் புரட்சி" என்ற ஒரு கண்காட்சியை சென்ற மாதம் 20ம் தேதி, டாக்டர் ஆர். எம். அளகப்ப செட்டியார் ஆரம்பித்து வைத்தார். அமெரிக்க விளம்பர இலாகா பொது விவகார அதிகாரி பி. ஸி. ஷெர்பர்ட பொருட்காட்சி குறித்து விளக்கினர். இக் கண்காட்சியை சென்ற மாதம் 28ம் தேதி வரை பலரும் இலவசமாகக் கண்டு களித்தார்கள்.





"எல்லாம் இன்ப மயம்" படத்தில் ராஜசுலோசனா

# "வெண்மையான, சுத்தமான லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிருர்

பி. எஸ். ஸரோஜா




இந்தியாவில் தயாரித்தது.

லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான, மிக மென்மையான நுரை உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. பி. எஸ். ஸரோஜா கூறுவதாவது: "இந்த வெண்மையான, சுத்தமான சோப்பை வழக்கமாக உபயோகிப்பது உங்கள் சருமத்திற்கு குறிப்பிடத் தக்க மாறுதலை அளிக்கிறது. அதன் ஆழப்புகுந்து சுத்தம் செய்யும் நுரை உங்கள் சருமத்தை மலரிதழ் போல் மென்மையாகவும், அழகாகவும் இருக்கச் செய்கிறது."



முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

**புதிய பெரிய சைஸிலும்**

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

"... அதனுல் தான் என் வதனத்திற்கு எப்பொழுதும் லக்ஸ் டாய்லட் சோப்பின் பாதுகாப்பை அளிக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 423-50 TM

# "அம்பி ஷூட்டிங் பார்க்கிறன்"

அன்று காலை மணி எட்டு அடித்திருக்கும், "ஸார்" என்ற குரல் கேட்டு வீயிற்புறம் நோக்கியிருக்கும் ஜன்னல் மூலம் திரையை விலக்கி எட்டிப் பார்த்தேன். தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு அம்பி புன்னகை புரிந்தான். "நான் ரெடி ஸார், வண்டிவர சமயமாயிற்றே" என்று எனக்கு எச்சரிக்கை செய்தான். "சரி, வரட்டும்" என்று அவனுக்குப் பதிலளித்துவிட்டு, என்னைத் தயார் செய்துகொள்வதில் முனைந்தேன். சிறிது நேரத்துக் கெல்லாம் 'ஹாரன்' சப்தம் கேட்டது. அம்பியை அழைத்துக் கொண்டு, வண்டியிலேறினேன். வண்டி விர்ரெனப் புறப்பட்டது, பிரபல ஸ்டுடியோ ஒன்றை நோக்கி.

வண்டியை விட்டிறங்கியதும் ஒரு சிறு கதவு அமைக்கப்பட்டு உள்ளே போவதற்குரிய வழியாக இருந்த ஒரு கட்டடத்தினுள் பிரவேசித்தேன். அம்பி என்னைப் பின் தொடர்ந்தான். 'இது என்ன ஆபீஸ்' எனக் கேட்டான். "இதுதான் **விசாரணை ஆபீஸ்**. ஸ்டுடியோ என்றால் படப் பிடிப்பு நிலையம் என்று முன்பே கூறியுள்ளேன். வேலைகள் உள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்கும். வேலைகளைத் தடை செய்யக் கூடாது. அனாவசியமாக அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது. ஸ்டுடியோ கவர்ச்சி மிக்க ஒரு காட்சி சாலை என்று கூடச் சொல்லலாம் அதைப் பார்வையிடப் பலருக்கும் உன்னைப் போலவே ஆசையிருக்கும். வேலை செய்வோர்களது உறவினர்கள் அடிக்கடி வர நினைப்பார்கள். பார்வையாளர்கள் என்ற ரீதியில், உறவினர்கள் ஓரிருவர் வந்தால் பரவாயில்லை. எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்கள் ஒருவர், இருவர் எனப் படை எடுத்து, கும்பல் கும்பலாக ஸ்டுடியோவைப் பார்க்க வந்ததால் படப்பிடிப்புக்கு இடைஞ்சல் ஏற்படும். இம் மாதிரியும், மற்றும் வேடிக்கை எனக் கருதி வரும் பலர்களுக்கும், உண்மையிலேயே சில விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ண முடையவர்களுக்கும், தேவையானபடி தகுந்த பதிலைச் சொல்லி தகவல் தருவதற்கான ஆபீஸ் இது.

"இந்த விசாரணை ஆபீஸ் அதிகாரிகளுக்குப் பொறுமை அவசியம் வேண்டும். வந்தவர்களுக்குத் தகுந்த முறையில் பதில் சொல்லி அனுப்பவேண்டும். இவர்கள் சரிவர நடந்து கொள்ளாவிட்டால், அந்த நிலையத்துக்கே கெட்ட பெயர் வரும். பல சமயங்களில் இவர்கள்தான் ஸ்டுடியோக்களுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்று கூடச் சொல்லலாம். ஸ்டுடியோவுக்கு வந்தவர்களின் விவரத்தை அறிந்து கொண்டு தகுந்த முறையில் தகவல் தெரிவித்து உபசரிக்க வேண்டும், பதில் அளிக்கவேண்டும். 'சிடுமூஞ்சி துவார பாலகர்களா'க இவர்கள் இருந்தால் அந்த ஸ்டுடியோ ஒருகாலும் நல்ல பெயரை அடையாது. ஆனால், அதே சமயத்தில் வேலையில் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும். அவசியமற்ற பேர்வழிகளையும், வேலைக்கு இடைஞ்சல் விளைவிப்பவர்களையும், சம்பந்தமற்ற கும்பலையும் படப் பிடிப்புக்குப் பாதகம் விளைவிக்காதபடி தடுக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே நடந்தேன். அம்பி கவனமாகக் கேட்டபடி பின் தொடர்ந்தான்.

அம்பி, 'அது என்ன' என்று கேட்டான் ஒரு கட்டடத்தைக் காட்டி. "அது ஸ்டுடியோவின் நிர்வாக ஆபீஸ்" என்றேன். பக்கத்திலுள்ள

மற்றொரு சிறு கட்டடத்தை அம்பி குறிப்பிட்டுக் காட்டினான். "அது கதாசிரியர்கள், டைரெக்டர்கள், உதவி டைரெக்டர்கள் முதலானோர் தங்கும் அறைகள். கதை உருவாகும்போது நடைபெறும் விவாதங்கள், திரைக் கதை-வசனம், மற்றும் பல நடப்பது இக்கட்டட அறைகளில்தான். சில ஸ்டுடியோக்களில் கதை இலாகா என்று தனியாகவும் வைத்திருக்கிறார்கள்."

"இப்பொழுது புரிகிறது" என்றான் அம்பி.

"என்ன ?" என்று இடைமறித்துக் கேட்டேன்.

"இந்த இலாகாக்கள் தயார் செய்யும் கதை ஏன் மட்டமாகப் போய்விடுகிறது எனப் பலநாள் யோசித்தேன். ஜன்னல்கள் அதிகமிருக்கின்றன. கற்பனை காற்றிலே பறந்து போய் விடுகிறது போலிருக்கிறது........" என அதிகப் பிரசங்கம் செய்தான் அம்பி. அவனை வாயை மூடிக்கொண்டு பேசாமல் வரும்படி சொன்னேன்.

அவன் சிரித்துக் கொண்டே பின் தொடர்ந்தான். ஒரு கொட்டகை போலிருந்ததைக் காட்டி அது என்ன என்று கேட்காமலே, "அதுதான் படம் போட்டுப் பார்க்கிற இடமா, ஸார்" என்றான்.

" ஆமாம் " என்றேன். " அதைக் கடைசியில் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி வலது புறமாகத் திரும்பினோம்.

பாதை ஓரமாக நடந்து சென்று ஒரு கட்டடத்துக்குள் நுழைந்தேன் அம்பியுடன். அம்பி ஆச்சரியம் மேலிட்டவனாக, அங்குள்ள பல கண்ணாடிகளில் தன் உருவம் தெரிவதைப் பார்த்தான். இதுதான் "மேக்கப் அறையோ?" என்று அவனாகவே கேட்டான். "ஆம்" என்று நான் தலை அசைத்தேன். அப்பொழுது ஒரு உப நடிகருக்கு மேக்கப் செய்து கொண்டிருந்தார்கள். அவர் முகம் சிகப்புப் பௌடரால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்த அம்பி கேட்டான் "இவருக்கு எதற்காக முகத்தில் சிவப்புச் சாயம் பூசியிருக்கிறார்கள்" என்று.

"படத்தில் நடிகரின் உருவம் நன்கு ஒளிப்பதிவாக வேண்டும் அல்லவா?


புத்தி தன் சுய நிலையிலிருந்து தவறிவிட்டால் **பைத்தியம்** என்கிறோம்.

அவ்வித நிலையிலிருந்து குணமடைய

## நவரத்ன கல்பம்

ஓர் இன்றியமையாத சஞ்சீவி.

★ உடை, பழக்கவழக்கங்களில் புதுமை
★ வெற்றுப் பார்வை
★ கவலையும் பீதியும் கொண்ட தோற்றம்
★ ஞாபகச் சக்தியின்மை
★ எதையும் புரிந்துகொள்ள முடியாமை
★ தன்னடக்க மின்மை
★ மாயை, ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்வது, பிரமை.

இவைகளே சித்தசுவாதீனம் தவறிவிட்டதற்கான அறிகுறிகளாகும்

இவைகளை முளையிலேயே கிள்ளிவிட

**வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம் முத்து, பவழம், கோமேதகம், வைடூரியம்**

முதலிய ஒன்பது உயர்ந்த கற்களின் சேர்க்கை கொண்ட

# நவரத்ன கல்பம்

எனும் உலகப் பிரசித்தமான மருந்தை உட்கொள்ளுங்கள்



கவிராஜ் பண்டிட்
**துர்க்காதத்த சர்மா**
வைத்தியவாசஸ்பதி
அவர்களால்
கண்டு பிடிக்கப் பட்டது.

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும் :

**THE MANAGER:**

**NAVRATNA KALPA PHARMACY**

**JULLUNDUR CITY (India)**

**Grams: 'NAVRATNA'** **Phone: 401**



**பிரின்ஸிபல் பிக்சர்ஸார் தயாரித்து வருவது "வெறும் பேச்சல்ல" படம்தான்! அதில் பத்மினிதான் பிரதம பாகத்தில் தோன்றி நடிக்கிறார்.**

உடல் பாகம், உடைகளினால் மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் முகம் நன்கு பதிய வேண்டுமானால், அதாவது, போட்டோ தெளிவாக இருக்க வேண்டுமானால், நடிகர் கதைக்கு ஏற்றபடியும், கதையின் காலத்துக்கு ஏற்றபடியும், ஒளிப் பதிவுக்கு ஏற்ற முறையிலும் 'மேக்கப்' இல்லாமல் படம் எடுக்கப்பட்டால் உருவத் தோற்றம் தெளிவாக இராது. செய்திப் படங்களில் கும்பல் காட்சிகளில் வருபவர்கள் எப்படிக் கரேலெனக் காட்சியளிக்கிறார்களோ, அது மாதிரி தெளிவில்லாது இருக்கும். சாதாரணமாக நாம் எடுத்துக்கொள்ளும் போட்டோவைக்கூட 'மேக்கப்' செய்து கொண்டு எடுத்தால் அது நன்றாகத் தான் இருக்கும். முகம் நன்கு இருக்க, படத்தில் தெளிவாகப் பதிய, 'மேக்கப்' மிகவும் உதவுகிறது.

"மேக்கப்"பில் பலவிதங்கள் உண்டு. நம் நாட்டில் அநேகர் தேர்ச்சி பெற்று விளங்குகிறார்கள். ராக்ஷஸர்கள், பயங்கரக் கதாபாத்திரங்கள், கிழவன்–கிழவி மற்றும் குறிப்பிட்ட வர்ணனைகளுக்குள்ளான கதாபாத்திரங்களின் அலங்காரங்களைச் செய்ய மேக்கப் சிறந்த சாதனம். குமரனைக் கிழவனாக்கவும், கிழவனைக் குமரனாக்கவும் முடிகிறது" என்றேன்.

அம்பி, கவனித்துக் கேட்டுக்கொண்டே வந்து, "வாஸ்தவம் ஸார்" என்றான். பிறகு அவனை அழைத்துக் கொண்டு, மறு அறைக்குச் சென்றேன். அங்கே, பலவித நிறங்களில் உடைகள் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தான், கிரீடம், மணி, வாள், வளையல்கள். நகைகள, பாதரட்சைகள், உடைகள் முதலியவைகள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்ததைக்கண்டான். "ஏன், ஸார், எல்லாம் கலரில் இருக்கிறது?" என்றான். "காமிராவுக்காக வேண்டி அப்படி அவைகள் பலவித வர்ணங்களில் தயாரிக்கப்பட்டுள்ளன. மஞ்சள் நிற வேஷ்டி அணிந்தால்தான் படத்தில் வெள்ளை நிறமாகத் தெரியும்" என்றேன்.

"ஆமாம், ஞாபகமிருக்கிறது ஸார், எங்க பள்ளிக்கூடத்திலே 'குரூப்' போட்டோ எடுக்கற போது, கவனமாக கலர் சட்டை போட்டுகிட்டு வாங்க. வெள்ளை சட்டை வேண்டாம்னு சொன்னாங்க" என்று ஞாபகமாகக் கூறிமுடித்தான் அம்பி.

அவைகளை எல்லாம் பார்த்து விட்டு, அம்பியை வேறு ஒரு கட்டடத்துக்குள் அழைத்துப் போனேன். அவன் கேட்காததற்கு முன்பே, அவனுக்கு

அது ஒலிப் பதிவாகும் இயந்திரமுள்ள இடம் என்று சொன்னேன். சற்றுப் புரியாத முறையில் இருந்தானென்பது அவன் என்னைப் பார்த்த பார்வையில் தெரிந்தது. "பாடல் பதிவு செய்யப்பட்டால், இந்தத் தியேட்டருக்குள், பாடுபவரும், வாத்ய கோஷ்டியினரும் இருப்பார்கள். சங்கீத டைரெக்டர் பயிற்றுவித்தபடி, பாடுபவர் பாட, வாத்திய கோஷ்டியினர் தாங்கள் உபயோகிக்கும் வாத்தியங்களை வாசிப்பார்கள். இவர்களின் ஒலிகளைப் பதிவு செய்ய 'மைக்' வைக்கப்பட்டிருக்கும். பாடுபவருக்கு ஒரு 'மைக்', வாத்தியங்களுக்கு ஒரு மைக் என வைக்கப்படும். சில சமயம், பிரத்தியேகமாக சில வாத்தியக் கருவிகளின் நுட்ப ஓசையைப் பதிவாக்க, அதற்கென 'மைக்' வைக்கப்படும். இந்த மைக்குகள் சப்தத்தைக் கவர்ந்திழுத்துப் பதிவு செய்யும் இயந்திரத்திற்கு அனுப்ப உதவுகின்றன. இந்த மைக்குகள் மூலம் இயந்திரத்திற்கு வரும் ஒலிகளை ஒலிப்பதிவாளர் ஒன்று சேர்த்துப் பதிவு செய்வார்" என்றேன்.

"இதைப்பற்றிப் பிறகு நீங்கள் விவரமாய் சொல்லுங்க, ஸார். இப்போ ஸ்டுடியோவுக்குப் போலாம், ஸார், ஷூட்டிங் பார்க்க" என்று என்னைத் தொந்தரவு செய்தான். அவன் ஆவலுக்குத் தடை போட விரும்பாதவனாக, அவனை அங்கிருந்து அழைத்துக் கொண்டு ஒரு கட்டடத்துக்குள் சென்று மாடிப்படி வழியாக மேலே ஒரு சிறு அறைக்குள் சென்றேன்.

அங்கே, டப்பாக்களில் பிலிம் சுருணைகள் இருந்ததையும், ஓரிருவர் கத்தரிக்கோலும் பிலிம் சுருணையும் கையுமாக இருந்ததையும் பார்த்த அம்பி, என்னை ஒரு தரம் பார்த்தான். "இதற்குத்தான் 'எடிட்டிங் ரூம்" என்று பெயர். அச்சாபீஸ்களில் பைண்டிங் பகுதி இருப்பதுபோல ஷூட்டிங் ஆன படத்தை வெட்டி ஒட்டி, உருவாக்குகிற இடம் இது" என்றேன். அங்கு ஒருவர் படச் சுருணை ஒன்றை ஒரு வட்டத்தில் மாட்டி, ஒரு இயந்திரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தார். சப்தம் கேட்டது; பாடியது. அம்பி "அது என்ன ஸார்!" என்று கேட்டான். இதை ஒரு "குட்டி சினிமாத் தியேட்டர்" என்று சொல்லலாம். இதற்குத்



தான் "மூவியோலா" என்று பெயர். ஷூட்டிங் முடிந்த காட்சிகளைப் பெரிய தியேட்டர்களில் அடிக்கடி போட்டுப் பார்ப்பதென்பது முடியாத காரியம். இந்த 'மூவியோலா' செய்வது, பெருத்த நன்மை. எடுத்த படத்தின் ஒலியைப் படத்துடன் சேர்க்க இது பெரிதும் உபயோகமாகிறது. எடிட்டிங் தொழிலுக்குப் பெரிதும் உதவுகிறது. மொழி மாற்றி, 'டப்' செய்வதற்கும், நடிகர்-நடிகை-குரல் மாற்றத்துக்கும் பின்னணி பாடலைப் பொருத்துவதற்கும் இந்த இயந்திரம் அத்தியாவசியமானது" என்றேன்.

"ஆமாம், ஸார். உட்கார்ந்தபடியோ, நின்றபடியோ, அறைக்குள்ளேயே சின்ன சினிமா பார்ப்பதுபோல" என்றான் அம்பி ஆச்சரியத்துடன். "ஒலிப் பதிவைப் பற்றி உனக்குப் பிறகு நிறைய சொல்லுகிறேன்" என்று அம்பியை அறையை விட்டு அழைத்து வந்தேன்.

வெளியே வந்ததும் அவன் நோக்க மெல்லாம் ஒரு பெரிய கொட்டகை மேல் திரும்பியது. அங்கு சிலர் கும்பலாக நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். அது மட்டுமல்ல, நாலைந்து நடிக நடிகைகள் கண்ணைப் பறிக்கும் வர்ண உடையலங்காரத்துடன் கொட்டகைக்குள் நுழைந்தனர்.

"ஏன் ஸார், அதுதான் ஷூட்டிங் நடக்கிற இடம்போலிருக்கிறது"என்று அம்பி என் கவனத்தை இழுத்தான். "பேஷ், உனக்காகவே எல்லாம் தெரிந்து விடுகிறது' என்று நான் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தேன். பிறகு, "இன்னும் இரண்டு இடத்தைப்பார்த்து விட்டு அப்புறம் ஷூட்டிங் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டே ஒதுப்புறமாக உள்ள ஒரு கட்டடத்துக்குள் அழைத்துப் போனேன். அங்கே கிளம்பிய ஓசைகளிலிருந்து அது தச்சுப் பட்டறை என்பதைச் சொல்லாமலே புரிந்து கொண்டான் அம்பி. இதில் அவன் கவனம் அதிகம் செல்லவில்லை. ஆனால் அடுத்தபடி நாங்கள பிரவேசித்த சிற்பச்சாலையில் சிறிது கவனம் செலுத்தி, சிலவற்றைத் தொட்டுக் கூடப் பார்த்தான். வர்ணம் தீட்டப்படுவதையும் அவனுக்குக் காட்டினேன்.


ஒரு பெரிய திரையில் காட்சி வரையப்பட்டிருப்பதைக் கண்டு, "ஏன், ஸார், நாடகத்திலே இருக்கிற மாதிரி இந்தப் படுதா எதற்கு?" என்றான்.

"ஆமாம். இவைகளைப் 'பின்னணிக் காக்ஷிகள்' என்று சொல்வதுண்டு. என்னதான் ஸ்டுடியோவில் நிர்மாணித்தாலும், ஒரு மாடியிலிருந்தோ, ஜன்னல் மூலமாகவோ, தொலைவில் தெரியும் காக்ஷிகளைக் காட்ட, அவ்வளவு வீடுகளையோ, மரங்களையோ அசலாகச் செய்து வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதில் பயனில்லை. ஆகவே, இந்தப் பின்னணிக் காக்ஷிகள் திறமையாக வரையப்பட்டு, 'செட்டிங்'கின் பின்புறத்தில் வைக்கப் படுகின்றன. ஒளிப்பதிவாளர் நல்ல முறையில் இவைகளை உபயோகித்துக் கொண்டால், இவை வரையப்பட்ட காட்சிகளாக இல்லாமல் அசல் காக்ஷிகளாகவே இருக்கும்" என்றேன். "ஆமாம், ஸார், இப்பொழுதே இவை அசல் காட்சிகளாகவே தெரிகின்றனவே" என்று சொன்னான் அம்பி.

"மேக்கப் மாதிரி, கம்பம் எல்லாவற்றிற்கும்கூட சிகப்பாக இருக்கிறதே வர்ணம்" என்று கேட்டு வைத்தான் அம்பி. "ஆமாம், ஒளிப்பதிவுக்கு ஏற்ற முறையில் வர்ணம் தீட்டப்பட்டிருக்கும்" எனக் கூறினேன்.

அம்பிக்கு சிறிது களைப்பாக இருந்தது போலிருந்தது. அவனுக்கு இருந்ததோ இல்லையோ, எனக்கு, இவ்வளவு பொறுமையாக, அவனுடன் இருந்தது சிறிது களைப்பாக இருந்தது. ஆகையால் களைப்பைப் போக்க காப்பியின் உதவியை நாடினேன். இந்த விஷயத்தைச் சொன்னதும் அம்பி ஆச்சரியப்பட்டான். "ஸார், இங்கே ஓட்டல்கூட இருக்கிறதா"என்றான். "அதற்கு'கான்டீன்' என்று பெயர். ஸ்டுடியோவில் வேலை செய்பவர்களின் செளகரியத்திற்கெனவே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கான்டீன் இல்லாத ஸ்டுடியோக்களில் வெளியிலிருந்து டிபன், சாப்பாடு முதலியவைகளை வரவழைத்துக் கொள்ளுவார்கள். சரி, வா போகலாம்" என்று அம்பியை அழைத்துக்கொண்டு கான்டீனுக்குப் போனேன். அங்கே, ஆளுக்கு இரண்டு போண்டா சாம்பார், காப்பி இவற்றை ஒரு கை பார்த்து விட்டு வெளியே வந்தோம்.

டங், டங், என மணி ஓசை கேட்டது. "ஷூட்டிங் ஆரம்பமாயிடுத்தா ஸார்?"



சென்ற மாத மத்தியில் மாடர்ன் தியேட்டர்ஸார் வெளியிட்டுள்ள ''கதாநாயகி'' தமிழ்ப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், பத்மினி, எம். என். ராஜம் தோன்றும் காட்சி இது.

என்றான் அம்பி. இல்லை "ஆரம்பிக்கிற சமயம்தான், வா போகலாம்'' என்று அவனை அழைத்துப் போனேன். கதவில் 'ஸைலன்ஸ்' போர்டு இருந்ததை அம்பி பார்த்துவிட்டு, பேசாமல் என்னைத் தொட்டு அதைக் காட்டினான். அவனை உள்ளே அழைத்துச் சென்றேன். அந்தப் படமுதலாளி தெரிந்தவராதலால் எனக்கு வணக்கம் தெரிவித்து ஆசனம் கொடுத்தார். அவனுக்கும் ஒரு நாற்காலி கொண்டு போடச் சொன்னேன். அம்பி உட்கார மறுத்துவிட்டு நிற்க ஆரம்பித்தான். அவன் கவனம் அங்கு நின்றிருந்த கதா நாயகன்—கதா நாயகி பேரிலேயே இருந்தது. கண்கொட்டாமல் சிறிது நேரம் பார்த்தான். பிறகு, ''யார் ஸார் டைரெக்டர்?'' என்று கேட்டான். அவனுக்கு டைரெக்டரைச் சுட்டிக் காட்டினேன். உதவி டைரெக்டரையும் அவனுக்குக் காட்டினேன்.

"காமிராமேன்'' என்றான். அவரையும் காட்டினேன், பிறகு காமிராவையும் காட்டினேன். மேலே உள்ள இரண்டு உருண்டைகள் என்னவென்று கேட்டான். "அம்பி, அதற்குப் பெயர் 'மாகஸீன்' என்று சொல்லுவார்கள். அதற்குள் பிலிம் சுருளை இருக்கிறது. இயந்திர சக்தியால் கேமிரா வேலை செய்யும்போது இந்த பிலிம் சுருள் ஒரு உருண்டை டப்பாவிலிருந்து பிரிந்து கொண்டே வந்து மற்றொரு உருண்டை டப்பாவுக்குள் சுற்றிக்கொள்ளும். ஒன்றில் இருப்பது வெற்று பிலிம். அது பிரிந்து கொண்டே வரும்போது ஒளிப்பதிவாகும்; ஒளிப்பதிவான பின் பிலிம் மற்ற டப்பாவுக்குள் சுற்றிக் கொள்ளும். இந்த டப்பாவுக்குள் ஆயிர அடி நீளமுள்ள பிலிம் சுருளை அடைக்கப்பட்டிருக்கிறது. ஆயிர அடிகள் பதிவான பிறகு, இவைகளை இருட்டு அறைக்குக் கொண்டு போய், சுருளையைக் கழற்றி, வேறு டப்பாவிலிட்டு, மூடியிட்டு, ரசாயன அறைக்கு அனுப்புவார்கள்'' என்று கூறி முடித்தபோது, "ரெடி, ஸைலன்ஸ்'' என்ற உத்தரவு கேட்டது. ஒளிப்பதிவாளர் "லைட்ஸ் ஆன்'' என்றார். 'இதற்கு என்ன அர்த்தம்' என்று கேட்கும் பாவத்துடன்



பத்மினி பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பான "முதல் தேதி" என்ற தமிழ்ப் படத்தில் அஞ்சலி சோகரஸத்தின் மூலம் நம்முடைய மனதைக் உருக்கிவிடுவாராம்.

அம்பி என்னைப் பார்த்தான். "விளக்குகளைப் போடச் சொல்லுகிறார்" என்றேன். உடனே விளக்குகள் போடப்பட்டன. பட்டப் பகலெனப் பிரகாசமாக இருந்ததைக் கண்ட அம்பி ஆச்சரியப் பட்டான்.

"ரிஹர்ஸல் ப்ளீஸ்" என்றார் டைரெக்டர். கதாநாயக—நாயகி ஏதோ பேசினர். இதன் நடுவில், காமிராப் பகுதியில் நின்று கொண்டிருந்த ஒருவர், நடிக நடிகை சமீபம் சென்று கையில் எதையோ வைத்துக் கொண்டு "பெரிசு பண்ணு. இன்னும் கொஞ்சம்" என்று சொல்வதைக் கண்ட அம்பி "அவர் என்ன ஸார் பார்க்கிறார்" என்றான். "அது ஒளி அளக்கும் கருவி. வெளிச்சம் இவ்வளவு இருந்தால்தான் ஒளி நன்கு பதிவாகும் என்று ஒரு கணக்கு இருக்கிறது. அதன்படி சரிவர இருக்கிறதா என்று அவர் பார்க்கிறார்" என்றேன். இன்னொரு நபர், காமிராவிலிருந்து "டேப்" ஒன்றை வைத்துக்கொண்டு, நடிக, நடிகையர் இருக்கும் இடத்தை அளந்தார்.

"இது எதற்காக?" என்று கேட்டான் அம்பி.

"ஒளிப்பதிவு நன்கு செய்ய எந்தெந்த தூரத்தில் நடிகர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். சில சமயம், படங்களில் முன் நிற்பவர் நன்றாகவும், பின் நிற்பவர் தெளிவாகத் தெரியாமலிருப்பதையும் பார்த்திருக்கிறாயல்லவா? அம்மாதிரி நேரிடாமல் இருப்பதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். ஒளிப்பதிவு இயந்திரத்திற்கு ஒரு குறிப்பிட்ட தூரம் வரையிலுள்ள பொருள்கள்தான் தெளிவாகப் பதிவாகும். ஒளிப்பதிவு பாஷையில் இதை போகஸ் (Focus) என்று சொல்வார்கள். போகஸில் இருந்தால் தெளிவாகவும் 'அவுட் ஆப் போகஸ்' அதாவது, போகஸிற்கு வெளியிலிருந்தால் தெளிவில்லாமலும் உருவங்கள் பதிவாகும்" என்றேன்.

இதற்குள் "டச்சப்" என்ற சப்தம் கேட்டவுடன், நடிக நடிகையர் தங்கள் 'மேக் அப்' கலையாமல் இருக்கிறதா என்று கண்ணாடியைக் கேட்டு வாங்கி சரி பார்த்துக் கொண்டார்கள். ஒளிப்பதிவாளர் "சரி" என்று சொல்லிவிட்டு "ரெடி பார் டேக்" என்றார் உதவி டைரெக்டர். "அதாவது படம் பிடிக்கத் தயார் என்று சொல்லுகிறார்" என்று அம்பிக்கு விளக்கினேன்.


"'மைக்'கைக் கொஞ்சம் இப்படித் திருப்பு" என்று சொல்லிக் கொண்டே ஒருவர் வந்தார். "இவர் யார்?" என்று கேட்டான் அம்பி. இவர்தான் சப்தத்தை—அதாவது வசனத்தைப் பதிவு செய்யும் ஒலிப்பதிவாளர் என்றேன். அம்பி, "ஆமாம். அதோ தலைக்குமேலே கம்பியிலே ஏதோ தொங்கவிட்டிருக்கிறார்களே. அது என்ன?" என்று கேட்டான். "அதுதான் 'மைக்' என்ற கருவி. நடிக-நடிகையாரின் வசனம் இதன் மூலம்தான் பதிவு செய்யப்படுகிறது. நடிக நடிகையரின் நடிப்பை கேமிரா ஒளிப்பதிவு செய்யும் அதே சமயத்தில் அவர்கள் பேசும், அல்லது செய்யும் சப்தங்களை இந்த 'மைக்' கவர்ந்து மின்சார அலைகளாக மாற்றி, அங்கே நாம் முன்பு பார்த்தோமே அந்த ஒலிப்பதிவு இயந்திரத்திற்கு அனுப்பும். அந்த இயந்திரம் இந்த சப்தங்களைத் தனியாக ஒரு பிலிமில் பதிவு செய்யும்.

[தொடர்ச்சி 49-ம் பக்கத்தில்]




"சொல்லுகிறேன்; நான் தேசாந்தரம் புறப்பட்டதும், என்னை வழியனுப்ப கோட்ஸே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார் அல்லவா? ரெயில் புறப்படும் முன்பு, அவர், நான் போகும் இடங்கள், தங்கும் இடங்கள் குறித்து அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நான் அப்பொழுதே எல்லாவிதப் பந்தங்களையும் ஒழித்துவிட்டு, சந்நியாசம் பெற்று, இமயத்தின் சாரலில் குறை வாழ்நாளையும் கழித்துவிட வேண்டும் என்று நிச்சயித்துவிட்டேன். இருந்தாலும், இத்தனை மகத்தான உபகாரத்தைச் செய்துள்ள அந்தப் பெரியவரை உடனே மறந்துவிடலாகாது என்று, ஆரம்பத்தில் சில தடவை, அவர் விரும்பியபடியே, கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தேன். ஒரு கடிதங்கூட விடாமல், அவரும் பதில் எழுதிக் கொண்டிருந்தார். தமது ஒவ்வொரு கடிதத்திலும், குழந்தையின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுவார்; நான் விரக்தி நிலைகலைந்து தம்மை வந்தடைந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவார். இவ்வாறு வந்து கொண்டிருந்த கடிதங்கள் ஒன்றுடன், ஒரு சமயம், திவாகரனையும், யமுனையையும் ஒன்றாக உட்கார்த்தி வைத்து எடுத்த புகைப் படம் ஒன்றையும் எனக்கு அவர் அனுப்பியிருந்தார்......."




"ஆமாம்; எனக்குக்கூட ஞாபகம் இருக்கிறது. நீ வந்துபோன சில மாதங்களுக்குப் பிறகு, அவர் மிகவும் சிரமத்தோடு அவர்கள் படத்தை எடுக்கச் செய்தார். திவாகரனை யமுனாவுடன் உட்கார்த்தி வைப்பதற்கு அன்றைக்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம், தெரியுமா? அந்தப் பிராயத்திலேயே, அவனுக்கு அவள் ஆகாதவளாகப் பட்டு விட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளேன்" என்றேன் நான்.

அண்ணா தொடர்ந்து சொன்னான். "போட்டோவுடன் வந்த கடிதத்தில் கோட்ஸே எழுதியிருந்தார்: 'இரண்டுவித நோக்கங்களோடு இந்தப் புகைப் படப் பிரதியை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். குழந்தைகள் ஈச்வர அம்சம் பொருந்தியவர்கள். அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலமே, மனிதர் எத்தகை துயரத்தையும் மறந்துவிட முடியும். உங்களுடைய மனத்துயரையும், வைராக்கிய நிலையையும் கரைக்க இந்தப் படம் உதவியாக இருக்கும் என்பது என் முதல் நோக்கம். அடுத்ததாக—படத்தில் அமர்ந்திருக்கும் ஜோடியைப் பார்த்தீர்களா? உங்களுக்கு என்ன தோன்றுகிறது? இந்தக் குஞ்சுகளைப் பிற்காலத்தில், இதுபோல் மணவறையில் உட்கார்த்தி வைத்துப் பார்க்க வேண்டுமென்று தோன்றவில்லையா? உங்களுக்கு அப்படித் தோன்



றிலும், தோன்ருவிட்டாலும், எனக்குத் தோன்றிவிட்டது. யமுனை மணப் பிராயத்தை அடையும் மட்டும், திவாகரனை, அவனுக்கு உரியவன் பெற்றுச் செல்லாவிட்டால், அவர்களை நான் தம்பதிகளாக்கியே தீருவேன். நான் பிள்ளைக்குப் பிதாவாகவும், தாங்கள் மணப் பெண்ணின் அப்பாவாகவும், மணப்பந்தலில் சம்பந்திகளாக நிற்கப் போவதை இப்பொழுது நினைத்தாலும் என் மனம் பூரிப் படைகிறது."

"ஆமாம் அண்ணு; சாகும் வரையில் அவருடைய அந்த ஆசை மாறவேயில்லை. நான் முன்பே சொல்லவில்லையா, இறக்கும் முன், அவர்களை இணைத்து வைக்க வேண்டும் என்று என்னைச் சத்தியம் செய்யச் சொன்னுர் என்று. அதைச் சொல்லப் போனபோதுதான், திவாகரன், 'போக்கற்ற உன் மருமானை என் கழுத்தில் கட்டப் பார்க்கிருய்' என்று சொல்லிவிட்டு எங்களைப் பிரிந்து போனுன்" என்று நான் வருத்தத்தோடு கூறினேன்.

"அவனைச் சொல்லக் குற்றம் இல்லை, நர்மதா; அது சூழ்நிலையால் பிறந்த வினை. கிழவர் இறக்கும்போது அவன் சிறுவன். ஆகவே, அவருடைய எண்ணம் அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பிற்காலத்தில் யமுனை உன் சொந்தக்காரி என்பதை மாத்திரம் அவன் அறிந்து கொண்டான். அவனுக்கு உன மீது நம்பிக்கையில்லாது போனதற்கே இதுதான் காரணமாக இருக்க வேண்டும். அப்படிப் பட்ட நிலையில், அவளை மணக்க வேண்டுமென்று நீ கூறியிருக்கிருய். அதை, அவன் மாத்திரம் என்ன? வேறு எவராலும் தவருகத்தான் அர்த்தம் செய்து கொண்டிருப்பார்கள். கடந்ததைப் பற்றிப் பேசிப் பயன் என்ன? இப்பொழுதுதான் அவன் உன் மகன் என்பதற்கு அத்தாக்ஷி கிட்டிவிட்டதே! தாய் என்பதை அறிந்ததும், அவன் உன்னிடம் பாய்ந்து வந்து, கால்களில் விழுந்து, தன் செயல்களுக்கு மன்னிப்புக் கோரப் போகிறுன், பார்."

"ஆதாரம்—ஆதாரம் என்று அளந்து கொண்டிருக்கிருயே தவிர, அது என்ன ஆதாரம் என்பதைச் சொல்லமாட்டேன் என்கிருயே, காசி அண்ணு. ஆமாம், அவர் அனுப்பிய போட்டோவி

விருந்து திவாகரன் என் பிள்ளை என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

"அதுவா? அது எனக்கு உடனே தெரிந்துவிடவில்லை. அது தெரிய எத்தனையோ காலமாயிற்று. கோட்ஸே போட்டோவை அனுப்பினர் இல்லையா? அவர் எழுதியிருந்தபடி, அது ஒன்றும் என் வைராக்கிய நிலையைப் பாதித்து விடவில்லை. உண்மையில் அந்தக் கடிதத்தையும், படத்தையும் பார்த்த பிறகு தான் நான் இன்னும் தீவிர வைராக்கியம் அடைந்தேன். இவரோடு இப்படி, கடிதப் போக்கு-வரவு வைத்துக் கொண்டிருந்தால், நம் மனம் பாசத்தை வேர்-அறுக்கவே முடியாது என்று அன்று தொட்டு அவருக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திக்கொண்டு விட்டேன். அதோடு அருகிலிருந்த ஒரு மடத்துக்குச் சென்று சந்நியாசமும் பெற்றுக்கொண்டேன்.' பிறகு அந்த





நண்பர் :—என்ன ஸார் ; உங்களை ரொம்ப நாளாய் கண்ணிலே காணவில்லை !

நடிகர் :—என்ன ஸார் பண்றது. வெளியே தலை காட்டவேண்டியதுதான். உடனே ஓரேயடியாய் சூழ்ந்து கொண்டுடறுங்க........

நண்பர் :—பிரபல நக்ஷத்திரம்னு சும்மாத்தானு ! ரஸிகர்கள் அப்படித்தான் தொல்லை கொடுப்பார்கள்.........

நடிகர் :—ரஸிகர்களா ! ? ! ?....கடன்காரர்கள்னு சொல்லுங்கோ ?

மடத்தின் நியதிப்படி, என்னுடையது என்றிருந்த துணி-மணிகள், பணம, மற்றுமுள்ள எல்லாச் சாமான்களையும் ஏழைகளுக்கு விநியோகித்துவிட்டு, காஷாயதாரியாக இமயத்தைநோக்கிக் கிளம்பிவிட்டேன்.

அங்கே ஒரு மகானைக் குருநாதராகக் கொண்டு மனசை பந்த பாசங்களில் இருந்து விடுவிக்க முயன்றேன். வருஷங்கள் பறந்தன. ஆனல் என் மனத்திலிருந்த பாச நினைவு மாத்திரம் பறக்கவே யில்லை. தியானத்தில் ஆழ்ந்தால் என் மனக் கண் முன் தெய்வங்கள் தோன்றுவதில்லை; பச்சைக் குழந்தையான யமுனு தான் தோன்றுவாள். அப்புறம் என் மனம் எப்படி ஒருமுகப்பட்டு ஈச்வர தியானத்தில் ஈடுபடும்?


சில வருஷங்களுக்குப் பிறகு என் குருநாதர் சமாதியடைந்தார். அவர் இருந்தவரையில் ஓரளவு கட்டுக்கு அடங்கியிருந்த என் உள்ளம், அவருடைய மறைவுக்குப் பின்னர் கட்டவிழ்த்த காளையாகி விட்டது. யமுனவை ஒரு தடவையேனும் கண் குளிரக் காணுமல், என்னல் அக் கானக வாழ்வில் ஈடுபட முடியாது என்ருகி விட்டது.


அதற்கு ஏற்றவாறு, அச்சமயத்தில் திரிவேணி சங்கமத்தில் 'மேளா' ஒன்று நடைபெற இருந்ததை ஒட்டி, இமயத்திலிருந்து பைராகிகள் ஓர் 'ஜமாச்' சேர்ந்து அலகாபாத்துக்குக் கிளம்பினர்கள். அவர்களுடன் நானும் புறப்பட்டேன்.

மேளா முடிந்ததும் எங்கள் ஜமா இமயத்துக்குத் திரும்பிற்று. ஆனல் நான் பின் தங்கி விட்டேன். என்னிடம் காசு பணம் கிடையாது. ஆகவே, ரெயில ஏறி பம்பாய் வந்தடைய முடியாது, கால் நடையாகவே கிளம்பி விட்டேன். ஊர் ஊராகத் தங்கி, கிடைத்ததைக் கிடைத்தபோது உண்டு, மடங்களைத் தேடிப் படுத்து உறங்கி வந்து கொண்டிருந்தேன். முன்பு நான் சந்நியாசம் பெற்றுக் கொண்ட ஊரையும் தாண்டிவிட்டேன். அது ஏதோ ஒரு சிறு கிராமம். அவ்வூரை நான் வந்து அடைந்த போது காலையில் ஒன்பது மணியிருக்கும். ஊரின் எல்லையில் தென்பட்ட ஒரு பாழடைந்த கோயிலின் வெளி மண்டபத்தில், இளைப்பாறும் பொருட்டு சற்று நேரம் தங்கினேன். உட்காந்து ஒரு நிமிஷம் கூட ஆகியிராது. உள்ளேயிருந்து "திவாகரா, நீ எங்கேயடா போய் விட்டாய்?" என்று யாரோ கேவி அழும் குரல் கேட்டது. அழுவது யார் என்பதைப் பார்க்க நான் உள்ளே எழுந்து சென்றேன். கோயிலின் உள்ளே, பைத்தியக்காரனைப் போல், கந்தல்களைச் சுற்றிக் கொண்டு அவன் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் ஓர் புகைப்படம் இருந்தது. அதைப் பார்த்துத் தான் அவன் அழுது கொண்டிருந்தான்.

"ஐயா, நீங்கள் யார்? எதற்காக அழுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவனை நெருங்கினேன்.

[தொடர்ச்சி 68-ம் பக்கத்தில்]





எந்த அளவில், எந்த மோஸ்தரில் எந்த
வடிவத்தில் வேண்டுமானாலும்

# டன்லபில்லோ

## மெத்தைகளே சரியானவை

டன்லபில்லோ நீடித்தசௌகரியம் தருவது; உங்கள் பர்னிச்சர்களுக்கு ஒருமுறை இவற்றை வாங்கி விட்டால் நீண்ட காலம் நிலைத்து விளங்கும்.


டன்லபில்லோ கைவசமுள்ளதும் புதிதுமான பர்னிச்சர்களுக்கு ஏற்ற வகையில் வெட்டித்திருத்தியமைக்கக் கூடியது.

டன்லபில்லோ மெத்தைகளுக்கு இப்பொழுதோ பிற்பாடோ உங்கள் விருப்பத்தை அனுசரித்து எந்த நிறத்திலும் சுலபமாக வெளியுறைகள் செய்து போடலாம்.

டன்லபில்லோ மெத்தைகளில் எச்சமயத்திலும் தொய்வு அல்லது முண்டு முடிச்சு ஏற்படாது.

டன்லபில்லோ அதன் அழகிய தோற்றத்தினாலும் நேர்த்தியான கோடுகளாலும் பர்னிச்சர்களுக்கே ஒரு அலாதியான சோபைத் தருகின்றது.

# டன்லபில்லோ



*லேடெக்ஸ் நுரைத் தயாரிப்புகளில் முதன்மையானது—மிகச் சிறந்ததுங்கூட.*

DPX 70-T19

# குண்டூசியைக் கேளுங்கள்



[சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகப் பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.]

**நொ. வ. பொன்னையா (தெமோதரா)**

**நடிகை வைஜயந்திமாலாவுக்கு கல்யாணம் ஆகிவிட்டதா? அவரது கணவனின் பெயரென்ன?**

கல்யாணத்திற்கு இளமை அத்யாவசியமல்ல; ஆனல், நக்ஷத்திரப் பதவிக்கு இளமை இன்றியமையாதது — என்பது வைஜயந்திக்குத் தெரிந்திருக்கிறது. அவருடைய கல்யாணம் உமக்குத் தெரியாதபடி ரகசியமாய் நடந்து விடாது; கவலைப்படாதீர்.

**''சரோ'' (தென்காசி)**

**''மதுரை வீரன்'' கதையை கோமதி பிலிம்ஸாரும், சாயி காஞம்ரு,..ா பிலிம்ஸாரும் தனித்தனியே படமாகத் தயாரிக்கப் போவதாக விளம்பரங்களில் பார்த்தேன். இரு கம்பெனியார் ஒரே படத்தைத் தயாரிப்பதன் மர்மம் என்ன?**

மர்மம் ஒன்றும் இல்லை; எல்லாம் கர்மம் தான்! புத்திசாலியான பட முதலாளி போட்டியிலிருந்து முதலில் விலகிக் கொள்வார்.

**பி. ராமசாமி நாயுடு (சித்தூர்)**

**''பராசக்தி'' படத்தில் 'புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போனவரே' என்ற பாட்டைப் பாடியவர் யார்?**

இப் பாட்டு டி. எஸ். பகவதியால் பாடப்பட்டது.

**தேவதாசன் (மட்டக்களப்பு)**

**லலிதா, பத்மினி வாழ்க்கை வர்ணனை ''குண்டுசி''யில் வெளி வந்திருக்கிறதா? எனின் எப்பொழுது?**

இந்த ''திருவாங்கூர் திரிமணி''களின் வாழ்க்கையை முதன் முதலில் விரிவாக வெளியிட்டது ''குண்டூசி'' தான். இது 1949ம் வருஷம் ஜூன் மாத ''ஊசி''யில் வெளிவந்திருக்கிறது.

**கே. கோபாலகிருஷ்ணன் (திருச்சி)**

**டிஸம்பர் ''குண்டுசி''யில் வெளிவந்த ''கானல் நீர்'' கதையை எழுதிய 'சம்பந்தம்' அவர்களின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா? இக் கதையை நாங்கள் நாடகமாக நடிக்க விரும்புகிறோம். நாடகமாக அவர் அமைத்துக் கொடுப்பாரா?**

''எஸ். டி. சம்பந்தம், ஸ்டேஷன் மாஸ்டர், சிங்கப்பெருமாள் கோவில், தெ. ரெயில்வே''-என்ற விலாஸத்திற்கு நீரே எழுதிக் கேளும்.

**எம். ராமதாஸ் (சிதம்பரம்)**

**எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் வாழ்க்கை வர்ணனையை நீர் ஏன் எழுதவில்லை?**

சினிமா உலகிலிருந்து விலகி விட்ட இந்த நக்ஷத்திரத்தின் வாழ்க்கையை நான் எழுதுவதை விட அவரது கணவ ரான டி. சதாசிவமே எழுதி வெளியிட லாம் அல்லவா?

**கி. லீலா (பெங்களூர்)**

**(குமாரி) கமலா இனிமேல் படங்களில் நடிப்பாரா?**

ஸெலுலாய்டு படத் தயாரிப்பாளர்களிடமிருந்து காகிதப் படத் தயாரிப்பாளரின் கைகளுக்கு அவர் மாறி விட்டார். இனி அவரைப் படங்களில் காண்பது அரிதே.

**டி. தங்கராஜ் (சங்கனுசேரி)**

**நம் தமிழ் நடிகர்களில் பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறர்களா? இருந்தால் அவர்கள் பெயரைக் குறிப்பிடவும்.**

தற்போதைய நடிகர்களில், ரஞ்சன், ஜெமினி கணேஷ், மனோஹர் ஆகிய

வர்கள் படிப்பில் பட்டம் பெற்ற நடிகர்களாவர்.

**பி. கலைமணி (திருச்சி)**

**பி. பானுமதிக்கு எத்தனை குழந்தைகள்? அவைகளின் பெயர்கள் என்ன?**

இந்த நக்ஷத்திரத்திற்குப் பிறந்துள்ளது ஒரே ஒரு நக்ஷத்திரப் பெயருடைய குழந்தை தான். அதன் பெயர் பரணி!

**எம். ராஜரத்தினம் (சிவகங்கை)**

**''அண்ணி''யில் நடித்த மாஸ்டர் சேது வின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?**

நெ. 1, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை என்று எழுதுங்கள்.

**ஜி. பக்கிரிசாமி (வீரசோழபுரம்)**

**ஜீவரத்தினம் ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டார்? ''போன மச்சான்'' படத்தில் அவர் பின்னணி பாடியிருக்கிருரா?**

பாடி யிருக்கிருர். திரையில் சித்தரிக்கப்படும் போலிக் காதலை அவர் வெறுத்ததால் நிஜக் காதலில் ஈடுபட்டு, கல்யாணத்தில் முடிவு கண்டார். அது முதல் அவர் படங்களில் நடிப்பதையும் நிறுத்திக் கொண்டு விட்டார்.

**புருஷோத்தமன் (ஆலந்தூர்)**

**சகஸ்ரநாமத்தின் விலாஸம் என்ன?**

ஆயிரம் வைஷ்ணவர்களின் நெற்றி!

**எஸ்.டி. சாமி (கொஸ்வாடி. இலங்கை)**

**பூரணச் சந்திரன் போல் மாதம் ஒரு முறை வரும் ''குண்டூசி''யை வாரப் பத்திரிகையாக வெளியிட்டால் என்ன?**

உம் யோசனை நன்ருய்த் தான் இருக்கிறது. ஆனல், தற்போது சினிமா உலகம் உள்ள சீர்கெட்ட நிலையையும், பட முதலாளிகளின் சிரத்தையற்ற போக்கையும் கவனித்தால் மூன்று மாதத்திற்கு ஒரு பத்திரிகையை வெளியிட்டாலே போதும் என்று தோன்றுகிறது. "சரிதான் இதனல் தானே சில பத்திரிகைகள் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறை வெளி வருகின்றன?" என்று கேட்டு வைத்து விட்டுப் போகிறீர்! அது வேறு விஷயம்.



**ரோஹிணி தயாரித்து வரும் ''கிருஹ லக்ஷ்மி''யில் எம். கே. ராதாவும், சந்திர குமாரியும் குஷியாக இருக்கிருர்கள்; நாம் வேறு பக்கம் போவோம்!**

டி. ஆர். ஆர். புரடக்ஷன் ஸார் தயாரித்து வரும் ''கோமதியின் காதலன்'' தமிழ்ப் படத்தில் டி. பால சுப்ரமண்யம், பிரண்ட் ராமசாமி, வி. எஸ். பாண்டியன் தோன்றும் ஒரு கட்டம் இது.



**ரங்கநாத் (சிமுகா)**

ஜூனியர் ஸ்ரீரஞ்சனியின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்

'ரிபப்ளிக் கார்டன்ஸ்', விஜயராகவாச்சாரி ரோடு, தியாகராயநகர், சென்னை-17—என்பது அவரது விலாஸம்.

**வி. பழனிவேலு (திருச்சி)**

எம். கே. டி. பாகவதரின் ''புது வாழ்வு'' என்ற தமிழ்ப் படம் எப்பொழுது வெளியாகும்? தாமதத்திற்குக் காரணம் என்ன?

இந்தக் காலத்தில் ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு ''ஒரு லக்ஷம் இருந்தால் தீர்ந்தது'' என்று முடிகிறதா? பணம் தவிர பல வேறு சங்கடங்களும் சேர்ந்து கொள்ளுகின்றனவே. இப்படம் எப்பொழுது வெளிவரும் என்பது பாகவதருக்கே தெரியுமா என்று சந்தேகிக்கிறேன்.

**கே. ராமசாமி பிள்ளை (பேரங்கியூர்)**

எம். ஜி. ராமச்சந்திரன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

வாரத்தின் முதல் கிழமை இவரது ஜாதியை ஏறக்குறையத் தெரிவிக்கும்!

**என். சுப்ரமண்யம் (கணபதி அக்ரஹாரம்)**

சாவித்திரிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?

சாதாரணமாகவே நடிகைகளின் கல்யாணம் பற்றிய சந்தேகம் நேயர்களுக்கு நிறைய ஏற்படும். ''மிஸ்ஸியம்மா''விலோ அவர் **கல்யாணம் ஆகாத** 'மனைவி'யாக நடித்திருக்கிறார், கேட்பானேன்!

**கே. சுப்பய்யா (ரிஷபம்)**

நாடகங்களில் நடித்து வரும் ஸி. என். அண்ணாத்துரையும், மு. கருணாநிதியும் ஏன் சினிமாவில் மட்டும் நடிப்பதில்லை?

'அரசியல் நாடகங்களி'ல் திறம்பட நடிப்பதற்காக இப்படி நாடக மேடையில் ஒத்திகை பார்த்துக் கொள்ளுகிறார்கள் போலும்!

**பி. என். கிருஷ்ணமூர்த்தி (கோபிசெட்டி பாளையம்)**

''அம்மையப்பன்'' கதையைப்பற்றி உம் அபிப்பிராயம் என்ன?

கதையில் புரட்சி இல்லை என்றாலும் கதை புரட்(டு)சியை ஏற்படுத்தியதல்லவா!

**உ. அப்துல்ரஹீம் (மாத்தளை)**

''சுகம் எங்கே?'', ''அம்மையப்பன்'' ஆகிய இரு கதைகளும் ஒரே மாதிரி இருக்கிறது. கருணாநிதியின் வசனங்களைக் கண்ணதாஸன் திருடினாரா அல்லது கண்ணதாஸனின் வசனங்களைக் கருணாநிதி திருடினாரா?

திருடன் ஞாபக மறதியாய் தன் வீட்டிலேயே கன்னம் வைத்த மாதிரி இருக்கிறதல்லவா இவ் **விஷயம்**! இத்தோழர்களில் யாரோ ஒருவர் திருடியிருக்கிறார் என்பது மட்டும் மறுக்க முடியாத விஷயம். அந்த ஒருவர் யாரென்பதை ஆராயக்கூடிய ஆற்றல் அறிஞருக்குத் தான் உண்டு.

**எஸ். செல்லய்யா (கொழும்பு)**

ஆபரேட்டர் பரீக்ஷை பற்றிய முழுத் தகவல்களையும் தயவு செய்து தெரிவிக்கவும்.

பாரத நாட்டின் முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கு

இவற்றில் முதலீடு செய்யுங்கள்

# சிறு சேமிப்புத் திட்டம்

## உங்கள் சேமிப்புமூலம் கிடைக்கும் நிச்சய அனுகூலங்கள்:

| உங்கள் நாட்டுக்கு | உங்களுக்கு |
|---|---|
| ● வாழ்க்கைத் தர உயர்வு | ● ஒரு பத்திரமான முதலீடு |
| ● அதிக சிறப்புள்ள சமூக சேவைகள் | ● ஒரு கணிசமான வட்டி விகிதம் |
| ● பொருளாதாரம் மற்றும் தொழில் அபிவிருத்தி | ● வருமான வரி கழிவின்றி கிடைக்கும் |

நாட்டுக்கு சுபீட்சம்—உங்களுக்கு பாதுகாப்பு

**உங்கள் சேமிப்புகளை இவ்வுத்தரவாதம் பெற்ற செக்யூரிடிகளில் முதலீடு செய்யுங்கள்**

| | |
|---|---|
| 12 வருட நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் | கெடு பூர்த்தியானபோது வருடம் 1-க்கு 4·16 சதவிகிதம் வட்டி பெறுவது. ரூ. 5 முதல் ரூ. 5,000 வரை மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் ரூ. 25,000க்கு மேற்படாத அளவிற்கு வாங்கலாம். |
| 10 வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட் சர்டிபிகேட்டுகள் | ஆண்டுதோறும் 3½ சதவிகித வட்டி வழங்கப்படும். ரூ. 100ன் மடங்குகளில் ரூ. 25,000 வரை மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் 25,000க்கு மேற்படாத அளவிற்கு வாங்க முடியும். |
| 10 வருட நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகள் | கெடு பூர்த்தியாகும்போது வருடம் 1-க்கு 4½ சதவிகித வட்டி பெறும் ரூ. 25, ரூ. 50, 100 & ரூ. 500 மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் உயர்ந்த பக்ஷம் ரூ. 1,000 வரை வாங்கலாம். |
| போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் அகௌண்ட்ஸ் | டிபாசிட் இருப்புத் தொகையின் பேரில் ரூ. 10,000 வரை 2 சதவிகித வட்டியும், அதற்கு மேல் ரூ. 15,000 வரை 1½ சதவிகித வட்டியும், சேர்க்கப்படும். |


**15 வருட ஆன்னியுடி சர்டிபிகேட்டுகள்**

| | |
|---|---|
| வெளியீடு விலைகள் ரூ. 3,500, ரூ. 7,000 ரூ. 14,000 மற்றும் ரூ. 28,000. தனி நபர் ரூ. 28,000 வரை வாங்கலாம். | 3½ சதவிகித தொடர் வட்டி சேர்த்து பிரதி மாதமும் சம தவணைகளாக மொத்தம் 15 வருட காலத்தில் திருப்பிக் கொடுக்கப் படுகிறது. |

இதர விவரங்களுக்கும், மற்றும் இம் முதலீடுகளைக் குறித்த விதிகளுக்கும் ஸிம்லாவிலிருக்கும் நேஷனல் சேவிங்ஸ் கமிஷனருக்கோ அல்லது உங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த ரீஜனல் நேஷனல் சேவிங்ஸ் ஆபீஸருக்கோ எழுதி விசாரிக்கவும்.

A.C.–646–T.M.

# இந்தியாவின் எதிர்காலத்தில் முதலீடு செய்க



**பத்மினி பிக்சர்ஸாரின் "முதல் தேதி" தமிழ்ப் படத்தில் வழக்கத்திற்கு மாறுதலான மேக்கப்பில் சிவாஜி கணேசன் தோன்றுகிருர்.**

---

கண்ணுல் பேசிக் கொள்ளுவர் காதல் ஆரம்பத்தில்; வாயால் வைது திட்டுவர் மனஸ்தாபத்துடன் பிரியும்போது.

**சுலோசனு மஹாதேவன் (கொழும்பு)**

**கணவர் பேரலோநாத்தின் மரணத்திற்குப் பிறகு பி. எஸ். சரோஜா மறுமணம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நிஜம்தானு?**

மறுமணம் செய்துகொள்ள முயற்சித்தார் என்பது உண்மை; ஆனல் செய்து கொண்டிருக்கிருர் என்பது தவறு.

* * *

**திருவாங்கூர் சகோதரிகளின் தந்தையின் பெயர் என்ன?**

பி. கே. பிள்ளை.

**"தமிழரசி" (தென்காசி)**

**"என் மகள்" படத்தில் மல்லிகாவை ரகுபதி வழியில் மறிக்கிருன். குதிரையின் அருகில் இருவரும் நிற்பதாகவும் காட்டப்படுகிறது. பிறகோ அதி வேகமாய் குதிரை சவாரி செய்யும் ரகுபதியுடன் மல்லிகா காணப்படவில்லை. குதிரை சவாரி முடிந்ததும் இருவரும் சேர்ந்து காணப்படுகின்றனர். மல்லிகா எவ்விதம் அந்த இடத்திற்கு வந்தாள்?**

ஓடும் குதிரையின் லாடத்திலுள்ள ஆணிகளைக் கூட தற்போதைய ரஸிகர்கள் கணக்காய் சொல்லிவிடக் கூடும்—என்பது நம் பட முதலாளிக்கும் டைரெக்டர்களுக்கும் மட்டும் தான் தெரிவதில்லை. அதனல் தான் இதுமாதிரியான அபத்தக் காட்சிகள் படங்களில் மலிந்து வருகின்றன.

**கே. ஆர். ராசியப்பன் (சிங்காநல்லூர்)**

**குசலகுமாரி, பண்டரி பாய், மைனுவதி, துளஸி, வைஜயந்திமாலா, அஞ்சலி தேவி, சாவித்திரி, டி. ஆர். ராஜகுமாரி, வனஜா—இவர்களில் யார் யாருக்குத் திருமணம் ஆகிவிட்டது?**

இவர்களுள் அஞ்சலி தேவி ஒருவர் மட்டுமே தான் விவாஹமானவர்.

இது சம்பந்தமாக நீங்கள், "தென்னிந்திய பிலிம் சேம்பர், உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, சென்னை" என்ற விலாஸத்திற்கு எழுதிக் கேட்டுப் பாரும்.

**துரை. முருகேசன் (காரமடை)**

**நம் தாயகப் படங்கள் எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தயாராகின்றன?**

தத்துவமாவது, மண்ணுங்கட்டியாவது! எல்லாம் ஒரே "பணத்துவம்" தான் ஸ்வாமி!


**ஆர். எம். சுப்ரமண்யம் (பாகனேரி)**

**பி. எஸ். கோவிந்தனின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்**

வடக்கு மாசி வீதி, மதுரை—என்று விலாஸமிட்டு எழுதும்.

**பதியப்பன் (கிணத்துக்கடவு)**

**காதலர்கள் சந்தித்தவுடன் பேசிக் கொள்ளுவது கண்ணுலா? அல்லது வாயாலா?**





நீங்கள் இன்று

உங்கள் பற்களை

# மக்ளீன்

செய்தீர்களா?

ஆம்! நான் இன்று என் பற்களை மக்ளீன்ஸ் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்தேன். வசீகரம் வாய்ந்த புன்னகைக்கு ஆரோக்கியமான பற்கள் அத்தியாவசியம். ஆகையால்தான் நான் பிரதி தினமும் இரு முறை எனது பற்களை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையைக் கொண்டு சுத்தம் செய்கிறேன். மக்ளீன்ஸிலுள்ள ஒரு தனிப்பட்ட பொருள் பற்களின் மேல் படிந்துள்ள ஊத்தையை நீக்கி பற்களுக்கு இயற்கையாக இருக்கும் வெண்மையையும், ஒளியையும் தருகிறது. அதிக வெண்மையான பற்கள், கெட்டியான ஈறு மற்றும் நறுமணமுள்ள சுவாசத்திற்கு மக்ளீன்ஸ் பற்பசையையே உபயோகியுங்கள்.

"...மக்ளீன்ஸ் பற்பசை இப்பொழுது கடைகளில் கிடைக்கும் எல்லா ரகங்களை விட மிக உயர்ந்தது."




க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்

MTY-39-TAM




திடீரென்று இப்பொழுது திருப்பதி க்ஷேத்திரத்திற்கு யோகம் அடிக்க ஆரம்பித்திருக்கிறது. கலை உலகிலுள்ள பலரும் அங்கு விஜயம் செய்து, அந்தப் பதிக்கு பாக்கியம் அளித்து வருவதையே குறிப்பிடுகிறேன்! இடையில் ஒரு விஷயம். சிவாஜி கணேசனின் திருப்பதி விஜயம் பற்றிச் சென்ற ஊசியில் நான் எழுதியிருந்தேன். நான் சூசகமாகச் சொல்லியிருந்தது போலவே, அக்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் அவரை வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அவருடன் தோழனாகவே நடித்துவரும் ஒரு நடிக நண்பர், "அவர் போய்விட்டால் என்ன? அது கட்சிக்கு மிகப் பெரிய நஷ்டமோ?" என்று பகிரங்கமாகக் கூட்டங்களிலும் பேசும் அளவுக்கு அவர்கள் கசப்பு வளர்ந்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். சமீப காலமாக, ஏழுமலைக்கு விஜயம் செய்த மற்றும் சிலர் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, வேறு விஷயத்திற்குத் தாவுகிறேன்.

* * *

பிரபல பாடகியான எம். எஸ். சுப்புலக்ஷ்மி, தம் கணவருடன் ஒரு பிரார்த்தனையைச் செலுத்தத் திருப்பதிக்குச் சென்று வந்தார். ஏழுமலையான் சந்நிதியிலேயே மெய்ம்மறந்து பக்திப் பாடல்களைப் பாடி, உண்டியலில் கை நிறையக் காசும் போட்டு விட்டுத் திரும்பினார். பிரபல பின்னணிப் பாடகியான எம். எல். வஸந்தகுமாரியும் இந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார். எம் எல். வஸந்தகுமாரி ஏழுமலையானை எப்படி மறக்க முடியும்; மறப்பது தான் நியாயமா? ஏனெனில், அவரை சாக்ஷியாக வைத்துக் கொண்டு தானே, அவர் முன்னிலையில் தானே விகடம் கிருஷ்ண மூர்த்தியை அவர் மணந்து கொண்டார். சமீபத்தில் அவர் தம்பதி சமேதராக திருப்பதிக்கு விஜயம் செய்து, தம் இரு குழந்தைகளுக்கும் அங்கு முடி இறக்கிக் கொண்டு பிரார்த்தனை செலுத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

* *

"எங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்தது திருப்பதி என்பதற்காக எவ்வளவு போராட்டம் நடந்திருக்கிறது. அப்படியிருக்க தமிழர்களே வந்து தரிசித்துப் போகும்போது நாங்கள் சும்மா யிருப்போமா?" என்று கேட்பது போல, பி. கண்ணாம்பாவும், ஸி. எஸ். ஆர். ஆஞ்சநேயலுவும் சமீப காலத்தில் திருப்பதி சென்று திரும்பினார்கள். "பாலாஜி" என்ற தெலுங்குப் படத்தில் ஸி. எஸ். ஆர். ஆஞ்சநேயலுவே திருப்பதி வெங்கடாஜலபதியாக நடித்திருக்கிறார். அது முதல் தான் அவருக்குப் பட உலகில் புகழ் கிடைக்க ஆரம்பித்தது. ஆகவே, அவருக்கு பாலாஜியிடம் பக்தி இருப்பதில் வியப்பில்லை. பல வருஷங்களுக்கு முன், சித்தூர் வி. நாகய்யா, வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு, அதன் காரணமாகத் துறவியாக இம் மலை மீது சுற்றினார் என்பதையும் வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். திருப்பதி சம்பந்தப்பட்ட மற்றொரு துக்ககரமான விஷயத்தையும் என்னால் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. "சம்சாரம்" தெலுங்குப் படத்தைத் தயாரித்தவர், அதைத் திரையிடு முன், திருப்பதிக்குச் சென்று திரும்பும் போது கார் விபத்தில் உயிரை இழந்த துக்ககரமான விஷயம் தான் அது.

* * *

நமது நக்ஷத்திரங்களில் பலருக்குத் தெய்வ பக்தி உண்டு என்பது எனக்குத் தெரியும்; அது சமீப காலமாக அவர்கள் செய்கை மூலம் வெளியாகி வருகிறது. திருவாங்கூர் சகோதரிகளில் பெரியவரான லலிதா புராணப் பிரசாரமே செய்யும் அளவுக்குப் போயிருக்கிறார். ஜனவரி மாத இறுதியில் சென்னை, மயிலாப்பூர் வைதிக சபையின் நிதி திரட்டும் நாடகம் ஒன்றிற்குத் தலைமை வகித்த அவர், "பக்தி நமக்கு முக்கியம்; புராணங்களைப் படித்து பக்தியோடு இருங்கள்" என்று அங்கு ஒரு பிரசங்கமே புரிந்திருக்கிறார். அவர், மயிலாப்

பூர் கபாலி கோயிலுக்கும் தம் தாயாருடன் அடிக்கடி போய் வருகிறார். அப்படிப் போகும் பொழுதெல்லாம் அங்குள்ள நவக்கிரஹங்களைச் சுற்றாமல் அவர் திரும்புவதில்லை.

* * *

கபாலி கோயிலுக்கு அடிக்கடி வரும் வேறு பல நடிகர்களும் உண்டு. ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜ் தமக்கு அவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம் கபாலிகோயிலுக்குப் போகத் தவறுவது கிடையாது. தம் உடம்பைத் தூக்கிக் கொண்டு கொட்டாப்புளி ஜயராமன் கபாலீஸ்வரரைப் பிரதக்ஷிணம் வருவதை நான் பல முறை கண்டிருக்கிறேன். விகடம் கிருஷ்ணமூர்த்தியை இப்பொழுது வேண்டுமானால் அக்கோயிலில் அதிகம் காண முடிவதில்லை. அவர் கிருஹஸ்தராவதற்கு முன் பிரதி வெள்ளிக் கிழமையும் தவறாது அங்கு வருவார். ஏன், நானே பல தடவைகள் அவருடன் போய் வந்திருக்கிறேன். இதனால், தம் காரியம் கைகூடி விட்டது என்று கபாலீஸ்வரரை அவர் மறந்து விட்டார் என்று நான் சொல்வதாகத் தவறாக நினைத்துவிட வேண்டாம்.

* * *

தெய்வ பக்தி மிக்க நக்ஷத்திரங்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒருவர் எம். கே. தியாகராஜ பாகவதர் ஆவர். முக்கியமாக முருகனிடம் அவருக்கு அபார பக்தி உண்டு. "முருகனை மறந்ததாலேயே நான் சிறை புக நேர்ந்தது" என்று சென்ற வருடம் பழநியில் ஆண்டவன் முன்னிலையில் நடந்த ஒரு கச்சேரியில் அவர் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். சிறையிலிருந்து அவர் விடுதலை பெற்று வெளி வந்ததும், மற்றவர்களைப் போல் விருந்துகளிலும் கேளிக்கைகளிலும் திளைக்காது, சமயபுரம், பழநி இப்படிப் பல க்ஷேத்திரங்களையும் சென்று தரிசித்துவிட்டுத் திரும்பினார் என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் தமது நாடக கோஷ்டியுடன் விழுப்புரம் போயிருந்த தியாகராஜ பாகவதர் அங்கு பிரசித்தமான வீர அனுமான் கோயிலுக்குச் சென்று, அங்கு அம்


கூந்தல் பெருகினால்
விதவிதக் கொண்டைகளை
ஜோடிப்பது வெகு எளிதே!

**கேசவர்த்தினி**

கொண்டு கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள். இனி பொடுகைத் தலையில் சுமப்பானேன்? தலை அரிப்பை நிறுத்துங்கள். இளநரையைத் தடுங்கள். நரையையும் தள்ளி வையுங்கள்.



மறைந்துள்ள கூந்தலழகைக் **கேசவர்த்தினி** கொண்டு எடுத்துக் காட்டுங்கள்.




ஷாம்புவினால் கூந்தலை சுத்தமாகவும், ஸுகந்தமாகவும் ஆக்குங்கள். கேசவர்த்தினி அணா 14: ஷாம்பூ அணா 14: தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

**கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ் :: கோயமுத்தூர்**

மூர்த்தியை மெய்மறந்து பாடி, மாலை மரியாதைகள் பெற்றுத் திரும்பியுள்ளார்.

* * *

நாகூரில் நடைபெறும் கந்தூரி உற்சவத்தில் இவ் வருஷம் நடிகர் டி. ஆர். மஹாலிங்கத்தைப் பார்த்த பலரும் அவரையே சூழ்ந்து கொண்டார்களாம். தம் மனைவியுடனும், மகன் சுகுமார், மகள் விஜயலக்ஷ்மி இவர்களுடனும் நாகூருக்குச் சென்று அவர் பிரார்த்தனை செலுத்தினர். தம் குழந்தைகளுக்கு அவர் அங்கு முடி இறக்கி, காணிக்கைகள் செலுத்தித் திரும்பியிருக்கிறார். நாகூர் ஆண்டவன் அருளால் அவர் மீண்டும் பழைய புகழை அடைய வேண்டும் என்பதே எனது விருப்பமுமாகும். நாகூர் ஆண்டவரின பக்தர்களில் மற்றொருவர் நடிகர் ஏ. கருணாநிதி ஆவர். இவர் வருடம் ஒரு தடவையாவது தம் குடும்பத்துடன் நாகூர் போய பிரார்த்தனை செலுத்திவிட்டுத் திரும்பத் தவறுவதில்லை.

* * *

சென்னை, தேனாம்பேட்டையில் ஆலமாந்த (ஆலயில் அமர்ந்தாள்) கோயில் என்று ஒன்று இருக்கிறது. இது இருப்பது பல பக்தர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்! ஆனால், சினிமா உலகிலுள்ள பல நடிகர் நடிகைகளுக்கும் நன்ருகத் தெரியும். இன்று பிரபலமாக உள்ள ஆந்திர நடிகைகள் பலரும் அநேகமாக இந்த தெய்வத்தின் கடாக்ஷத்தினுல் முன்னணிக்கு வந்தவர்கள் தான். அவர்கள் இப்பொழுது அதை நினைத்துப் பார்க்கிருர்களோ இல்லையோ? அது வேறு விஷயம். கேவலம், ஒரு எக்ஸ்ட்ராவாகப் பட உலகில் அவர்களில் பலர் காலடி வைத்த காலத்தில் இந்தக் கோயிலை வந்து தினமும் சுற்றுவது வழக்கம். இன்றும் கூட மாலை வேளைகளில் பல எக்ஸ்டரா நடிகைகள் இந்த அம்மன் கோயிலை வலம் வந்து பிரார்த்திப்பதைக் காணலாம். தாங்களும் ஒரு காலத்தில் நக்ஷத்திரமாகவேண்டும் என்ற அவர்கள் பிரார்த்தனை பலிக்கட்டும்!

* * *

முன்னணி நக்ஷத்திரம் மனோஹரை தியாகராயநகர் கிரிபித் ரோடில் தினமும் சந்திக்கலாம். அங்குள்ள ஒரு கோயிலையும், அதிலுள்ள ஒரு பாம்புப் புற்றையும் பிரதி தினமும் அவர் சுற்றத் தவறுவது கிடையாது. தனக்கு வாழ்வளித்த அக் கடவுளை அவர் மறந்து விடவில்லை. கே. பி. சுந்தராம்பாளுக்கும் கடவுள் பக்தி அதிகம் உண்டு. அதுவும் மாரியம்மனிடம் அவருக்கு அபார நம்பிக்கை உண்டு. சென்ற ஆண்டு ஒரு முறை அவர் கரூரில் தீ மிதித்துக் கூடத் தம் காணிக்கையைச் செலுத்தி யிருக்கிருர். டி. ஆர். ராஜகுமாரி, வித்யாவதி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, சங்கீத டைரெக்டர் ஜி. ராமநாதன் ஆகியோர் சாயிபாபா பக்தர்கள் என்பது பிரசித்தமான விஷயம். பண்டரிபாயின் பக்தி ரஸிகர்களுக்குத் தெரிந்ததுதான்; தம் வாழ்க்கையை பேசாமல் பஜனவளி பாடிக்கொண்டு பண்டரிநாதன் சன்னிதியிலேயே கழித்துவிடவும் அவர் தயார்தான். படவுலகில் சம்பந்தப்பட்ட தெய்வபக்தி மிக்கவர் இன்னும் பலர் இருக்கிருர்கள். இப்படி எழுதிக்கொண்டே போனல் பக்திப் படலம் நீண்டு கொண்டே போகும். ஆகவே, இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

* * *

இந்த சமயத்தில் தமாஷான ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. அதாவது, நாஸ்திகப் பிரசாரம் நிறைந்த படங்கள் தயாரிப்பவர்கள் எல்லாருமே உண்மையில் நாஸ்திகர்கள் அல்ல என்பது தான் அது. பிரபல விளம்பர ஸ்தாபனமான பாலு பிரதர்ஸின் மூத்தவருடன் நான் ஒரு சமயம் பேசிக்கொண்டிருந்த போது இவ் விஷயம் வெளிப்பட்டது. நாஸ்திகப் பிரசாரம் நிறைந்த படம் ஒன்றைத் தயாரித்துத் திரையிட்டுப் பணம் குவித்திருக்கிருர் பட முதலாளி ஒருவர். அந்தப் படத்திற்கு பாலு பிரதர்ஸ் விளம்பர சம்பந்தமான பல வேலைகளைச் செய்து கொடுத்தார்கள். இறுதியில் தங்கள் வேலைகளுக்கான ஒரு 'பில்'லை பட முதலாளிக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த முதலாளி 'பில்' தொகையில், "சாமி கமிஷன்" என்று ஒரு தொகையைக் குறைத்துக் கொண்டு தான் கணக்குத் தீர்த்தாராம். இதைச் சொல்லிவிட்டு, "எல்லாம் பிஸினஸ் ஸார்" என்று கூறி அவரும் என்னுடன் கூடச் சேர்ந்து சிரித்தார்.

# பில்ம் பக்கடா

**'ஸ்டவ்'**

"ராதே சியாம் ஜுஞ்ஜுன் வாலா என்ற வட இந்தியப் படமுதலாளி தம் "பரிச்சே" படம் முடியும் வரையில் சிகரெட் குடிப்பதில்லை—என்ற சபதத்தை நிறைவேற்றிவிட்டார்." —ஒரு செய்தி

இதொன்றும் பிரமாதமில்லை; பிரபல தமிழ்ப்பட டைரெக்டர் வேம்பு, "படத்தின் ஷூட்டிங் முடியும் வரையில் கன்னத்தில் கத்தி படக்கூடாது" என்ற "தீக்ஷை வைராக்கிய"த்தை பன்முறை நிறைவேற்றியிருக்கிறாரே!

* * *

ஹாலிவுட் நக்ஷத்திரம் அவா கார்டினரிடம் அவரது அழகு ரகஸியத்தைப் பற்றி ஒரு நிருபர் கேட்டபோது, "ஒன்றுமே இல்லை. நான் பன்றி மாதிரி தின்கிறேன்" என்றாராம்!

ஆனால், நம் நக்ஷத்திரங்கள் "தின்னத் தின்ன பன்றி மாதிரி பெருத்தல்லவோ விடுகிறார்கள்?" என்று அந்த நிருபர் திருப்பிக் கேட்க மறந்து விட்டார் போலும்!

* * *

"ராஜ் கப்பூர் ரஷ்யா சென்று வந்ததிலிருந்து அவருக்கு ரஷ்ய பாஷையில் பல கடிதங்கள் வருகின்றன."
—ஒரு வாரப் பத்திரிகை

இதைவிட, "தமிழ் பாஷையில் எழுதப் பட்ட கடிதத்தையே ரஷ்ய பாஷையில் எழுதப்பட்டதாக" நினைக்கும் ஒரு தமிழ் நக்ஷத்திரம் இருப்பது அதிக ஆச்சரியத்திற்குரியது அல்லவா!

* * *

"ஒரு கிழவியின் வேஷத்தில் நடிக்க வேண்டுமென்பது என் அவா. ஆனால், அந்த நாள் என்று வருமோ?" என்று பிரபல வடநாட்டு நக்ஷத்திரமான பிரமீளா ஏங்குகிறாராம்?

அதாவது........"நமக்கு மீண்டும் கதாநாயகி வேஷம் கிடைக்காதா" என்று தென்னாட்டில் சில 'தலை நரைத்த குமரிகள்' ஏங்குவது போல!

* * *

"மிஸ்ஸியம்மா" படத்தைப் பார்த்த போது அதிகமாய்சிரித்ததின் விளைவாக ஒரு ஸ்திரீ தியேட்டரிலேயே பிரசவித்தாள்." —பத்திரிகைச் செய்தி

இதன் விளைவாக, "சென்னை பிரசவ ஆஸ்பத்திரிகளில் 'மிஸ்ஸியம்மா'வைக் காட்டுவதற்கு பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக" உலவக்கூடிய செய்தி ஆதாரமற்றது!

* * *

"பம்பாய்மாதிரி யில்லாமல் சென்னையில் ஒலிப்பதிவாளர்கள் ஒரே பாட்டைப் பல தடவை எடுப்பதால் பின்னணிப் பாடகர்களுக்கு சலிப்பும், சோர்வும் ஏற்பட்டு விடுகிறது" என்று பிரபல பின்னணிப் பாடகி லதா கூறுகிறார்.
—ஆங்கில வாரப் பத்திரிகை

பின்னணிப் பாடகிகள் தங்களைப் பேட்டி காண வரும் நிருபரிடமாவது முறையிட்டுக் கொள்ள முடிகிறது. ஆனால் சில சமயம் இவர்களது பாட்டுகள் சலிப்பையும் சோர்வையும் அளிக்கும் போது பொது ஜனங்கள் யாரிடம் முறையிட்டுக் கொள்ளுவது?

* * *

"நான் இசைத் தட்டில் பாடியுள்ள பல பாட்டுகளை நான் கேட்டதேயில்லை"
—லதா மங்கேஷ்கர்

இதற்காகநீங்கள் வருத்தப்படவேண்டாம். 'உங்கள் இசைத் தட்டைக் கேட்காமல் ரஸிகர்களை ஒரு நாள்கூடத் தூங்க விடுவதில்லை' என்று சென்னை ரேடியோ நிலையத்தினர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களே!

* * *

கஸ்தூரி பில்ம்ஸார் "சதாரம்" கதையைப் படமாக்கப் போகிறார்கள்.
—ஸ்டுடியோச் செய்தி

இந்த 'நல்ல' சந்தர்ப்பத்தில், கள்ளபார்ட் நடராஜா ஆசாரியோ, கார்மேக ஆசாரியோ உயிருடன் இல்லையே என்று அங்கலாய்க்கிறார் ஒரு பழங்கால சதாரம் அபிமானி!

* * *

"நல்ல வீடு" தயாராகிறது.
—செய்தித் தலைப்பு

"எங்கே? எங்கே?" என்று பலர் ஆவலுடன் கேட்பது காதில் விழுகிறது! ஆனால், இது நிஜ வீடல்ல—படம்!

* * *

"இந்தியாவில் குழந்தைகளுக்கென வே நிறையப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்." —மிஸஸ் கிளப் வாலா

இதுமாதிரி தயாரிக்கப்படும் படங்களை, "தாத்தா பாட்டிகள் பார்க்கக் கூடாது" என்று கூடவே ஒரு சட்டத்தையும் இயற்றிவிட வேண்டியது மிக மிக அத்தியாவசியம் இல்லையா?

# இலங்கையில் நாடக விழா

## சிங்களத் தலைவர்கள் புகழ்மாலை

## நாடகச் சட்டத்திற்கு ஆதரவு

சென்ற இரண்டு மாதங்களாக, இலங்கையில் ஒரே கலை வாடை வீசியது! எங்கு பார்த்தாலும் டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களைப் பற்றியே பேச்சாக இருந்தது. சினிமாவையும் மிஞ்சும் அவர்களது நாடகங்களைப் பார்த்துத் தமிழர்கள் மட்டுமல்லாது, சிங்களவர்களும் வியந்து பாராட்டினார்கள்.

இலங்கையின் பிரபல பத்திரிகைகள் எல்லாம் சகோதரர்களின் நாடகங்களைப் புகழ்ந்த வண்ணமாகவே யிருந்தன. கலைஞர்களின் பேட்டிகளை நாலு, ஐந்து பத்தித் தலைப்புகளுடன் பிரசுரித்த வண்ணமாகவே இருந்தன.

கடந்த ஆண்டு டிஸம்பர் மாதம் 25ம் தேதி தொடங்கிய 'நாடக விழா' பிப்ரவரி 6ம் தேதி வரையும் கொழும்பு இந்துக் கல்லூரி "சரஸ்வதி மண்டபத்தில்" பிரமாத வெற்றியுடன் நடந்து முடிந்தது. பிப்ரவரி 11ம் தேதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் 'நாடக விழா' ஆரம்பமானது.

"மனிதன்" நாடகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நாடக விழாவை, இலங்கையின் கவர்னர் ஜெனரல் ஸர். ஆலிவர் குணதிலகா ஆரம்பித்து வைத்தார்.

தமிழ் மொழி கொஞ்சமும் புரியாத கவர்னர் ஜெனரல், நடு நிசி வரையும் கொட்டக் கொட்ட விழித்திருந்து 'மனித'னை ரஸித்து விட்டுத் தான் போனார்! இன்னும், கொழும்பு மேயர் டாக்டர் என். எம். பெரேரா, செனெட் சபை தலைவர் சிறில் டி. ஸொய்ஸா, பிரதமர் ஸர். ஜான் கொத்தலாவல முதலான பிரமுகர்களும் பெயரளவுக்கு நாடகங்களுக்குத் தலைமை வகித்து விட்டு எழுந்து விடாமல் நாடகம் முடியுமட்டும் இருந்து அனுபவித்து விட்டுத் தான் சென்றார்கள்!

கொழும்பு நகர மேயர் ஒரு நாள், 'எது வாழ்வு?' நாடகத்திற்குத் தலைமை வகித்து, "அரசியல் துறையில் பாரதந் தான் எங்களுக்கு வழிகாட்டியது; கலைத் துறையிலும் பாரதம் தான் எங்களை முன் நடத்த வேண்டும்! தமிழ் நாடகக் கலை முன்னேறியுள்ளது என்பதற்கு டி. கே. ஷண்முகம் கோஷ்டியினரின் நாடகங்கள் சான்றாக உள்ளன. ஷண்முகம் அவர்கள் அடிக்கடி இங்கு விஜயம் செய்து எங்கள் நாட்டுக்குக் கலைப் பணி புரியவேண்டும்!" என்று பாராட்டினார்.

மற்றும், கவர்னர் ஜெனரலும், பிரதமரும நமது அருங் கலையையும், அதை அக்கறையுடன் வளர்க்கும் ஷண்முகம் சகோதரர்களையும் வெகுவாகச் சிலாகித்துப் பாராட்டினார்கள்.

ஒன்றரை மாதங்களாகக் கொழும்பில் நாடகங்கள் நடத்திவிட்டு, யாழ்ப்பாணம் நாடக விழாவுக்குப் புறப்பட்ட நாடகக் கோஷ்டியினருக்கு, வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் இலங்கையில் ஒரு பாராட்டு விழா நடந்தது.

வெள்ளியால் செய்யப்பட்ட அழகிய இலங்கைப் படமொன்றில் சுற்றிவர யானைக் கூட்டம் ஒன்றன் பின் ஒன்றாகச் சுற்றி வரும் காட்சியைச் சித்தரிக்கும் படமும், அதன் மத்தியிலே இலங்கை வந்து இந்துக் கல்லூரிக்கு நாடகங்கள் மூலம் நிதி திரட்டித் தந்த ஷண்முகம் சகோதரர்களுக்கு ஒரு நன்றி இதழும் பொறித்து அதை வாசித்து அளித்தார்கள்.

நீதியரசர் ஸி. நாகலிங்கம் அவர்கள் கேடயத்தைக் கொடுத்து, "தமிழ் நாட

கம் என்றால் ஆபாசக் களஞ்சியம் என்று மக்கள் கொண்டிருந்த தவறான அபிப்பிராயத்தை அகற்றி, நாடக மேடைக்குப் புத்துயிர் அளித்த பெருமை ஷண்முகம் சகோதரர்களைத்தான் சாரும்'' என்று பாராட்டினர்.


''இசைக் கலை மன்றம்'', ''இலங்கை வானொலி தமிழ்க் கலை மன்றம்'', ''இலங்கை விசுவ கர்ம சங்கம்'', ''கொழும்பு தமிழ்ச் சங்கம்'', ''சரஸ்வதி கான சபா'', ''சைவ மங்கையர் கழகம்'', ''தமிழ்க் கலாச்சார சங்கம்'', ''மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கம்'', ''விபுலானந்தர் இசைச் சங்கம்'', ''விவேகானந்த சபை'' ஆகிய பத்து சங்கங்களுமே சேர்ந்து மேற்படி பாராட்டு விழாவை நடத்தின.

பாராட்டுக்கு டி. கே. ஷண்முகம் பதிலளித்த போது, இலங்கையின் கலா ரஸனைக்கு வந்தனை செய்தார்.

''நாடக வாழ்க்கையில் நான் என்றுமே காணாத அற்புதங்களையெல்லாம் இலங்கையில் கண்டேன். ஆர்வம் காட்டி, ஊக்கமளித்து எங்களை உவகையடையச் செய்த இலங்கை ரஸிகர்களை நான் என்றுமே மறக்க மாட்டேன். இதற்கெல்லாம் காரண புருஷராக இருந்த ''சினிமாஸ் லிமிடெட்'' மானேஜர் கே. குணரெத்தினம் அவர்களை நான் நன்றியுடன் பாராட்டுகிறேன்! இப்படியான ஒருவர் இருப்பதால் கலை இங்கு குதித்து வளரும் என்பதில் சந்தேகமில்லை'' என்று நன்றி தெரிவித்தார் ஷண்முகம்.

நகைச் சுவை நடிக மணிகளான டி. என். சிவதாணுவும், 'பிரண்ட்' ராமசாமியும் ஹாஸ்பச் சுவை சொட்டக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்கள்.

''மனிதன்'', ''இன்ஸ்பெக்டர்'', ''ரத்த



பையன்:—(பாடுகிறான்) 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் கொம்பேறித் தாவும்......'

தகப்பனார்:—அடா டா டா...! இந்த எழவெடுத்த பாட்டைப் பாடாதேன்னு எத்தனை தடவை சொல்றது.

பாசம்'', அமரர் கல்கியின், ''கள்வனின் காதலி'', ''எது வாழ்வு?'', ''ஔவை யார்'', ''தமிழ்ச் செல்வம்'' முதலான பல அரிய நாடகங்களை சகோதரர்கள் நடத்தினார்கள்.

'' ஔவையாரில் '' ஷண்முகத்தைத் தேடாதவர்களே இல்லை. ''ஷண்முகத்தின் பற்கள் வெறும் போலிப் பற்களாகத் தான் இருக்க வேண்டும்; அவைகளைக் கழட்டி வைத்து விட்டுத் தான் அவர் ஔவை மாதிரி நடிக்கிறார்!'' என்றெல்லாம் ரஸிகர்களுக்குள் வாதப் பிரதிவாதங்கள் கிளம்பும் அளவுக்கு அற்புதமாக நடித்தார் ஷண்முகம். நல்ல வேளை, ஷண்முகத்தை இத்தோடு விட்டார்களே! ''ஷண்முகம் வாலிபரே அல்ல; அவர் ஒரு அசல் பாட்டி!'' என்று சொல்லப்படாமல் மனுஷன் தப்பினார்.

''கள்வனின் காதலி''க்கு வந்திருந்த ஜன சமுத்திரத்திலிருந்து, இலங்கைத் தமிழர்கள் பேராசிரியர் 'கல்கி' அவர்களிடம் கொண்டிருந்த காதல் எத்துணை சக்தி வாய்ந்த தென்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது.


மாதவிடாய்

நிகரற்ற மருந்து

(தேவி பில்ஸ்) GOVT REGD NO COL 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாகும். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0. மாதங்களான கேஸ்களுக்கு ஸ்பெஷல் ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து

(ஸ்பெக் பில்ஸ்) GOVT REGD NO. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. பில்ஸ் விலை ரூ. 12-0-0 (த. சி. தனி)

SEENU & CO.,

POST BOX NO. 1638 ( ) MADRAS-1.

ஏஜண்ட் சிலோனுக்கு

Colombo . W. C. M. STORES. 82. Main St. Colombo-11


குழுவினருடன் வந்திருந்த சிவதாணு, 'பிரண்ட்' ராமசாமி, 'குண்டு' கருப்பையா, டி. ஏ. ஜெயலக்ஷ்மி, கே. எஸ். சந்திரா, ஹேமலதா, பேபி சந்தோஷ், சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளர் புத்தனேரி ரா. சுப்பிரமணியன் மற்றுமுள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட கலைஞர்களும் இலங்கையின் ரஸிக ஞானத்தைப் பாராட்டினார்கள்.

கலைஞர்களை நெருங்கி, தற்சமயம் சென்னையில் நடத்தப்பட்ட எம். ஆர். ராதா அவர்களின் ''ராமாயண'' நாடகத்தைப் பற்றி அபிப்பிராயம் கேட்கப்பட்ட பொழுது, ''நமக்குத் தேவையில்லாத தீய முயற்சி'', ''மக்கள் உள்ளங்களை வருத்தும் கொடிய முயற்சி'', ''மக்கள் இந்த இழிவான முயற்சிக்கு ஆதரவு காட்டவில்லை'' என்று எல்லோரும் ஒரு குரலில் 'ராமாயண'த்தைக் கண்டித்தார்கள்.

சென்னையில் உருவாக்கப்பட்டுள்ள 'நாடகக் கட்டுப்பாட்டு'ச் சட்டத்தையும் ரொம்பவும் வரவேற்றார்கள். நாடக வளர்ச்சி இதனால் எந்த வகையிலும் பாதிக்கப் படவில்லை' என்று கூறினார்கள்.

கலை ஆர்வம் மிக்க தமிழர்கள் பெருமளவு வாழும் மட்டக்களப்பிலும் டி. கே. எஸ். சகோதரர்கள் நாடக விழா நடத்தாதது இங்குள்ள அனைவருக்கும் ஒரு பெருங் குறையாகவே படுகிறது.

இந்திய ரஸிகர்களையும், இலங்கை ரஸிகர்களையும் இசைத் தட்டு சங்கீதத்தால் மூழ்கடித்து வந்த இலங்கை வானொலியின் 'வர்த்தக ஒலிபரப்பை' மூடி விடும்படி வானொலிக் கமிஷன் முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவு இங்குள்ள ரஸிகர்களுக்குப் பேரிடியா யிருக்கிறது. அகில இந்திய ரேடியோ, இசைத் தட்டு சங்கீதத்தைக் குறைத்துக் கொண்டதும் இலங்கை வானொலியின் 'வர்த்தக ஒலிபரப்பு' அந்தக் கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தது. இதை மூடவேண்டும் என்று கமிஷனர் முடிவு செய்திருப்பதற்குக் காரணம் ''இந்த ஒலிபரப்பை இன்னமும் நீட்டிக் கொண்டு செல்வதால் இலங்கை வானொலிக்கு எந்த வித நன்மையுமே இல்லாதிருப்பது'' தானாம்!

# அம்பி ஷூட்டிங் பார்க்கிறான்

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

இதோ பார்த்தாயா; இந்த 'மைக்'கையும் அந்த இயந்திரத்தையும் ஒன்று சேர்க்கும் கம்பி'' என்று காட்டினேன்.

''இதற்கு என்ன பெயர்' என்று இடைமறித்துக் கேட்டான் அம்பி. இதற்குப் பெயர் ''மிக்சர்''.


பிறகு மீண்டும் ''ஸைலென்ஸ்'' என்ற சப்தம். அம்பியை வாய் பேசாமல் நடப்பதை கவனிக்கச் சொன்னேன். 'மானிட்டர்' 'என்று ஒலிப்பதிவாளர் கேட்க, மீண்டும் ஒத்திகை செய்யப்பட்டது. எல்லாம் சரியாகப் பார்த்துக்கொள்ள, 'மானிட்டர்' கேட்பது வழக்கம் என்றேன். மணி அடிக்கப்பட்டது. 'ரெடி பார் டேக்' என்றார் டைரெக்டர். ஒளிப்பதிவாளர் ''ஆல் லைட்ஸ் ஆன்!'' என்றார். எல்லா விளக்குகளும் பளிச்சிட்டன. ''எஸ், ரெடி, கிளாப்!'' என்றார் டைரெக்டர். ஒரு பையன் ஒரு மரப் பலகையை நடிக நடிகையர் முகத்தை மறைத்தும், காமிராவுக்கு எதிராகவும் பிடித்தான். ஒரே நிசப்தம் நிலவியது. 'ஸ்டார்ட்' என்றார் டைரெக்டர். 'கிர்' என சப்தம் கேட்டது. மரப் பலகையை பிடித்திருந்தவன் 'டப்'பெனத் தட்டி விட்டு ஒரு பக்கமாக ஓடி ஒளிந்தான்.

கதாநாயகியும் நாயகனும் பேசினர்—சில வார்த்தைகளை. 'கட்' எனக் கத்தினர் டைரெக்டர். காமிரா ஓடுவது நிறுத்தப்பட்டது. பிறகு விளக்குகளை அணைக்க உத்தரவிட்டார் ஒளிப்பதிவாளர். கசமுசவெனப் பேச்சு சப்தம். அம்பி, ''அது என்ன ளாப்'' என்றான். நான் சிரித்துக் கொண்டே, ''ளாப் அல்ல; கிளாப்—'கிளாப்ஸ்டிக்' என்பது முழுப் பெயர். அதில் எடுக்கப்படும் காட்சியின் நம்பரும், அதன் உட் பிரிவுகளின் நம்பர்களும், எத்தனை முறை இதே காட்சி எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் எண்ணிக்கையும் எழுதப்பட்டிருக்கும். ''சீன் நெ.'' என்றும், அதன் உட்பிரிவுக்கு ''ஷாட்டு நெ.'' என்றும் அது எத்தனை தடவை எடுக்கப்பட்டது என்பதற்கு ''டேக்'' என்றும் பெயர். இந்தப் பலகையில் எழுதியுள்ளது பட்த்திலும் பதிவாகும், அதே சமயம், அந்தப் பையன் கிளாப்பை 'டப்' என்று அடித்தது ஒலி இயந்திரத்தில் பதிவாகும். இப்படியாக ஒளியும், ஒலியும் தனித்தனியே இரு பில்ம்களில் பதிவாகிறது. பிறகு இந்த பில்ம்களை—அதாவது நடிப்பையும் பேச்சையும்—எந்த இடத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து ஒன்று சேர்க்க வேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்காகவே 'கிளாப்ஸ்டிக்' ஏற்பாடு. இதில்லையேல் வாயசைப்பிற்கு ஏற்ற மாதிரியில் பேச்சு பொருந்தாது. படச் சுருள்கள் எடிட்டிங் ரூமில் காட்சிக்குத் தயாராக்கப்படுகையில் கிளாப் ஸ்டிக் நம்பர்களும், 'டப்' என்ற சப்தங்களும் வெட்டி எறியப்படும். ''கிளாப் ஸ்டிக்'' தட்டுபவரை 'கிளாப் பாய்' என்று அழைக்கிறார்கள்.

''டைரெக்டர் 'ஸ்டார்ட்' என்று சொன்னவுடன், ஒலிப்பதிவு செய்பவர், ஒலிப்பதிவு இயந்திரத்தை வேலை செய்யும்படி செய்வார். ஒளிப்பதிவு இயந்திரத்திலுள்ள படச் சுருளும் சுழலுகிறது. ஒலிப்பதிவு யந்திரத்தில் 'கிர் கிர்' என சப்தம் செய்யப்படுகிறது. இதை ''பஸ்ஸர்'' என்பார்கள். இந்த 'பஸ்ஸர்' கேட்ட ஒரு நொடிக்கெல்லாம் ''கிளாப் ஸ்டிக்' தட்டப்படும். நடிக நடிகையருக்கு இதுதான் எச்சரிக்கை. 'கிளாப் பாய்' மறைந்ததும் அவர்கள் பேச, நடிக்க ஆரம்பிப்பார்கள். குறிப்பிட்ட அந்தக் காட்சியில் பேச வேண்டியதைப் பேசி நடித்தான பின் டைரெக்டர் 'கட்' என்பார். உடனே ஒலி, ஒளி இயந்திரங்கள் நிறுத்தப்படும். விளக்குகளும் அநாவசியமாய் எரியாமல் அணைக்கப்படும்.

'' ஒளிப்பதிவு இலாகாவினருக்கோ, அல்லது ஒலிப்பதிவு இலாகாவினருக்கோ சிறிது சந்தேகம் ஏற்பட்டு திரும்ப அதே காட்சியை எடுக்க நினைத்தாலும் சரி, அல்லது டைரெக்டரின் திருப்திக்கு ஏற்ற முறையில் அக் காட்சி அமையாததால் திரும்ப எடுக்க நினைத்தாலும், சரி, அதற்கு ''டேக் 2'' என்று சொல்லி மீண்டும் எடுப்பார்கள். அப்பொழுதும் சரியாக அமையவில்லை என்றால், 'டேக் 3' என்று ''கிளாப் ஸ்டிக்'' கில் குறிப்பிட்டு மீண்டும் எடுப்பார்கள்'' என்று முடித்தேன். அம்பி நான் சொன்னவைகளைப் புரிந்து கொண்டதாக அறிந்தேன்.

மறுபடியும் ஒளிப்பதிவு இலாகாவைச்



**ரோஹிணியின் ''கிருஹலக்ஷ்மி'' தமிழ்ப் படத்தில் எம். கே. ராதா சிகரெட் பற்றவைப்பதைக் கூட நிறுத்திவிட்டு ரஸிப்பது அஞ்சலி தேவியின் அழகையா? சங்கீதத்தையா?**

சேர்ந்தவர்கள் பெரிய தண்டவாளம் போன்ற ஒரு மரத்தண்டவாளத்தைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தார்கள். காமிரா பொருத்தப்பட்ட ஒரு சிறு தள்ளுவண்டியை அதன்மீது ஏற்றினர்கள். இதைப் பார்த்த அம்பி, ''இது எதற்காக, ஸார்?'' என்று கேட்டான்.

''இது, காமிரா முன்னுக்கோ, பின்னுக்கோ, அசையாமல், மெதுவாகப் போவதற்கு உபயோகப்படும் 'டிராக்'. காமிரா பொருத்தப்பட்டுள்ள வண்டிக்கு 'டிராலி' அல்லது 'டாலி' என்று சொல்லுவார்கள். காமிரா உயர்த்தப்படுவதற்கோ, தாழ்த்தப்படுவதற்கோ, இதில் வசதிகள் உண்டு. ''வின்டன் டாலி'' (டிராலி) என்ற இயங்கு இயந்திரம் மிகவும் சௌகரியம் வாய்ந்தது. இந்த வண்டியை இத் தண்டவாளத்தில் ஏற்றுவதன் காரணம், முன்னுக்கோ, பின்னுக்கோ காமிராவை, அசையாமல் நகரச் செய்வதற்கு உபயோகப்படுகிறது. இம்மாதிரி தரையிலே அவ்வண்டியைத் தள்ளலாம என்ருலும் மேடு பள்ளங்கள் இருந்தால், காமிரா ஆடிப் போகும். இதைத் தவிர்க்க வேண்டியே, சமன் செய்யப்பட்ட வழுவழுப்பான 'மரத் தண்டவாளம்' உபயோகிக்கப்படுகிறது. இப்படி எடுக்கப்படும் காட்சியை 'டிராலி ஷாட்' அல்லது 'டாலி ஷாட்' என்று கூறுவார்கள்'' என்று முடித்தேன்.

உடனே அம்பி, ''ஆமாம் ஸார், இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது. கதாநாயகிகள் கடவுளைக் கும்பிடும் சமயங்களிலெல்லாம் இந்த மாதிரி 'டிராலி ஷாட்'டுகள் எல்லாப் படங்களிலும் வருகின்றன, முதலில் கொஞ்ச தூரத்தில் காட்சியளிக்கும் கதாநாயகி மெதுவாக நம் பக்கம் நகர்ந்து வருவது போல் காட்டப்படும் காட்சிகளை இப்படித்தானே தயாரிக்கிருர்கள்?'' என்று கொஞ்சம் உரக்கவே கேட்டுவிட்டேன். நான் தலையசைத்துவிட்டு, அவனைக் கொஞ்சம் மெதுவாகப் பேசும்படி கேட்டுக்கொண்டேன். அவன் அடுத்த காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யபபடுவதைக் கவனிக்கலானன். (தொடரும்)

# பேய்க் காதல்

புஷ்பத்துறை சுப்ரமண்யம்.

134160

நண்பர்கள் ராமுவும் சோமுவும் சந்தித்து நாலைந்து வருஷங்கள் தான் ஆனபோதிலும் அன்று நடுத் தெருவில் ஒருவரை ஒருவர் கண்ட போது ஐம்பது வருஷத்திற்குப் பின் சந்திபபவர்கள் போல ஆனந்த பாஷ்யத்தோடு திடீரென இறுக்த் தழுவிக் கொண்டார்கள். ராமுவின் தலை யெல்லாம் நரைத்து தாமிரச் சொம்பு போலாகி விட்டது. உடம்பு இளைத்து அடையாளம் தெரியாது மாறி விட்டான். வாழ்க்கையில் இடித்த பேரதிர்ச்சி அவனை இந்தப் பாழ் மண்டப நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. அந்தக் கதையை அவனே முழு வ்பரத்தோடு சொன்னான்:

காதல் புரிந்து கடிமணம் செய்து கொண்டான் ராமு, காமு என்கிற அழகிய இளம் பெண்ணை. சுவர்க்க போகத்திலும் சொல்ல இயலாத சுத்த அன்பிலும அவர்கள் திளைத்த சமயம் எதிர்பாராமல் காமு மாரடைப்பினால்—காதலின் கடுமையான அதிர்ச்சியினால் — மரணமடைந்தாள். அந்த நிமிஷம் தொட்டு அவர்கள் இருந்த வீட்டை விட்டு இப்போதிருக்கும் வீட்டிற்கு வந்து தனிமையில் தாளாத் துன்பத்தோடு சோகமயமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தான்.

சோமுவை ராமு ஒன்று மிகவும் வேண்டிக் கொண்டான்: “உன்னை மறுபடியும் பார்த்தது மிகவும் விசேஷம். எனக்கு ஒரு உதவி நீ செய்துதான் ஆகவேண்டும். என் பழைய வீட்டிற்குச் சென்று படுக்கையறையில், உள்ள மேஜை டிராயரில் உள்ள சில முக்கியமான கடிதங்களை எடுத்து வரவேண்டும். அவை தேவை. நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும தகுந்தவன் உன்னைத் தவிர எனக்கு வேறு யாருமில்லை. மேலும் அங்கு நிசப்தமாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ளவேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் அவள் இறந்த பின் அங்கே நுழைய எனக்கு மனம் இடம் தரவில்லை. அந்தஅறை,மேஜைச் சாவி முதலியவை உன்னிடம் தருகிறேன். வீட்டிலிருக்கும் வேலைக்காரனுக்கு ஒரு கடிதமும் கொடுக்கிறேன்....” என்று அழுத்தி ராமு சொல்லவே, சோமு அவன் கோரிக்கையை மறுக்க முடியவில்லை.

அடுத்த நாள் அவன் வீட்டிற்கு சோமு சென்றான். அவர்கள் சேர்ந்து சாப்பிட்டார்கள். தானிழந்த இன்பத்தைத் தன் நிலைக்களமாகக் கொண்ட இடத்திற்கு சோமுவை அனுப்புவது குறித்துத் தன்னை மன்னிக்கும்படி ராமு மிகவும வேண்டிக்கொண்டான். பழைய சோக சம்பவங்கள் ராமுவின் மனத்திட்டிலே அலைபாய்ந்து நினைவுச் சரிவிலே விழுந்து விழுந்து அவன் உள்ளத்தைத் துன்பக் கடலாக்கின. அந்த உணர்ச்சி முகக் கண்ணாடியிலே முத்திரையிட்டு நின்றது. முடிவிலே சோமு ராமுவின் பழைய வீட்டிற்குப் போய் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை சாங்கோபாங்கமாகச் சொன்னான். ராமு சொன்ன காரியம் மிகவும் சுலபமானது. நேராக சோமு ராமுவின் வீட்டிற்குப் போக வேண்டியது. அங்கு படுக்கை அறையில் உள்ள மேஜையில் வலது கைப்புறத்து முதல் அடுக்கிலே இருந்த இரண்டு கட்டுக் கடிதங்கள், சில காகிதங்கள் இவற்றை எடுத்து வர வேண்டியது. சாவி அவன் கையிலே இருந்தது. என்ன சிரமம்........?

“உன் உதவியை நான் மறக்க மாட்டேன். ஆனால்....அந்தக் கடிதங்களை நீ படித்துப் பார்க்க மாட்டாய் என்று நினைக்கிறேன்.......” என்ற ராமுவின சொற்கள் சோமுவின் உள்ளததைச் சுட்டன. நண்பனை முறைத்துப் பார்த்

தான் அவன். அதற்கு ராமு "சோமு, என்னை மன்னித்து விடு. என் உள்ளத்தைப் பீடித்திருக்கும் நோய் அது...." என்று பெரிதாக அழத் தொடங்கி விட்டான். அவனிடம் விடை பெற்றுக்கொண்டு சோமு தன் பரோபகாரத் தொண்டை செயலாற்றப் புறப்பட்டான்.

பத்துமைல் தூரத்திலிருந்த அந்த வீட்டிற்கு சோமு ஸைக்கிளில் சென்றான். மழை பெய்து ஓய்ந்திருந்தது. சிறு வாய்க்கால்களில் மீன்கள் துள்ளின. பறவைகள் பாடின. மேடும் பள்ளமுமாகக் கிடந்த அந்தப் பாதையிலே மிகவும் சிரமப்பட்டு சவாரி செய்த சோமு கடைசியிலே நண்பன் வீட்டை அடைந்தான். அப்போது வீட்டு வேலைக்காரனுக்கு ராமு எழுதிக் கொடுத்த கடிதம் தன் சட்டைப் பையில் இருக்கிறதா என்று சோமு சரிபார்த்துக் கொண்டான். எழுதின கடிதத்தை உள் விஷயம் தெரியாமல் நன்றாக ஒட்டியிருந்ததைப் பார்த்ததும் சோமுவுக்கே என்னவோ போலிருந்தது. தொண்டு புரியும் தன்னையே சந்தேகிப்பது போலல்லவா இருக்கிறது. அப்படியே வந்த காரியத்தை விட்டு உடனே ஊர் திரும்பி விடலாம் என்கிற எரிச்சல் அவனுக்கு ஏற்பட்டது. ஒரு வேளை ராமு தாளாத் துயரத்திலே மறதியினால் அவ்வாறு ஒட்டியிருக்கலாமல்லவா? ஆகவே, சோமு பேசாது தான் வந்த கைங்கரியத்திலே முனைந்தான்.


இருபது வருஷத்திற்கு மேலாக குடிவாசனை அறியாத பரிதாபமான நிலையிலே—இடிந்த சுவர்களும், புழுதியும் அபரிமிதமான புல்லும் மண்டிக் கிடந்த முன்புறமும் உடைந்த வாசற்கதவோடு விளங்கிய அந்த வீட்டைப் பார்த்து சோமு அயர்ந்து விட்டான். அந்தப் பாழடைந்த வீட்டைப் போலவே தன் நண்பன் உடலாலும் உள்ளத்தாலும் உடைந்து சிதைந்தது அவன் கண்முன்னே கோரக் காட்சி தந்தது.

வீட்டுக் கதவை பலமாக இடித்த பிறகுதான், எங்கிருந்தோ ஒரு கிழவன் சோமுவை ஆச்சரியத்தோடு விழுங்கி விடுபவன் போலப் பார்த்துக்கொண்டே வந்தான். நண்பன் கொடுத்த கடிதத்தை அவனிடம் தந்ததும் கிழவன் அதைத் திரும்பத் திரும்பப் படித்தான். மேலும் கீழும் பார்த்தான். திருப்பிப் பின்புறம் பார்த்தான். பிறகு தன் இடுப்பிலே அதைச் சுருட்டி வைத்துக் கொண்ட அந்த வேலையாள் சோமுவைப் பார்த்து "என்ன வேண்டும்?" என்றான். "கடிதத்தில் தான் எழுதியிருக்கிறதே. வீட்டிற்குள் போக வேண்டும்...." என்று சோமு சொன்னதைக் கேட்டதும், "அப்படியானால் அந்த அம்மா இருந்த அறைக்குப் போவணுமா?" என்று குறுக்கிட்டான் அவன். சோமுவுக்குக் கோபம் வந்தது. "என்னை என்ன விசாரணை செய்யப் போகிறாயா?" என்றான். கிழவனுக்கு வாய் குளறல் எடுத்தது. "இல்லை ...மன்னிக்கணும். அம்மா இறந்த பிறகு அந்த அறை திறக்கப்படவே யில்லை. கொஞ்சம் பொறுத்தா இதோ நானே போய்....." சோமு குறுக்கிட்டான்: "நீ அங்கே எப்படிப் போக முடியும்? சாவி என்னிடம் இருக்கிறதே?"

"அப்படியானால் வழியைக் காட்டுகிறேன்........" என்று முன்னே சென்றான் வேலையாள். "மாடிப் படிகளை மட்டும் காட்டு. அப்புறம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்...." என்றான் சோமு. "அது வந்துங்க........" என்று ஏதோ சொல்ல வாயெடுத்த கிழவனைத் தடுத்து சோமு, "பேசாமல் இருக்க மாட்டாய்" என்று கோபித்துக் கொண்டு கிழவனைத் தள்ளி விட்டு வீட்டிற்குள்ளே சென்றான்.

முதலில் சோமுவுக்கு இரு அறைகளும் சமையலறையும் தென்பட்டன. அதன் பின் இருந்த பெரிய ஹாலின் ஒரு ஓரத்திலே மாடிப் படிகள் இருந்தன. அவற்றிலே ஏறினதும் அறையின் கதவு பூட்டப்பட்டிருப்பதை சோமு கண்டான். ராமு குறிப்பிட்ட அறை தான் அது. அதைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும் சோமு திண்டாடித் திணறிப் போனான். ஒரே கும்பிருட்டு. மூக்கைத் துளைக்கும் வௌவால் புழுக்கையின் பழைய வாசனை. சிறிது நேரத்திலே இருட்டிலேயே இருந்ததால் அங்கிருந்த சாமான்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படத் துவங்கின.

அலங்கோலமாகக் கட்டில் நாற்காலிகள் கிடந்ததிலிருந்து அது தான் படுக்கை அறை என்பதைக் கண்டு கொண்டான் சோமு. மேலும் அந்தக் கட்டிலில் படுக்கை இல்லை. கிழிந்து



போன பாய்களும்--சமீபத்தில் யாரோ உபயோகப்படுத்தியவை போல் தோன்றிய தலை அணைகளும் கிடந்தன. அங்கு ஒரு ஓரத்திலே ஒரு வாயிற் கதவு பாதி திறந்து இருந்தது. வெளிச்சம் உள்ளே வருவதற்காக அந்தக் கதவை ஆன மட்டும் சோமு இழுத்துப் பார்த்தான். திறக்க முடியாமல் இறுகிப் போயிருந்தது அது. இருக்கிற வெளிச்சம் போதும் என்று அந்த முயற்சிக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, அங்கிருந்த மேஜைப் பக்கம் சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான் சோமு. அந்த மேஜை டிராயரில் தான் ராமு சொன்ன கடிதங்கள் இருந்தன. முதல் அடுக்கிலே உள்ள இரண்டு கட்டுக் கடிதங்களைத் தேடத் தொடங்கினான். அந்த டிராயர் பூராவும் காகிதங்கள் நிறைந்திருந்ததால் அவனால் உடனே அதைத் திறக்க இயலவில்லை.

அந்த சமயத்தில் இருந்தாற் போல் இருந்து, அங்கே ஏதோ சலசலப்பு உண்டாயிற்று. ஜன்னல் கட்டையில் காற்றடித்து சத்தம் உண்டாகிறதென்கிற நினைப்பிலே சோமு பேசாதிருந்தான். சிறிது நேரம் ஆனதும் மீண்டும் அதே — அவன் உடம்பிலே சிறு அதிர்ச்சியை பரவ விடும்—சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் சுய கௌரவம் பாதிக்கப்படும் என்று கம்மென்றிருந்தான். அப்போது தான் அவன் தேடிய கட்டுகள் அவன் கையில் கிடைத்தன. அந்தத் தருணத்திலே அவன் பின்புறமாக நின்று யாரோ விட்ட நீண்ட உஷ்ணப் பெருமூச்சு தன் கன்னங்களில் படுவதை சோமு உணர்ந்தான். அவ்வளவு தான்! பாதி பயத்தினாலும், பாதி அறியாமையினாலும் தான் இருந்த இடத்திலிருந்து எழுந்து பத்தடி தள்ளி நிற்பதைக்

கண்டான். முதலில் அவன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு தோற்றம்—இல்லை நிஜ உருவம்! வெள்ளை உடையிலே உயர்ந்த தோற்றமுடைய மங்கை ஒருத்தி! இதைப் பார்த்ததும் சோமுவுக்கு ஒன்றுமே தெரியவில்லை. பயம் அவன் நரம்புகளிலே பாய்ந்து உடம்பை ஒரு ஆட்டு ஆட்டி வைத்து, இதயத்தை ஓட விடாமல் நிறுத்தி விடப் பார்த்தது. சோமு அச்சம் நெஞ்சைப் பிடிக்க திக்கு முக்காடினான்; தவித்தான். அவனது தைரியமெல்லாம் 'ஸ்பிரிட்' திராவகம் போல மறைந்து போயிற்று.

சோமு பேய் பிசாசுகளை நம்புவதில்லை. சாவைப் பற்றி எண்ணி பயந்தவனும் இல்லை. இருந்தும் மனிதன் பிடிக்காத ஒன்றைப் பற்றிய அச்சம்—அவன் ஆயுளில் அனுபவிக்காத திகில் அவனை இறுகப் பிடித்துக் கொண்டது. தோன்றியவள் பேசாதிருந்தால் அவன் ஒரு வேளை செத்திருப்பான்! ஆனால் அவள் பேசினாள்; இனிமையான, துக்கம் தோய்ந்த குரலில்! அது அவன் இதயத்தைத் தொட்டு உணர்ச்சி நரம்புகளை மீட்டி விட்டது. சோமு எப்படி தன் வயமாக இருக்க முடியும்? ஒரு புறம் ரஸனை, இன்னொருபுறம் பயம். வந்தது பெண்ணோ அல்லது பேயோ என்று அவன் உள்ளம் நிலை கொள்ளவில்லை.

“தாங்கள் எனக்கு ஒரு பேருதவியை செய்ய வேண்டும்; செய்வீர்களா?” என்றாள் அவள். சோமுவினால் ஒரு வார்த்தை கூடச் சொல்லமுடியவில்லை. தொண்டையிலிருந்து புரிந்து கொள்ள முடியாத சத்தம் வெளிவந்தது. “நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். உங்களால் தான் அந்தத் துயரைப் போக்க முடியும். என்னால் பொறுக்க முடியவில்லை. தயவு செய்து என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?” என்று கெஞ்சிய அந்தப் பேதை உருவம் சோமுவுக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியில் பெருமூச்சோடு உட்கார்ந்து கொண்டது.

சோமுவினால் “சரி” என்று தலையசைக்க முடிந்ததே தவிர வாயைத் திறக்க முடியவில்லை. பின்னர் ஆமை முதுகெலும்பினால் செய்யப்பட்ட ஒரு சீப்பை அவள் சோமுவின் கையில் எடுத்துக் கொடுத்து முணுமுணுத்தாள்: “என் தலையை வாரிவிடுங்கள். தலைமயிரை சரிப்படுத்தினால் என் கஷ்டம் விலகும். என் தலையைப் பாருங்கள். நான் எப்படிக் கஷ்டப்படுகிறேன் என்பது தெரியும். தலைமயிர் தான் என்னைத் துன்பத்திற்கு ஆளாக்குகிறது. வாரிவிட மாட்டீர்களா?”

நாற்காலியின் பின்புறம் சரிந்து விழுந்து கிடந்த அவள் தலைமயிர் முடிக்கப்படாமல் வெகுவாக நீண்டு கறுத்துத் தரையிலே புரள்வது போன்ற தோற்றம் தந்தது சோமுவின் கண்களுக்கு. சோமு எப்படி அவளிடமிருந்து சீப்பை வாங்கினான்; அவள் கருநாகம் போன்ற தலைமயிரை கையிலே எடுத்து எப்படி வாரினான் என்பது அவனுக்கே தெரியவில்லை. இப்போது அதை நினைத்தாலும் அவன் உடலும் மனதும் பதறுகின்றன. எப்படியோ மந்திரத்திலே கட்டுப்பட்டவன் போல அவள் தலைமயிரை வாரினான். வகிடு எடுத்தான். மூன்று கால் போட்டு, அதைப் பின்னி, முடிவிலே ரிப்பனும் வைத்தான். இவ்வளவும் தன்னறிவில்லாமல். இதைக் கண்ட அந்தப் பெண் ஆறுதல் பெருமூச்சு விட்டாள். தலை வணங்கி மகிழ்ச்சியோடு 'வந்தனம்' தெரிவித்தாள். உடனே திடீரென்று சோமுவின் கையிலிருந்த சீப்பைப் பற்றிக் கொண்டு முன்னர் தெரிந்த சிறு வாசல் வழியாகவே பறந்தோடி மறைந்தாள்!

தனியாக விடப்பட்ட சோமு நள்ளிரவிலே பயங்கரக் கனவு காண்பவன் உளறியடித்துக் கொண்டு திண்டாடுவது போல சங்கடப்பட்டான். பின்னர் அவனுக்கு சுவாதீனம் ஏற்பட்டது. ஜன்னல் பக்கம் அவன் ஓடினான். அந்த வேகத்திலே அதன் கதவுகளைப் பிடித்திழுத்தான். கதவுகள் திறக்கப்படவே வெளிச்சம் உள்ளே விழுந்தது. உடனே அவன் அந்த வனிதை மறைந்த வாயில் பக்கம் ஓடினான். அது நகர முடியாமல் நன்றாக இறுக அறைந்து மூடப்பட்டிருந்தது. வேறொன்றும் அவனுக்குத் தெரியவில்லை. ஒரு வித பைசாச வேகத்திலே நண்பன் வேண்டிய காகிதக் கட்டுகளை எடுத்துக்கொண்டு அறையை விட்டு தடதடவென்று மாடிப்படிகளில் குதித்து, வீட்டுக்கு வெளியே வந்து சைக்கிளில் ஏறினவன் தான் சோமு; சிட்டெனப் பறந்து தன் வீடு வந்து

[தொடர்ச்சி 73-ம் பக்கத்தில்]

## இது கவர்ச்சிகரமாக இருக்க வேண்டிய சமயம்



மணமிக்க புதிய

# ஆப்கான் ஸ்னோ

பெண்மையின் அழகை பாதுகாப்பதுடன் அதிகரிக்கச் செய்கிறது . .

சருமத்தை நாள் முழுவதும் மழமழப்பாகவும் மிருதுவாகவும் வைக்கிறது......




**அப்கான் ஸ்னோ**

பாடன்வாலா

# பொதுஜனம் பேசுகிறார்

### ★ வேதனை தரும் கதை

வாலிபர்களின் இளமைத துடிப பிற்கு முற்றுப்புள்ளி வைத்து, முன்னேறும் வாழ்க்கைப் பாதைக்கு முட்டுக்கட்டையாய் இருப்பது 'பெரு வியாதி' என்ற நோய். இந்த நோயிலிருந்து மீள முக்கியமாக 'நம்பிக்கை' தேவை. அந்த நம்பிக்கையைச் சீர்குலைக்க "ரத்தக் கண்ணீர்" என்ற திரைப் படம் தியேட்டர்களில் பவனி வருகிறது. சதா குஷ்ட ரோகத்தையே, சுவைத்துக் கொண்டிருக்கும் என்னைப் போன்ற வாலிபர்களுக்கு இந்த "ரத்தக் கண்ணீர்" பெரிய வேதனையையும் வாழ்க்கையிலேயே நம்பிக்கையற்ற விரக்தியையும் உண்டாக்கியிருப்பதைப் பற்றி "ரத்தக் கண்ணீர்" கதாசிரியருக்கும், அதன் முக்கிய நடிகருக்கும், அந்தப் பட முதலாளிக்கும் தெரியாது; தெரிந்திருக்கவும் முடியாது! "எழுத்தாளன்" என்பவன் வாழ்க்கையின் நுணுக்கங்களைத் துருவித் துருவிப் பார்த்து, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும், பயன் தரக் கூடிய நல்ல அம்சங்களை எடுத்துக் கூறும் 'ஒலி பெருக்கி'க்கு ஒப்பானவன்! நம் சமுதாயத்தில் ஆயிரக்கணக்கில் இந்தத் தொழு நோயால் தாக்கப்பட்ட வாலிபர்களும், சிறுவர்களும் 'வேதனை' என்ற தீயிலே வெந்து கொண்டிருப்பதை இந்தக் கதாசிரியரும், பெரு வியாதியின், இயல்புகளை அளவுக்கு மீறி மிகைப்படுத்தி அநுபவமற்ற செய்கையும், அர்த்தமற்ற நடிப்பையும் ஒழுக்கமற்ற ஆங்கில உரைகளை விழுங்கி விழுங்கிப் பேசி நடித்திருக்கும், எம். ஆர். ராதாவும் அறியாமல் போனதென்ன! இந்தப் பெரு வியாதிக்காரர்களுக்கு நன்மை தரக்கூடிய விஷயமும், ஆறுதலளிக்கக் கூடிய விளக்கமும் படத்தில் தரப்படவில்லை. அதற்கு "மருத்துவத்தால் வாழ்க்கையின் பிற்பகுதியை சுபீட்சமாக அநுபவிக்க முடியும்" என்று நம்பிக்கை கொண்டிருக்கும் என் போன்றவர்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்கினது மட்டுமல்ல, கேலி செய்யும் வகையிலும் இந்த "ரத்தக் கண்ணீர்" கதை உருவாக்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்த "ரத்தக் கண்ணீர்" கதை இந்த நோயுள்ள வாலிபர்களுக்கு வேதனை தரும் கதை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐ. மஹம்மத் அலி, செங்கற்பட்டு.**

### கவனிக்கப்படாதது ஏன்?

சென்ற ஆண்டு வெளியான "குடும்பம்" தமிழ்ப் படத்தில் டி. பி. முத்துலட்சுமி சாரதாவின் வீட்டு வேலைக்காரியாக நடித்துள்ளார். குழந்தை சாரதா சிறு பெண்ணாக இருக்கும் பொழுதும், பின் பெரிய பெண்ணாக வளர்ந்த பின்னும், வேலைக்காரியாக நடித்த முத்துலட்சுமியின் தோற்றத்தில் மாறுதலே காணப்படவில்லை. பிரபுவின் தகப்பனாரின்மீது நவரத்ன மாலை திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டு இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்படுகிறார். பின் பிரபு வளர்ந்து ராஜா என்ற பெயருடன் காலேஜில் படிக்கிறான். அவனது தந்தையை ஜமீந்தாரின் பிள்ளை சுட்டுவிடுகிறான். சந்தர்ப்பவசத்தால் அக் குற்றம் ராஜாவின்மீது சுமத்தப்பட்டு அவனைக் கைது செய்ய வருவதும் அதே இன்ஸ்பெக்டர்தான். அவரது தோற்றத்திலும் மாறுதலில்லை. ஆனால் பிரபுவின் தாத்தாவாக நடித்த தங்கவேலுவுக்கு மட்டும் மேக்கப் மாற்றப்பட்டுள்ளது. மற்றவர்கள் விஷயத்திலும் ஏன் இம்மாறுபாடு கவனிக்கப்படவில்லை. இனியாவது மேக்கப் விஷயத்தில் இவ்விதத் தவறுகள் ஏற்படாமல் கவனிப்பார்களா?

**"தமிழரசி", தென்காசி.**

### வருந்துகிறேன்

உலக உத்தமர் காந்தி, அஹிம்ஸா மூர்த்தி, அன்பின் வடிவம், அணையா ஜோதி, பாரதத்தின் தந்தை அண்ணல் காந்திஜியின் ஜீவிய சரித்திரத்தை ஹாலிவுட்டின் பிரபல டைரெக்டர் ஆட்டோ பிரமீங்கர் சினிமாஸ்கோப்பில் தயாரிக்கப் போகிறார். நம் நாட்டுக்காக உழைத்த காந்தி, அல்லும் பகலும் ஓயாது அரும் பாடுபட்ட காந்தி,

பாரதத்தின் மக்களுக்காக உண்ணுவிரதம் இருந்தும், நம் மக்களின் நன்மைக்காக இரத்தம் சிந்திய காந்தி, ஜாதி-மதம்கூடாது எல்லோரும் ஓர் குலம்—எல்லோரும் ஓரினம், எல்லாம் இந்நாட்டு மக்கள் என நினைத்து, ஹரிஜன ஆலயப் பிரவேசம் செய்யவைத்த காந்தியின் வாழ்க்கை வரலாற்றைஒரு வெளிநாட்டவர் தயாரிக்கிருர் என்ருல் தென்னுட்டுப் படத்தயாரிப்பாளர்களை என்ன வென்று சொல்லுவது! நம் நாட்டில் சிறந்த படத் தயாரிப்பாளர் பலர் இருந்தும் நம் நாட்டுக்காக இரத்தம் சிந்திய காந்தியின் சரிதத்தை அவர்கள் தயாரிக்கவில்லை என்பதைக் கேட்டு வருந்தவேண்டி யிருக்கிறது.

**பி. சுப்பராயலு, திண்டுக்கல்.**

## ஆச்சரியமில்லை!

எழுத்தாளர் "துமிலன்" அவர்களால் எழுதப்பட்ட 'புனர்ஜன்மம்' என்ற கதை பொதுவாக மிகவும் வேடிக்கையான நல்ல கதை என்பதை அதைப் படித்த எவரும் ஒப்புக் கொள்வார்கள். "போன மச்சான் திரும்பி வந்தான்" என்ற பெயரால் அதைப் படமாக எடுத்தவர்கள் கதையில் புதுமையைப் புகுத்துவதாக நினைத்துக்கொண்டு பல மாறுதல்களைச் செய்து அபத்தமாக எடுத்திருக்கிருர்கள். ஒரு நல்ல எழுத்தாளரால் எழுதப்பட்ட கதை, நல்ல நடிகர்களும் இருக்கிருர்கள் என்று படம் பார்க்கச் செல்பவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை இப்படம் அளிக்கிறது. இப்படத்தில்வரும் பல அசட்டு ஹாஸ்யங்கள் 20 வருடங்களுக்கு முன் வந்திருந்தால் கூட ஜனங்கள் அதை ரஸித்திருப்பார்களா என்பதே சந்தேகத்துக்குரிய விஷயம். தற்சமயம் படம் பார்ப்போர் எல்லோரும் படத்தின்ஒவ்வொரு அம்சத்தையும் நன்ருகக் கவனித்து படத்தின் தரத்தை நிர்ணயிக்கிருர்கள். அங்கமுத்து தலையில் மப்ளரை சுற்றிக்கொண்டு கார் ஓட்டும் காட்சியும், ரத்னம் வைக்கப்போரை சுற்றிக்கொண்டும் கிணற்றை சுற்றிக்கொண்டும் ஓடும் காட்சியும் மிகவும் அருவருக்கக்கூடியதாக இருக்கின்றன. அந்த சமயத்தில் அவர்களையே கிணற்றுக்குள் பிடித்துத் தள்ளி விடலாமா என்ற ஆத்திரம் ஏற்படுகிறது. 3 மணி நேரமாவது சற்று சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் இருக்கலாமென்று படம் பார்க்கச் செல்பவர்களுக்கு இம்மாதிரியான காட்சிகள் எவ்வளவு ஏமாற்றத்தை அளிக்குமென்பதைப் பட முதலாளிகள் உணர்வார்களா? இம்மாதிரியான படங்களை எடுத்துவிட்டு 'மணிமார்க்கட் டைட்' என்று முறையிடுவதில் பயன் என்ன?

**மஹேஸ்வரி, கடலூர்.**

## மரியாதை செலுத்துங்கள்

பாரத மணிக்கொடியின் பெருமையைப் பற்றிப் பக்கம் பக்கமாக வரைந்து தள்ளுகிருர்கள்; மாநாடுகளில் கொடி ஏற்றத்தின் போது தேசக் கொடியின் மகிமையைக் காப்பாற்ற வீரப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுகிருர்கள்; பச்சை இரத்தம் சிந்தியாவது தாயின் மணிக் கொடியைத் தாழாது பறக்க விடுவோம் என்று படபடப்பாக மேடையில் பரணி பாடுகிருர்கள் வீர இளைஞர்கள். ஆனல், படம் முடிந்து திரையில் தேசக் கொடி காட்டப்படும் பொழுது, மக்களில் பெரும்பாலோர் நடந்து கொள்ளும் முறை மிக கண்டிக்கத் தக்கதாயிருக்கிறது. மோசமான படமாக இருந்தாலும், மூன்று மணி நேரம் சளைக்காமல் பார்க்கிருர்கள். ஆனல், சுதந்திரத்தின் சின்னமாகிய தேசக் கொடிக்கு ஒரு நிமிஷம் மௌனமாக நின்று மரியாதை செலுத்தாமல் அலறி அடித்துக் கொண்டு ஓடும் அவசர மனப்பான்மை வந்து விடுகிறது. தேசக் கொடிக்கு மரியாதை செய்வதில் மக்கள் அசட்டையாக இருப்பதைப் போக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். ஒவ்வொரு படக் காட்சியின் ஆரம்பத்திலும், இடைவேளை சமயத்திலும், படம் முடிந்து பாரத மணிக்கொடி திரையில் காட்டப்படும் பொழுது

### ☆ பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

**ஐ. மஹம்மத் அலி.**

**C. L. R'S. T. I. P. B. No. 1.**

**செங்கற்பட்டு.**

மக்கள் அனைவரும் அவரவர் இடத்தில் மௌனமாக ஒரு நிமிஷம் நின்று அஞ்சலி செய்யவேண்டும்'' என்பது போன்ற அறிவிப்புகள் காட்டப் பட வேண்டும். திரைக் காட்சியின் முடிவில் கொடிக்கு வணக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் துண்டுப் படங்களை இந்திய செய்திப் பட இலாகா எடுத்து ஜனங்களுக்குக் காட்ட வேண்டும். கொடியின் சிறப்பையும் அதற்கு அஞ்சலி செய்வதன் அவசியத்தையும் விளக்கும் சிறந்த பாடல்களை, குரல் நயம் படைத்த இசை வல்லுனர்களைக் கொண்டு உச்சரிப்பு சுத்தத்தோடு பாடச் செய்து, அவைகளை சினிமாக் கொட்டகைகளில் ஒலிபரப்ப வேண்டும்.

பொ. கிருஷ்ணமூர்த்தி,
சிவகெங்கை.

## காலப்போக்கிலே......

சினிமாத் துறையிலே அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உள்ள நமது பாரத நாடு, பத்து வருடங்களுக்குமுன் இருந்ததை விடப் பல துறைகளில் பல விதங்களில் நல்ல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. சில வருஷங்களுக்கு முன் வரை பட ரஸிகர்கள் சிறந்த புராணப் படங்களையும், நல்ல பாட்டுக்களை கொண்டதுமான மிக நீளமான படங்களையே பெரிதும் விரும்பினார்கள். பட ரஸிகர்கள் பாட்டையே பெரிதும் விரும்பியதால் படங்களில் பாட்டுக்களுக்கு அக் காலத்தில் முதல் இடம் அளிக்கப்பட்டு வந்தது. படங்களில் நடிக்க விரும்புவோருக்கு நல்ல நடிப்பும் முகவெட்டும் மாத்திரமின்றி, இனிமையான சாரீரமும் தேவையாக இருந்தது. ஆனால், இன்றைய நிலையோ வேறு. தற்




காலம் படத்தில் நடிக்க நல்ல நடிப்பும், பேச்சுத்திறமையும், முக வெட்டும் மாத்திரமே போதும். திரை உலகில் ஏற்பட்டுள்ள மாறுதல்களில் ஒன்ருக நாம் இதைக் கருதலாம். காலம் மாற மாற கருத்துக்களும் மாறவேண்டியது தானே? திடீரென்று தென் இந்தியத் திரை உலகிலே ஒரு மறுமலர்ச்சி, மாபெரும் புரட்சி ஏவி. எம். தயாரித்து வெளியிட்ட "நாம் இருவர்" என்ற சமூகப் படத்தின் மூலமாக ஏற்பட்டது. ஏவி. எம் மிற்கு அப்படம் அளவற்ற புகழையும், பணத்தையும அளித்ததைக் கண்ட ஏனையப் பட முதலாளிகள் எல்லோரும் சமூகக் கதைகளைப் படங்களாகத் தயாரித்துத் திரையிட ஆரம்பித்தனர். "வேலைக்காரி", "பராசக்தி" போன்ற படங்கள் பட உலகில் பரபரப்பை உண்டுபண்ணின. படத்தின் வெற்றிக்கு அடுக்குச் சொற்களும், அனல் தெறிக்கும் வசனங்களும், ஆவேசப் பேச்சுகளும் தான் காரணம் என்று கருதிய எல்லாப் பட முதலாளிகளும் மேற்படி படங்கள் வெளிவந்த பின்னர் எல்லாப் படங்களிலும் வசனத்திற்கு முக்கியத்வம் அளித்து, நடிப்பையோ அல்லது பாட்டையோ கூட பிரதானமாகக் கருதாமல் இருந்தார்கள். ஒரே மாதிரியான சமூகப படங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன பட ரஸிகர்களுக்கு "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி", "மனம்போல் மாங்கல்யம்" போன்ற முழுநீள ஹாஸ்யப் படங்கள் சமய சஞ்சீவியாகவே இருந்தன. இதிலிருந்து காலப்போக்கிலே மக்களின் ரஸனை மாறுவதை உணர்ந்து பட முதலாளிகள் அதற்கேற்பப் படம் தயாரித்தால், வெற்றி நிச்சயம்.

**"பம்பாய்த் தமிழன்" பம்பாய்-22**



சென்ற மாதம் வெளிவந்திருக்கும் அசோகா புரடக்ஷன்ஸ் "பத்மினி" தமிழ்ப் படத்தில் சந்திக் கலாம் பி. எஸ். கோவிந்தனை.

## எங்கே ஓடி மறைந்தன ?

சென்ற சில மாதங்களுக்கு முன்னல் எங்கு நோக்கினுலும் முன்னல் வெளி வந்த புராணப் படங்களை மீண்டும் தயாரிக்கப் போவதாக அநேக முதலாளிகள் அறிவித்தனர். ஒருவர் அம்பிகாபதியைத் தயாரிக்கப் போவதாக அறிவித்தார். மற்ருெருவர் கண்ணகியை 'பூம்புகார்' என்ற பெயரில் படமாக்கப் போவதாக விளம்பரம் செய்தார். மூன்று தயாரிப்பாளர்கள் சேர்ந்தாற்போல மதுரைவீரனைத் தயாரிக்கப் போவதாக அறிவித்தனர். (பாவம், வேறு புராணக் கதை கிடைக்கவில்லை போலும்!) இதனிடையே இருவர் சக்குபாய், நளதமயந்தி இவைகளைப் படமாக்கப் போவதாக அறிவித்தனர். பழம் பெரும் புராணப் படங்களைப் பார்க்கப்போவதாக ஆனந்த மடைந்தனர் ஒரு சாரார். மற்ருெரு பிரிவினர் இந்நாகரீக காலத்தில் புராணப் படங்கள் ஓடுமா என்று வாதங்கள் செய்தனர். ஆனல் இவ்விரு பிரிவினருக்கும் ஏமாற்றமளிக்கும் வகையில் புராணப் படங்கள், அறிவித்த அறிவிப்பாக இருந்தனவே யொழிய, காரியத்தில எந்தப்படக் கம்பெனியும் இறங்கினதாகத் தெரியவில்லை. எங்கே ஓடி மறைந்

தன அப்புராணப் படங்கள் என்று அப்பட முதலாளிகளை நான் கேட்கிறேன். பதில் சொல்வார்களா அப்பட முதலாளிகள்?

“மைனுவதிப் பிரியன்”, கமுதி.

## நடிகர் தேர்தல்

மேனுட்டில் ஒரு சிறந்த கதையைப் படமாக்குகிருர்கள் என்ருல், கதையை நன்கு ஊன்றிக் கவனித்து, பாத்திரங்களின் தன்மையை நன்குணர்ந்து அதற்கேற்ற நடிகர்களைப் பொறுக்கி எடுத்து, எவ்வளவோ காலமும், பொருட் செலவும் ஆனுலும் பொருட்படுத்தாமல் புகழ் பெற வேண்டும் என்ற ஒரே குறியாகப் படமாகத் தயாரிக்கிருர்கள். அவர்கள் நினைத்தது வீண் போகாமல், ரஸிகர்கள் என்றென்றும் மறக்க முடியாத அமரத்வம் வாய்ந்த படங்களாகவே அவை அமைகின்றன. உதாரணமாகச் சொல்லப் போனுல் ஸெஸில் பி. டிமில்லியின் ‘ஸாம்ஸன் அண் டிலைலா’வில் விக்டர் மெச்சூரின் ஸாம்ஸன் நடிப்பு நம்மால் மறக்க முடியுமா? அல்லது ‘கோவாடிஸ்’ படத்தில் பீடர் உஸ்டினுவ் ஏற்று நடித்த நீரோ மன்னன் பாகத்தைத்தான் நம் நினைவிலிருந்து அகற்ற முடியுமா? இங்கோ, சிறந்த கதை கிடைத்தாலும் நடிகர்கள் பொறுக்கி எடுக்க எங்களுக்குத் தெரியாது எனப் பறை சாற்றுவதுபோல் வெளி வந்திருக்கிறது கஸ்தூரி பிலிம்ஸாரின் “மேனகா”. அக்கதையில் வக்கீல் வராகசாமி ஒரு அப்பாவி, பொல்லாத இரண்டு சகோதரிகளிடம் மாட்டிக கொண்டு விழிப்பவன்; மனைவி, மேனகாவிடம் மட்டில்லா அன்பு கொண்டவன். ஆனுல் எடுப்பார் கைப்பிள்ளை. எவர் எது சொன்னுலும் நம்பி விடுபவன் என்ற அபிப்பிராயம் வரும்படி கதை உள்ளது. ஆனுல் ஏதோ நடிக்க வேண்டும், பொறிந்து தள்ளுவதற்கு நமக்கு நிறைய வசனங்கள் தரப்படவில்லை, தியேட்டர் அதிரும்படி பாடுவதற்கு ஏராளமான பாட்டுகள் தரவில்லை என்ற எண்ணம் பிரதிபலிப்பதுபோல நடிக்கும் கே. ஆர். ராமசாமியை ஏன் பொறுக்கி எடுத்தார்கள்? எல்லாக் கட்டங்களிலும் ஒரே மாதிரி முக பாவத்தைப் பிரதிபலித்து, நமது பிரியத்துக்குப் பாத்திரமாவதற்குப் பதிலாக, நமது பொறுமையையே சோதிக்கிருர் அவர். மேனகாவிடம் கொஞ்சி மகிழ வேண்டிய காதல் கட்டத்தில் கூடவா மரம் மாதிரி இருக்க வேண்டும். சிறந்த கதைகளைப் படமாகத் தயாரித்தால், அதற்கேற்ற பாத்திரங்களுக்கு உயிரூட்டும்படி நடிக்கும் சிறந்த நடிகர்களைத் தேர்ந்து எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கே. ரகுபதி, கும்பகோணம்.

## அமரருக்கு அஞ்சலி

தமிழ்த் தாயின் அரும்புதல்வர், ‘கல்கி’ அமரரானது குறித்து வருந்தாதவர் இல்லை. ‘கல்கி’ சம்பந்தப் படாத கலைத் துறையோ, தமிழ்த் துறையோ இல்லை. அத்தகைய மாபெரும் தமிழ் மகனுக்குத் தமிழகம் அஞ்சலி செய்தல் வேண்டும். அதற்கான ஞாபகச் சின்னங்கள் தமிழகத்திலே வேண்டும். அவரின் அற்புதக் கற்பனைப் படையல்கள் திரைப்படமாக வெளிவர வேண்டும். பண்டைத் தமிழர் மேம்பாடு உயர்த்தும் “பார்த்திபன் கனவு” “சிவகாமி

கூந்தல் வளர....

ஜெமினி

ஹேர் ஆயில்

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது

கூந்தல் வளர்ச்சிக்கு மிகச் சிறந்தது

எங்கும் கிடைக்கும்:

சித்தமணி கெமிகல் ஒர்க்ஸ்

சென்னை — 17

யின் சபதம்'' "பொன்னியின் செல்வன்", சமூகச் சித்திரம் "மகுடபதி" ஆகிய எழுத்தோவியங்கள் திரைப்பட ரூபமாய் வெளிவந்து அழியா நிலை பெறவேண்டும் எனத் தமிழகத்தின் சார்பாக வேண்டுகிறேன். குறிப்பாக "கல்கி"யின் நண்பர், "கல்கி" கிருஷ்ணமூர்த்தி உறுதுணையாய் நின்று வளர்த்த "ஆனந்த விகட"னின் பத்திராதிபர், திரைப்பட உலகின் கீர்த்தி வாய்ந்த 'ஜெமினி' ஸ்தாபன அதிபர் வாஸன் அவர்கள் இந்த அரும்பணியைச் செய்து தமிழரின் உள்ளங்களில் பவனி வரக் கோருகிறேன்.



எரியும் வீட்டில் பிடுங்கியது ஆதாயம்! காதலர்களை பிரிவதற்குள் கப்பறையில் காசு நிறைந்துவிட முயற்சிக்கிறார் தெருப் பாடகர்! சாரங்கபாணி. ஜெமினி கணேஷ், சாவித்திரி தோன்றும் இக் காட்சியை "மிஸ்ஸியம்மா"வில் பார்த்திருப்பீர்கள்.

"புதுவைச் சந்திரன்,"
பாண்டிச்சேரி.

## பின்னணி இசை அமைப்பு

படத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்துவதற்கு உற்ற துணை புரிகிறது பின்னணி இசை என்று சொல்லுதல் மிகையாகாது. ஏனெனில் ஒரு கட்டத்தில் பயங்கரம் தோன்ற வேண்டுமானால் அவ்விடத்தில் காட்சி மட்டும் பயங்கரமாகத் தோன்றினால் போதாது, பின்னணி இசையும் பயங்கரமாக ஒலித்தால்தான் அவ்விடத்தில் படம் பார்ப்பவர்களுக்கு ஒரு பயங்கர உணர்ச்சி ஏற்படும். அதைப் போன்று தான், துக்கக் கட்டங்களில் துயரத்தின் இசை பின்னாலிருந்து ஒலித்தால்தான் அக்கட்டத்தில் துயரத்தின் சாயலை நாம் நன்கு காணமுடியும். ஹிந்தி சங்கீத மந்திரவாதி "நௌஷாத் அலி" இசை அமைத்த படங்களிலெல்லாம் பின்னணி இசையின் மகத்துவத்தை நாம் நன்கு அறிய முடிகிறது. "தேவதாஸ்" திரைப்படத்தின் வெற்றிக்கு நடிப்பு, பாடல்களுடன், பின்னணி இசை அமைப்பும் மிக்க துணை புரிந்தது எனலாம். அதைப் போலவே "பணம்", "பராசக்தி", "ரத்தக் கண்ணீர்" ஆகிய படங்களிலும் நேர்த்தியான முறையில் பின்னணி இசை அமைந்துள்ளது. இசை அமைப்பாளர்களும், படத் தயாரிப்பாளர்களும் பின்னணி இசையின் மகத்துவத்தை உணர்ந்து படங்களில் பின்னணி இசையை அவசியம் அமைத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். ராஜகோபால்,
பாளையங்கோட்டை.

## சென்ஸார் போர்டு

தற்போது சென்ஸார் போர்டு அர்த்தமற்ற முறையில் தன் வேலையைச் செய்கிறது என்பது தெள்ளத் தெரிந்த விஷயம். தமிழ்ப் படங்களில் எந்தக் காட்சிகளை மக்கள் பார்க்கக் கூடாது என்று தயை தாட்சண்யமின்றி வெட்டித் தள்ளுகிறார்களோ, அதே காட்சிகளை (அல்லது அதைவிட மோசமான காட்சிகளை) ஹிந்திப் படங்களிலோ அல்லது அங்கிலப் படங்களிலோ மக்கள் பார்க்கிறார்கள். இதனால் எப்படி சென்ஸார் போர்டு தன் கடமையைச் சரிவர செய்ததாகக் கருத முடியும்? தமிழ்ப் படங்களில் வரும் கதாநாயகிகளின் நடைக்கு ஒரு தடை, உடைக்கு ஒரு தடை என்று விதிக்கும் சென்ஸார் போர்டு, மற்ற பாஷைப் படங்களைப் பார்க்கும்போது தூங்குகிறதா? உதாரணமாக, சமீபத்தில் வெளிவந்த ("Casanova's Big Night") "காஸனோ

வாஸ் பிக் நைட்" என்ற படத்தில் பாப் ஹோப் பெண் வேஷம் போட்டுக்கொண்டு நடிக்கும் காட்சிகள் கள் எவ்வளவு விரஸமாயிருந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அர்த்தமில்லாமல் தமிழ்ப் படங்களில் தோன்றியதை யெல்லாம் வெட்டித் தள்ளிவிட்டு, மேற்குறிப்பிட்ட மாதிரிக் காட்சிகளை யெல்லாம் ஆங்கிலப் படங்களில் அனுமதித்துவிட்டு, "ஏ" சர்ட்டிபிகேட் கொடுத்து விடுவதால் மட்டும் சென்ஸார் போர்டு தன் கடமையைச் செய்துவிட்டதாகாது. விழித்துக் கொள்ளட்டும் சென்ஸார் போர்டு.

ஏ. ஆர். ஸ்ரீனிவாஸன்,
சென்னை-17.


## செய்வாரா?

தமிழ் நாட்டிலே புனித ராமாயணத்துக்கு எதிராக ஒரு கோஷ்டியாரின் "கீமாயண" பயமுறுத்தல் நடந்து வருவது யாவரும் அறிந்ததே. இந்த கீமாயணத்துக்கும் ஒரு தோல்வியை ஏற்படுத்தலாம், எஸ். எஸ். வாஸன் போன்றவர்கள், எப்படி யெனில், புனித ராமாயணத்தை—ராஜரிஷி ராஜாஜ் சொல்லியதைப் போல்-டெக்னிக் கலரிலோ அல்லது புது முறையான சினிமாஸ்கோப் மூலமோ படமாகத் தயாரித்துத் திரையிட்டு இந்த கீமாயண கோஷ்டிக்கு ஒரு சாவுமணி அடிக்கலாம். தமிழ் நாட்டில் பிள்ளையார் உடைப்பு என்ற ஒரு அசட்டுக் காரியத்தைச் செய்த நாளிலேதான் வாஸனின் "ஔவையார்" துணிவுடன் வெளிவந்து தமிழக மக்களை எதிர்ப்பு கோஷ்டியாரின் நாசப் போக்கிலிருந்து காப்பாற்றியது. அதே வாஸன் ராமாயணத்தைச் சிறந்த முறையில் தயாரித்து வெளியிட்டால் இன்று கீமாயணத்தில் மயங்கும் ஒரு சில தமிழக மக்களை நன்மார்க்கத்துக்குக் கொண்டு வர முடியும். இன்றைய நிலையில் இது வாஸன் ஒருவரால்தான் முடியும். இதை அவர் செய்தால் இன்று அவர் அடைந்திருக்கும் சினிமா உலக எவரெஸ்ட வெற்றி ஊர்ஜிதமாகும். இதை அவர் செய்வாரா?

மு. ரா. தனுஷ்கோடி,
வள்பொளா—ஸிலோன்.




தமிழ்நாடு ஏஜண்டுகள் :—சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை.



டி. ஆர். ஆர். புரடக்ஷன்ஸின் ''கோமதி
யின் காதலன்'' தமிழ்ப் படத்தில் சாவித்
திரி பிரதம பாகத்தில் நடித்து வருகிருர்.



ராதா கிருஷ்ணா பில்ம்ஸ் வெளியீடான "உலகம் பலவிதம்" தமிழ்ப் படத்தில் நடித்திருக்கிறார் எம். என். ராஜம்.

# இது செய்தி

[15-ம் பக்கத் தொடர்ச்சி]

தயாராய் இருப்பதாக அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

### விளம்பர மானேஜர் விருந்துபசாரம்

பிரபல விளம்பர ஆலோசக ஸ்தாபனமான டி. ஜே. கீமர் அண்டு கம்பெனியின் டைரெக்டர்களான டக்ளஸ் பெயின், டபிள்யூ. எப். டையர் இருவரும் சென்ற மாதம் சென்னைக்கு வந்திருந்தனர். அவர்களுக்கு கீமர் கம்பெனியின் சென்னைக் கிளை மானேஜர் பி. எஸ். ஜி. ராவ் ஒரு தேநீர் விருந்தளித்து உபசரித்தார்.

### பட ஆரம்ப விழா

ஸ்ரீ கணேஷ் மூவிடோனின் ''கோடீஸ்வரன்'' என்ற தமிழ்ப் படத்தின் ஆரம்ப விழா சென்ற மாதம் 11ம் தேதி, நெப்டியூனில் நடைபெற்றது. பட உலகப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர். பூஜைக்குப் பின், தயாரிப்பாளர் ராதா கிருஷ்ண புஸ்ரூரின் ஒரு வயதுக் குழந்தை காமிராவை முடுக்கிவிட, சிவாஜி கணேசன்-பத்மினி சம்பந்தப்பட்ட ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

### மீண்டும் சினிமாப் பாட்டுகள்

அகில இந்திய ரேடியோவில் மீண்டும் சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படும் என்று இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர். சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படாமல் இருந்ததற்குக் காரணம் படமுதலாளிகளே என்றும், படமுதலாளிகளுடன் புதிதாக ஒப்பந்தம் செய்து கொண்டு மீண்டும் சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படும் என்றும் ஸ்ரீ. கேஸ்கர் தெரிவித்துள்ளார்.

### வாழ்த்துகிறோம்

ஏவி. எம். ஸ்டுடியோவைச் சேர்ந்த சிரஞ்சீவி எஸ். ராமமூர்த்தி சென்ற மாதம் 6ம் தேதி, சௌ. ராஜலக்ஷ்மியை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.


உணவிற்கு சுசியும் ருசியும் அளிப்பது...



டி டி

மிஸ்கி

பெருங்காயம்

THE SCIENTIFIC TT MISKY ASAFOETIDA

ரஷித் ஜம்ஷட் சன்ஸ் & கோ

தலைமை ஆபீஸ்: பம்பாய்-3.

கிளைகள்: மதுரை . கும்பகோணம் . சென்னை

கேஸரி குடீரத்தைச் சேர்ந்த எஸ். டி. ராமஸ்வாமி அய்யங்கார், தமது புத்திரி சௌ. சரோஜா, பி. எஸ்ஸி., எம். பி. பி. எஸ்ஸை சிரஞ்சீவி டி. ஸ்ரீநிவாஸன் பி. ஏ.க்குத் திருமணம் செய்து கொடுத்தார் சென்ற மாதம் 11ம் தேதி சென்னையில் இந்த விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

சங்கித டைரெக்டர் எஸ். வி. வெங்கடராமன், தமது குமாரன் சிரஞ்சீவி எஸ். வி. வரதராஜனுக்கு திருச்சியை அடுத்த குணசீலத்தில் சென்ற மாதம் 25ம் தேதி பிரம்மோபதேசம் செய்து வைத்தார்.

பல படங்களில் நடித்துள்ள ஹாஸ்ய நடிகர் கே. சாயிராம் சென்ற மாதம் சௌ. கே. சுகுணவைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். இம் மாதம் 4ம தேதி இவ்விவாகம் மதுரையை அடுத்த பழங்காநத்தத்தில் நடந்தது.

### ஒத்தெல்லோ நாடகம்

சென்னை, ஜயா ஆர்ட் பள்ளியைச் சேர்ந்தவர்கள சென்ற மாதம் 20ம் தேதி, அண்ணாமலை மன்றத்தில் ''ஒத்தெல்லோ'' என்ற தமிழ் நாடகத்தை நடித்தார்கள். இந்த நாடகம் கலாசார நிதிக்கென நடந்த நாடகம்.

### '' பொன் விலங்குகள் ''

திலகர் ஸ்தானம், ஸ்ரீ இராமகிருஷ்ண உயர்தர ஆரம்பப் பள்ளியில், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தின் ஆண்டு விழா, சென்ற மாதம் 25ம் தேதி நடைபெற்றது. அது சமயம் ''பொன் விலங்குகள்'' என்ற நாடகம் நடிக்கப் பட்டது. நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட அனைவரும் நன்கு நடித்தார்களாம். முக்கியமாக பங்கஜவல்லியாக நடித்த ஆர். எஸ். வி. ராஜன் அசல் பெண்மணி மாதிரியே குலுக்கி மினிக்கி பிரமிக்க வைத்துவிட்டாராம்.

### '' மூன்று நக்ஷத்திரங்கள் ''

மதருஸ் டிரமாடிக் சொஸைட்டியினர் சென்ற மாதம் 20ம் தேதியன்று சென்னை ஹிந்தி பிரசார ஹாலில் ''மூன்று நக்ஷத்திரங்கள்'' என்ற நாடகத்தை போற்றத்தக்க முறையில் நடித்தார்கள். இது தஞ்சை என். விஸ்வநாதனால் எழுதப்பட்ட நாடகம். இதில் தஞ்சை வி. வி. ராமன், தஞ்சை வி. நாராயணசாமி, கீதாராணி, ஜே டி. ருக்மணி முதலியோர் நடித்தனர். குமாரி கல்பகம் நடினம் ஆடினர்.

### தியாகய்யர்வாள் உத்ஸவம்

ஜாம்ஷெட்பூரில் தியாகய்யர்வாள் உத்ஸவம் சென்ற மாதம் 12ந் தேதி முதல் ஒருவாரம் விமரிசையாய் கொண்டாடப்பட்டது. கும்பகோணம் டி. பி. கைலாஸத்தின் சங்கித விருந்துடன் விழா ஆரம்பமாகியது. இதைத் தொடர்ந்து பாலமுரளி கிருஷ்ண, களக்காடு ராமநாராயணய்யர், தேவகோட்டை நாராயணய்யங்கார் முதலிய பலரது கச்சேரிகள் நடைபெற்றன. இவ்விழாவை யொட்டி சுமார் ஆயிரம் ஏழைகளுக்கு அன்னமளிக்கப் பட்டது.

### நாட்டியக் கச்சேரிகள்

விழுப்புரம் சங்கித சபையின் ஆதரவில், மதருஸ் சகோதரிகளின் (குமாரிகள் சசி-கலா) நாட்டியக் கச்சேரி சென்ற மாதம் 20ம் தேதி நடைபெற்றது. அன்று இவர்கள் ஆடிய அயிட்டங்களில் பரதநாட்டிய அயிட்டங்கள் சிறப்பாகவும் ஓரியன்டல் நடனங்கள் ரஸிக்கும்படியும் இருந்தனவாம். எம். கே. செல்வமணியின் சிஷ்யைகள் இவர்கள்.

சென்ற மாதம் 27ம் தேதி, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியின் ஆதரவில், குமாரி பிரமீளா விஸ்வநாதனின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. இக் கச்சேரி மிகவும் சிறப்பாக



மதுரை அடிஷனல் பஞ்சாயத் ஆபீஸர் ஸ்ரீ. வெங்கட ராவின் புத்திரி சௌ. சகுந்தலாவுக்கும், வேலூர் மராமத்து இலாகாவைச் சேர்ந்த சிரஞ்சீவி எஸ். ரகுநாதனுக்கும் சென்ற மாதம் 11ம் தேதி மதுரையில் திருமணம் நடந்தது. மணமகளின் தகப்பனர் (பம்பாய்) கடம் மோர்சிங் வித்வானன ச. ராஜாமணியின் சகோதரர் ஆவார்.

அமைந்திருந்தது. ஹிந்தோளத்தில் ஆடிய தில்லானா புது மாதிரியில் விறுவிறுப்பாக இருந்தது. "சரிகம–கொங்கு", "வருகலாமோ" பாடல்களுக்கு அவர் பாவம் பிடித்து ஆடியது நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை. அன்றைக் கச்சேரி சிறப்பாக அமைய பெரிதும் காரணமாக இருந்தவர் (பதங்கள் பாடிய) அகிலா சங்கர் என்றால் மிகையாகாது.



கேவர்ட் போட்டோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ. பீகன் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம் இது. அலைடு போட்டோகிராபிக்ஸ் சென்னை மானேஜர் ஸ்ரீ. பி. பி. ராமய்யர். ஏஷியாடிக் மெர்க்கன்டைல் ஏஜன்ஸி ஸ்ரீ. என். ஆர். மஹாதேவன், டாக்டர் ஏ. பீகன், அலைடு போட்டோ கிராபிக்ஸ் மானேஜிங் டைரெக்டர் ஏ. ஆர். லேடன் ஆகியோரை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## நாட்டிய அரசிகள்

சென்ற மாதம், அண்ணாமலை சர்வகலாசாலையின் வெள்ளி விழாக் கொண்டாடப் பட்டது. அவ்விழாவில் ஒருநாள் லலிதா பத்மினி சகோதரிகளின் நடனக் கச்சேரி நடைபெற்றது. அவர்களைப் பாராட்டி சர்வகலாசாலையின் சார்பில் இவ்விருவருக்கும் "நாட்டிய அரசிகள்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

## சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்னை, சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர், சென்ற மாதம் 13ம் தேதி, "தேவதாஸ்" தமிழ்ப் படத்தின் காட்சியை ஸ்டார் டாக்கீஸில் ஏற்பாடு செய்திருந்தார்கள். தாங்கள் நடத்த திட்டமிட்டிருக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச சினிமாப் பட விழாவுக்கு நிதி திரட்டவே இக் காட்சியை அன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்படத்தில் நடித்துள்ள நாகேஸ்வர ராவும், சாவித்திரியும் அன்றைய தினம் மேடை மீது தோன்றினார்கள்.

## டெக்னி கலர்–லாபரட்டரி

பம்பாயில் சீக்கிரமே—டெக்னிக் கலர் படங்களைப் பிரதி எடுக்கும் ஒரு லாபரட்டரி ஆரம்பமாகும். இந்த லாபரட்டரியை இந்தியப் படத் தொழில் பிரமுகர்கள் சிலரின் கூட்டுறவுடன் ஒரு பிரிட்டிஷ் கம்பெனி ஆரம்பித்து நடத்தும். பிரிட்டிஷ் கம்பெனியைச் சேர்ந்த ஹேய் ஹாரிஸன் என்பவர் இது சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்ய இந்தியா வந்துள்ளார். அவர் சென்ற மாதம் மூன்றாவது வாரத்தில் சென்னைக்கு வந்திருந்து பல ஸ்டுடியோக்களைப் பார்வையிட்டனர்.

## சென்னையில் கச்சா பிலிம் பஞ்சம்

லண்டனில் ஏற்பட்டுள்ள துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாகவும், சூயஸ் கால்வாய் தற்காலிகமாக அடைக்கப் பட்டதாலும், சென்னையில் கச்சா பிலிமுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

## கலைக் கண் காட்சி

மதராஸ் கலாசார அகாடமியினர், ஒரு கலைக் கண் காட்சியை சென்ற மாதம் 9ம் தேதி ஆரம்பித்து நடத்தினார்கள். இக் கண்காட்சியை சென்னை ஆர்ட்ஸ் அண்டு கிராப்ட்ஸ் பள்ளியைச் சேர்ந்த டி. பி. ராய் சௌத்ரி ஆரம்பித்து வைத்தார்.

## பூமிதானப் படம்

வினோபாபாவே பற்றியும், பூமிதான இயக்கம் பற்றியும் பி. கே. ஆத்ரே என்பவர் ஒரு பிரசாரப் படத்தை எடுக்கப் போகிறார். இப்படத்தின் தயாரிப்புச் செலவுக்கான பணத்தைத் தாம் வசூலித்துக் கொடுப்பதாக ஜெய பிரகாஷ் நாராயண் வாக்களித் திருக்கிறாராம்.

# சங்கமம்

[34-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்தப் பைத்தியக்காரன் என்னையோ என் பேச்சையோ சட்டை செய்யவில்லை. தன் போக்கில், அப்படத்தைப் பார்த்து, "திவாகரா-திவாகரா" என்று புலம்பிக் கொண்டே யிருந்தான். என் பார்வை யும் அப் படத்தின் மீது பாய்ந்தது; மறு நிமிஷம் நான் திடுக்கிட்டேன். ஏனென்றால், கோட்ஸேயால் எனக்கு அனுப்பப்பட்டு, நான் சந்நியாசம் பெற்றுக் கொண்ட போது, ஓர் குடியா னவக் குழந்தைக்குக் கொடுத்துவிட்ட, திவாகரனும் யமுனாவும் உட்கார்ந்தி ருந்த படம் அது! வெகுவாகப் பழகி பல இடங்களில் கிழிந்து, உருவங்களும் அநேகமாக அழிந்து போயிருந்தாலும், அதை என்னால் நன்றாக அடையாளம் புரிந்து கொள்ள முடிந்தது. அப் படத் தை அவன் வைத்து அழுது கொண்டி ருந்ததன் காரணமும் எனக்கு உடனே விளங்கி விட்டது. அவனுடைய குழந் தை தான் கோட்ஸேயிடம் வளர்ந்து வரும் திவாகரன்!

எனக்கு அவனிடம் இரக்கம் உண்டா யிற்று. மெல்ல அவனுடன் பேச்சுக் கொடுத்தேன். அவன் குழந்தை உயி ரோடிருக்கிறான் என்றும், அவனிடம் அழைத்துப் போவேன் என்றும் சொல்லி, அவன் யார் என்பதைக் கேட்டு அறிய முயன்றேன். என் கேள்விகளுக்கு, பித் துப் பிடித்த நிலையிலிருந்த அவன், கோவையாகப் பதில்கள் தரவில்லை என்றாலும், அவன் தான் உன் கணவன் ரங்காராம் என்றும்......."

"என்ன? என் கணவரா?" என்று ஆனந்தக் கூச்சலிட்டேன் நான். "எங்கே அவர், அண்ணா? உன்னோடு கூட்டி வரவில்லையா?" ஆவலும் ஆனந் தமும் ஒருபுறமும், விபரீத நினைவுகளின் பீதி ஒருபுறமும் சூழ்ந்து என்னை அச்சம யம் தத்தளிக்கச் செய்தன.

"ரங்காராமிடமிருந்து நான் கிரகித்த தகவலிலிருந்து கடல் விபத்தில் நீ மாத் திரம் இறந்து விட்டாய், அவர்கள் இருவரும் தனித்தனியே காப்பாற்றப் பட்டு பிரிந்து விட்டனர் என்று நான் ஊகித்துக் கொண்டேன். கோட்ஸேயி டம் அழைத்துச் சென்று, திவாகரனைக் காட்டுவோம். ஒருகால் இவன் பைத்தி யம் தெளிந்தாலும் தெளிந்து விட லாம்; தெளியாவிட்டால், அவரிடமே ஒப்படைத்து விடுத் திரும்பிச் செல் வோம் என்றெண்ணி, அவனைத் 'தாஜா' பண்ணி என்னுடன் அழைத்துக் கொண்டு பிரயாணத்தைத் துவக்கி னேன். ஒருவிதமாக, அவனை பம்பாய்க் கும் கூட்டி வந்து விட்டேன். ஆனால் இங்கே இருக்கும் நிலவரங்களை அறி ந்து கொண்டு, அதன் பிறகு அவனை இவ் வீட்டுக்கு அழைத்து வந்தால் போதும் என்று எண்ணி, அருகிலுள்ள ஒரு மடத்தில் உட்கார்த்தி வைத்து விட்டு வந்திருக்கிறேன்."

"புறப்படு அண்ணா; எழுந்திரு இந்த விவரத்தை ஆரம்பத்திலேயே சொல்லா மல் எத்தனை நேரத்தை வீணே அடித்து விட்டாய்? ஐயோ, அண்ணா! பைத்தியம் பிடித்த நிலையிலுள்ள அவரைத் தனி யே விட்டு வந்திருக்கிறாயே; எங்கேயா வது போய் விட்டார் என்றால்...........? எழுந்திரு அண்ணா" என்று அண்ணா வின் கைகளைப் பற்றி இழுத்துக் கொண்டு வெளியே ஓடினேன்.

இரண்டு பர்லாங் தூரத்தில் இருந்த அந்த மடத்தை நான் எப்படி இரண் டே நிமிஷங்களில் அடைந்தேன் என் பது எனக்கே தெரியாது. வருஷக் கணக் காக வரண்டு கிடந்தாலும், காட்டாறு பெருக்கெடுத்துக் கொண்டால், கரை யை உடைத்துக் கொண்டு எத்தனை வேகமாகப் பாய ஆரம்பித்து விடுகிறது! அது போன்றதொரு மனப் பெருக்கே என்னை அத்தனை வேகமாகப் பாயச் செய்திருக்க வேண்டும்.

மடத்தின் வெளி மண்டபத்தில் எலும்பும் தோலுமாக, காடு போல் மீசை தாடிகள் வளர்ந்து முகத்தை மறைத்திருக்க, கந்தல் ஆடைகளுடன் எங்கோ கவனமாக உட்கார்ந்திருந்த என் பதியைக் கண்டதும், "கடைசியில் இந்த நிலையிலாவது உங்களை உயி ரோடு காணக் கொடுத்து வைத்தேனே!" என்று அவர் கால்களில் விழுந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்.

"ரங்காராம்; இதோ பார் அப்பா; இவளைத் தெரிகிறதா? நன்றாக உற்றுப் பார். உன் மனைவி நர்மதா, ரங்காராம்" என்று அண்ணா அவர் கவனத்தை இழுத்தான்.

"நர்மதா! நர்மதா!" என்று கூறிக் கொண்டே அவர் என் தலையை நிமிர்த் திப் பார்த்தார். பிறகு "இல்லை; இல்லை.

இவள் என் நர்மதா இல்லை. ஏண்டா பொய் சொல்கிறாய்? என் திவாகரனைக் காட்டுவதாக அழைத்து வந்து விட்டு யாரையோ கூட்டி வந்து என் கண்மணி நர்மதா என்கிறாயே" என்று அவர் அண்ணாவைக் கோபத்துடன் விழித்துப் பார்த்தார்.

"ஐயோ! நான் உங்கள் நர்மதா தான். கடவுள் கருணை கூர்ந்து எனக்குக் கண்களைத் தந்திருக்கிறார். இதோ, என்னைப் பாருங்கள். என் கன்னத்திலுள்ள இந்த வடுவைப் பாருங்கள். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா, ஒருநாள் ஆப்பிள் கன்னங்கள் என்று......."

கணவன்-மனைவியரிடையே வெளியே சொல்ல இயலாத அந்தரங்கள் பல உண்டு. எத்தனை காலமானாலும், எவ்வளவுதான் உயர்வு—தாழ்வுகளினால் மாறிவிட்டாலும், அந்த அந்தரங்க நிகழ்ச்சிகளின் நினைவு அவர்கள் உள்ளத்திலிருந்து மறையவே மறையாது. அப்படிப்பட்ட ஒரு ரகசிய நிகழ்ச்சியின் சின்னந்தான் என் வலக் கன்னத்தில் ஒரு நாள் அவர் அன்பு வெறியோடு ஏற்படுததிவிட்டிருந்த அந்த வடு!

மண் புழுவில் ஒருவித வகையுண்டு. வருஷக் கணக்காகத் தன் நினைவின்றி, கிடந்த இடத்திலே சுருண்டு கிடக்கும் அவை. மழை, வெய்யில், காற்று முதலிய எந்தச் சீதோஷ்ண மாறுதலும் அவற்றை அந்த ஓய்வு நிலையிலிருந்து உசுப்ப முடியாது. ஆனால், பொட்டில் அடித்தாற்போல், ஒரு குச்சியாலோ, விரல் நுனியாலோ அவற்றை லேசாகத் தொட்டுவிடுங்கள். ஒரே துள்ளாகத் துள்ளி நெளிந்து ஓடத் தலைப்பட்டு விடும். அதுபோலத்தான் மனிதரின் பித்துப் பிடித்த நிலையும். பொட்டில் அடித்தாற்போல், அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த இன்ப-துன்ப நிலைகளை ஞாபக மூட்டிவிட்டால் போதும், அவர்களுடைய சமாதி நிலை கலைந்துவிடும். குழந்





சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜென்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14, கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்: **B. பால பட்டாபி செட்டியார்,** (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) **கோயமுத்தூர்.**

தையையும் மனைவியையும் இழந்து விட்டதாக எண்ணியதாலோ, அல்லது விபத்திலே ஏற்பட்ட ஏதேனும் காயத்தாலோ, மூளை கலங்கிவிட்ட என் கணவரையும், இப்படித்தான், நான் வெளியிட்ட அந்தத் தாம்பத்திய ரகசியம் கணத்தில் தன் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. என் கன்னத்து வடுவைக் கைகளால் தடவிக் கொண்டே, 'எத்தனை வெறியனாய், அன்று உன் கன்னத்தைக் கடித்துவிட்டேன்' என்று, அருகில் அண்ணா நிற்பதையும் உணராமல் என்னைத் தம் மார்போடு அணைத்துக்கொண்டார்!

கதையை வளர்த்துவானேன். எதிர்பாராதபடி எனக்குக் கணவர் கிடைத்துவிட்டார். அவருடைய பைத்திய நிலையும் கலைந்து விட்டது.

அடுத்தாற்போல்?

ஆமாம்; என் திவாகரன்!

அவன் என் மகனே என்பதை உணர்த்த வேண்டாமா? நான் உடனே ஸ்நேகபவனத்துக்குக் கிளம்பிவிட்டேன். ''இருங்கள்; நம் திவாகரனுக்கு இந்த விவரங்களைக் கூறி அவனை அழைத்து வருகிறேன்'' என்று கணவரிடமும் அண்ணாவிடமும் கூறிவிட்டுத் துள்ளி ஓடினேன்.

டணார்!

வாயில் நிலை, என் மண்டையில் ஒரு போடு போட்டது—'ஒரேயடியாகத் துள்ளிவிடாதே!' என்று எச்சரிப்பது போல். ஆனால் நான் அடியின் வேதனையையோ, அதன் எச்சரிப்பையோ, லக்ஷியமே செய்யவில்லை. பெரிய ரணம் ஒன்று குணமாகும்போது, டாக்டர் சிறிதாக ஒரு இஞ்செக்ஷன் ஊசியைக் குத்தினால் யாராவது அது தரும் வேதனையைப் பொருட்படுத்துவார்களா?

'திவாகரன், நான் பத்து மாதம் சுமந்து பெற்ற பாலகன்; கருணை வள்ளலான கடவுள், என் மகனைக் கடல் விபத்திலிருந்து காப்பாற்றி, அவனை வளர்க்கும் பாக்கியத்துக்கும் என்னையே ஆளாக்கியிருந்தார்' என்பதை அறிந்த போது. நான் என்னையே மறந்து களிப்படைந்து, நானே, திவாகரனே, இது வரையில அறிந்திராத அந்த ஆச்சரிய நிகழ்ச்சியை அவனிடம் கூறி, அவனை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்த வேண்டுமென்று ஸ்நேகபவனத்தை நோக்கி ஓடினேன் அல்லவா? பாதி வழி சென்ற பிறகு, எனக்கு ஒரு சந்தேகம் உதித்தது. 'எல்லாம் சரிதான், ஆனால் திவாகரன் இதை நம்ப வேண்டுமே! ஏற்கெனவே, மகன் உரிமை கொண்டாடி, தன்னை அடக்கி ஆள முற்படுபவள் என்று என் மீது அடங்காச் சினம் கொண்டுள்ள அவன், இப்பொழுது, வெளியிடப் போகும் நிகழ்ச்சிகளை, நானும் என்னைச் சார்ந்தவர்களும் திட்டமிட்டுத் தொகுத்து உரைப்பது என்று கருதிவிட்டால் என்ன செய்வது? ஐயோ! அதை, அவன் ஐயத்தைப் போக்கும் வண்ணம் நிருபிக்க ஆதாரம் எதுவும் இல்லையே! கடவுளே, இவ்வளவு தூரம் அருள் கூர்ந்து, திவாகரனை என் மகன் என்று காட்டிய நீ, அதை அவனையும் நம்பச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், இன்று நீ அளித்துள்ள இந்தப் பாக்கியங்கள் அனைத்தும், என்வரையில் பயனற்றவையே! ஆண்டவனே, திவாகரனுக்கு என்மீது ஏற்பட்டுள்ள வெறுப்பை இச்சமயத்திலேனும் போக்காவிட்டால், என் வார்த்தைகள் ஒன்று கூட அவன் செவியில் ஏறு' என்று பலவாறு எண்ணிக்கொண்டே ஸ்நேக பவனத்தை நெருங்கினேன்.

பங்களாவை நெருங்கிக் கொண்டிருந்தபோது எனக்கு வேறொரு கவலையும் ஏற்பட்டது. முதலில் எனக்கு பங்களாவுக்குள்ளே செல்ல அனுமதி கிட்டுமா? முன் அனுபவத்தை ஒட்டி, பங்களா காவற்காரன் என்னை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டால்........?

நல்லவேளையாக, இந்தக் கவலை பங்களாவை எட்டியதும் நீங்கிப் போயிற்று. 'கேட்'டை அடுத்து இருக்கும் புரையில் அமர்ந்திருக்கும் தர்வானை இன்று அங்கே காணவில்லை. ஏதேனும் வேலையாக வெளியே போயிருந்தானோ, என்னவோ? எப்படிவேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்; என்வரையில், நான் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி வெற்றிபெறும் என்பதற்கு அது ஒருசுபசூசகம் போலவே தென்பட்டது. கிடைத்த தருணத்தை நழுவ விடாமல் உள்ளே புகுந்து விட்டேன்.

பங்களா வராந்தாவில் அடி எடுத்து வைத்ததும் வேலைக்காரி ஒருத்தி உள்ளேயிருந்து வந்தாள். அவளிடம், 'திவாகரன் வீட்டில் இருக்கிறானா? என்ன செய்து கொண்டிருக்கிறான்?' என்பதைப் பற்றி விசாரித்தேன்.

அந்த வேலைக்காரி, முன்பு திவாகரன் என்னை வீட்டைவிட்டு விரட்டிய விஷயத்தை அறியாதவள் போலிருக்கிறது; மிகவும் பணிவுடன், சொன்னாள்: "எஜமானைத்தானே கேக்கறீங்க? அவர் தூங்கிக் கொண்டிருக்கிறார் போலிருக்குது, அம்மா; அவருடைய அறை, முதல் மாடியில், மாடிப்படி யேறியதும், வலது கைப்புறத்தில் மூன்றாவதாக இருக்கிறது. அங்கே போய்ப் பாருங்கள். இல்லாவிட்டால், அதற்கு அடுத்த அறை எஜமானி அம்மாளுடையது. அவர்கள் எங்கேயோ, புறப்பட்டுக் கொண்டிருப்பதுபோலத் தெரிகிறது. சீக்கிரம்போய், அவங்களைக் கேட்டுப் பார்த்தீங்கன்னா, விவரம் தெரியும்."


ஸ்நேகலதாவைக் காண்பது என் காரியசித்திக்குப் பிரதிகூலமே தவிர, அநுகூலத்தை ஏற்படுத்தாதது என்பதை உணர்ந்து கொண்டிருந்ததால், நான் அவளைச் சந்திக்க விரும்பவில்லை. 'திவாகரனின் அறைக்குச் சென்று பார்ப்போம்: அவன் அங்கு இல்லாவிட்டால் திரும்பிவிடுவோம்; மீண்டும், இரவு அல்லது நாளை வந்து அவனைச் சந்தித்துக் கொள்வோம்' என்று முடிவுறுத்திக் கொண்டு மாடியில் ஏறி, அவனுடைய அறைக்குச் சென்றேன.

அறையின் வாயிற் கதவுகள் இரண்டில் ஒன்று அடைக்கப்பட்டிருந்தது; மற்றொன்று லேசாக ஒருக்களித்துவைக்கப்பட்டிருந்தது. அரை—குறையாகத் திறந்திருந்த அக்கதவின் வழியே உள்ளே நோக்கினேன். ஜன்னலகள் எல்லாம் மூடப்பட்டிருந்ததால், உள்ளே மங்கலான வெளிச்சமே இருந்தது. அந்த வெளிச்சத்தில், அறைக்குள் கட்டிலில் யாரோ படுத்திருப்பது போலத் தெரிந்தது. 'வேலைக்காரி சொன்னது சரிதான்; திவாகரன் தூங்கிக்கொண்டுதான் இருக்கிறான் போலும்; எழுப்பி விஷயத்தைச் சொல்லிவிடுவோம்' என்று கதவை லேசாகத் திறந்துகொண்டு உள்ளே நடந்தேன். ஆனால், கட்டிலை நெருங்கிப் பார்த்தபோது அது காலியாகஇருந்தது தெரிந்தது. படுக்கை மாத்திரம் விரித்தபடியே கிடந்தது. 'சரி; அவனைச் சந்திக்க இரவிலோ, நாளையோதான் வரவேண்டும்' என்று நான் திரும்ப யத்தனித்தபோது, அறையின் கதவு படீரென்று மூடப்பட்டது. வெளியே பூட்டுப் பூட்டப்படும் ஓசையும் கேட்டது ஓடிச்சென்று, கதவை பலங்கொண்ட மட்டும் தட்டி, "உள்ளே நான் இருக்கிறேன்; நான் இருக்கிறேன்' என்று கத்தினேன். ஆனால், என் குரல்தான வெளியே கேட்கவில்லையோ, என்னவோ எவரும் வந்து கதவைத் திறக்கவில்லை.

"இது என்ன சங்கடம்! இங்கே வந்து இப்படி அகப்படடுக் கொண்டு விட்டோமே!" என்ற கலக்கம் எனக்கு ஏற்பட்டது.

'அறையின் ஜன்னல்களைத் திறந்து பார்ப்போம்; வேலைக்காரர்கள் யாரேனும் தட்டுப்பட்டால் கூப்பிட்டு, கதவைத் திறக்கச் செய்வோம்' என்று எண்ணினேன். அந்த அறைக்கு வாயில் ஒன்றுதான்; ஆனால் ஜன்னல்கள் முன்புறம் இரண்டும், பினபுறம் இரண்டுமாக நான்கு இருந்தன. நான் முதலில் முன்புற ஜன்னல்களைத் திறந்து பார்க்கலாம் என்று போனேன். சே! என்ன துரதிர்ஷ்டம். அவை அறையின் வெளிப்புறமிருந்து திறந்து மூடும்படி அமைக்கப்பட்டிருந்ததால் உள்ளே அகப்பட்


இனம்! இனம்!! இனம்!!!



எமது நெ.501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன்மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-15-0. 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-0-0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட்வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

AMRIT PHARMACY (G.M), Nakodar(Pb.)

டுக்கொண்டிருந்த என்னால் திறக்க முடியாதவையாக இருந்தன. பிறகு பின்புற ஜன்னல்களும் இவ்வாறுதான் அமைக்கப்பட்டிருக்குமோ என்று கவலைப்பட்டுக்கொண்டே போய்ப் பார்த்தேன். நல்லவேளை! அவை உள்ளேயிருந்து திறந்து மூடும்படியாகவே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த இரு ஜன்னல்களையும் திறந்து பார்த்த போது, அவற்றால் எனக்கு எவ்விதப் பயனுமில்லை என்பதைக் கண்டேன்.

இப்படி இரண்டுங் கெட்டானாகை, ஓர் அறையினுள் அடைபட்டது போதாதென்று, காண்பவருக்குச் சந்தேகத்தை கிளப்பிவிடும் சிக்கல் ஒன்றில் நான் மாட்டிக்கொண்டிருப்பதையும் உடனே அறிந்தேன். பின்புறத்திலிருந்த ஜன்னல்களைத் திறந்தபின் அந்த அறையில் நல்ல வெளிச்சம் பரவிற்று. அந்த வெளிச்சத்தில், அறையைச் சுற்றி நோக்கினேன். நான் நினைத்திருந்தது போல், அது திவாகரனின் படுக்கை அறை இல்லை; அது அவனுடைய காரியாலய அறை. சும்மா, எப்பொழுதாவது ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவே வைக்கப்பட்டிருந்தது. அறை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸோபாக்கள், நாற்காலிகள், மேசைகள், ரேடியோ, போன்ற மற்றும் பல அலங்காரப பொருள்கள் அங்கே இருந்தன. இவையன்றி பெரிய கண்ணாடி பீரோ இரண்டும், அவற்றின் நடுவே, கோட்ஸே மாமாவின் காலத்திலிருந்து, பணம், நகை போன்றவற்றைப் பத்திரப்படுத்திவரும் இரும்புப் பெட்டியும் இருப்பதைக் கண்டேன். இவை எல்லாம்கூட எனக்கு அத்தனை பயத்தை அளிக்கவில்லை ஆனால், அந்த இரும்புப் பெட்டி திறந்து கிடந்ததையும், அதன் சாவிக் கொத்து, பூட்டில் நுழைக்கப்பட்டவாறு தொங்கிக்கொண்டிருந்ததையும் கண்டபோது என்னை அறியாமலே கலக்கம் ஏற்பட்டது. எனக்கு இப்பொழுது, எவ்வாறு நான் அவ்வறையில் அடைபட நேர்ந்தது என்பதுகூட ஒருவாறு விளங்கிவிட்டது. ஸ்நேகலதா வெளியே போக அலங்கரித்துக் கொண்டிருப்பதாக வேலைக்காரி சொன்னாள், இல்லையா? அவள்தான் ஏதோ நகை-நட்டு எடுப்பதற்காக, இந்த அறையையும், இரும்புப் பெட்டியையும திறந்திருக்க வேண்டும். வெளியே போகிற அவசரத்தில், இரும்புப் பெட்டியைப் பூட்ட மறந்து, நகையை அணிந்து கொள்ளத் தன் அறைக்குப் போயிருப்பாள். அலங்காரத்தை முடித்துக் கொண்டு போகிற வழியில், அறையைமாத்திரம் இழுத்து மூடிக்கொண்டு சென்றுவிட்டாள்!

அவள் எப்படியேனும் நாசமாய்ப் போகட்டும்; இப்பொழுது என் கதி என்ன? அறைக்குள்ளே நான் அடைபட்டுக்கிடக்கிறேன்; இரும்புப் பெட்டி திறந்து கிடக்கிறது. இந்த நிலையில் யாராவது என்னைப் பார்த்தால் என்ன ஆகும்? திருட வந்து பதுங்கியிருந்து அகப்பட்டுக் கொண்டு விட்டதாக அல்லவா கருதிவிடுவார்கள் ?

இவ்வாறு நான் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில், அறையின் வெளியே பேச்சுக்குரல் கேட்டது. திவாகரன் தான் யாருடனே பேசிக்கொண்டு வருகிறான் என்பதை நான் தெரிந்துவிட்டேன். நிச்சயமாக, அவன் இந்த அறைககுத்தான் வருவான். நான் இங்கே அடைபட்டுக் கிடப்பதைப் பார்த்துவிடப் போகிறானே!

எனக்குச் சட்டென்று ஒரு ஆலோசனை தோன்றிற்று. சுற்றுமுற்றும் பார்த்தேன். திவாகரனின் கட்டிலின் மீது, மெத்தையை மூடிக்கொண்டு ஒரு சலவைத் துணி விரிக்கப்பட்டிருந்தது. அதன் இரு புறங்களும், கீழே தரையில் தொங்கிககொண்டு இருந்தன. அதனடியில் சென்று பதுங்கிக் கொண்டால், யாரும் என்னைக் கண்டுகொள்ள முடியாது. திவாகரனும், அவனோடுவருபவரும் எத்தனை நேரம் இந்த அறையில் தங்கி இருக்கிறார்களோ, அதுவரையில் நானும் கட்டிலின் அடியிலே பதுங்கியிருப்பது. வந்த மனிதரை அனுப்ப, திவாகரன் கீழே இறங்கிப் போகாமலா இருக்கப் போகிறான்? அச்சமயத்தில் அறையை விட்டு வெளியேறிவிடலாம். எது எப்படி நடந்தாலும், இப்பொழுது, இந்த அசந்தர்ப்பமான நிலையில், மூன்றும் மனிதர் ஒருவர் கூட இருக்கையில, நான் திவாகரன் முன் எதிர்ப்படுவது நல்லதல்ல.

இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கையில் அறைக் கதவின் பூட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டது. நான கணமும் தாமதியாது, கட்டிலின் அடியில் படுத்துக் கொணடேன். (தொடரும்)

# பேய்க் காதல்

[ 54ம் பக்கத் தொடர்ச்சி ]

சேர்ந்தான். தன் அறைக்குப் போய் கதவைச் சாத்திக்கொண்டு தான் கண்ட உருவத்தைப்பற்றித் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினான். நண்பன் வீட்டிலே ஜன்னல் ஓரமாக அவன் நிச்சயமாக ஒரு தோற்றத்தைக் கண்டது உண்மை. அது எப்படிப் பொய்யாக முடியும்? இவ்வாறு தன் சிந்தனை அலைபாய்ந்த மனதோடு தற்செயலாகச் சட்டையிலுள்ள பொத்தானை அவன் பார்க்க நேர்ந்தது. அதிலே சில கூந்தல் சுருள்கள் ஒட்டிக்கொண்டிருந்தன! அந்த மாயப் பெண்ணின் கேசம் தவிர வேறெதுவாக அது இருக்க முடியும்?

சோமுவின் மன நிலை சரியாக இல்லை. புயலடித்த கடல் போல கொந்தளித்துக் கிடந்தது. அதனால் அப்போதே ராமுவிடம் சென்று செய்தி சொல்லும் நிலையிலில்லை. மேலும் தான் கண்ட தோற்றத்தைப் பற்றி அவன் நிச்சயமான முடிவுக்கு வரவில்லை. ஆகவே, அவன் கொண்டுவந்த கடித கட்டுகளை ஒரு ஆள் மூலம் ராமுவிடம் சேர்ப்பிக்கும்படி கொடுத்தனுப்பினான்.

கடிதங்களைப் பெற்றுக்கொண்ட ராமு சோமுவைப் பற்றி வேலையாளிடம் விசாரித்தான். “ஐயாவுக்கு உடம்பு சரியாக இல்லை........” என்று வேலையாள் சொல்லவே ராமுவுக்கு மிகுந்த விசாரம் ஏற்பட்டது. அடுத்த நாள் முழு விவரத்தையும் சொல்ல சோமு தன் நண்பன் வீட்டிற்குப் போனான். வெளியே போயிருந்த ராமு இன்னமும் வீடு திரும்பவில்லை. அடுத்த நாளும் பார்த்தான். ராமுவைக் காணவில்லை. ஒரு வாரம் பார்த்தான் சோமு. அப்போதும் ராமு தென்படவில்லை. “ஆள் காணவில்லை” என்று போலீசுக்குத் தேடக் தகவல் கொடுத்தான். விசாரணை தீவிரமாக நடந்தது. ஆனால் ராமு மறைந்த விஷயம் யாருக்கும் புலப்படாத மர்மமாகவே இருந்தது.

ராமுவின் பழைய வீடு பரிசோதனை செய்யப்பட்டது, அங்கு ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை. அந்த வீட்டிற்குள்ளே ஒரு பெண் நடமாடுவதற்கான அறிகுறி எதுவமே இல்லை. ஆகவே விசாரணை கைவிடப்பட்டது.

(‘மாப்பஸான்’ கதையைத் தழுவியது)

ரொக்கப் பரிசு ரூ. 1,000 (ஒரு அபூர்வ சக்தியுடையது)

**மாய மோதிரம்**




இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்: உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகாது: இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழககுகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி அடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை: ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. [பலன் இல்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.]

*Principal:* **The Bengal Mesmerism House**

(G. M.) HOSHIARPUR, (P. B.)


நேஷனல் புரொடக்ஷன்ஸாரின்
உலகம் பலவிதம்





## உலகம் பல விதம்

தமிழ்ப் படம் இந்த மாதம் திரைக்கு வருகிறது. திரைக் கதையை டி. ஆர். ரகுநாத்தும், வசனத்தை வி. என், சம்பந்தமும் எழுதியுள்ளனர். முருகேஷ் டைரெக்ட் செய்தது. சிவாஜி கணேசன், தங்கவேலு, பி. எஸ். வீரப்பா, வி. கே. ராமசாமி, டி. வி. ராதாகிருஷ்ணன், லலிதா, எம். என். ராஜம், லக்ஷ்மி பிரபா, ஆகிய நக்ஷத்திரங்கள் நடித்திருக்கின்றனர்.



# பிரம்ம லோகம்

மஹேஸ்வரி பிக்சர்ஸார் — இது வரை பெயரிடாது — தாங்கள் தயாரித்து வரும் படத்திற்கு "கண்ணின் மணிகள்" என்று தாற்காலிகமாகப் பெயரிட்டிருக்கின்றனர். பெரும் தீ விபத்துக் காட்சி ஒன்று சமீபத்தில் இப் படத்திற்கெனப் படமாக்கப்பட்டது. கதாநாயகன் சுந்தர் அவ் விபத்தில் கண்களை இழக்கிறான். கதாநாயகன் சுந்தராக புது முகம் சுந்தர் இக் காட்சியில் பிரமாதமாக நடித்திருக்கிறாராம். ரேவதி ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தை டி. ஜானகிராம் டைரெக்ட் செய்து வருகிறார். எம். வி. ராஜம்மா, எம். கே. ராதா, டி. பி. முத்துலக்ஷ்மி, கருணாநிதி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களாக நடிக்கின்றனர். இப் படம் ஏப்ரல் இறுதிக்குள் தயாராகி முடிவடைந்து விடும். மே அல்லது ஜூன் மாதம் தான் திரையிடப்படுமாம்.

### போர்ட்டர் கந்தன்

நரஸுவின் இரண்டாவது தயாரிப்பான, "போர்ட்டர் கந்தன்" படப் பிடிப்பின் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது. ஏப்ரல் மாதம் திரையிட நிச்சயமாகிவிட்ட இப் படத்தின் வேலைகள் மும்முரமாக நடக்கக் கேட்பானேன். ஒரு ரயில்வே கூலியின் வாழ்க்கையைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள கதையாம் இது. இதில் போர்ட்டர் கந்தனாக எம். கே. ராதாவும், அவன் தம்பியாக எம். கே. முஸ்தாபாவும், ரயில்வே உயர்ந்த அதிகாரியாக டி. பால சுப்ரமண்யமும் நடித்து வருகிறார்கள். தன் அண்ணனுக்காக உயர்ந்த அதிகாரியிடம் போய் வாதாடுகிறான் தம்பி. பொறுமையிழந்த அதிகாரி அளவு மீறிய கோபத்தில் அவனைச் சுடுகிறார். இக் காட்சி இப்படத்திற்கென சமீபத்தில் நரஸு ஸ்டுடியோவில் படமாக்கப் பட்டது. இப்படத்தின் மூலம் ஆர். லலிதா என்று ஒரு புது முகம் திரையில் அறிமுகப் படுத்தப்படப் போகிறார். இவர்கள் தவிர, ஜி. வரலக்ஷ்மி, டி. பி. முத்துலக்ஷ்மி, டி. எஸ். துரைராஜ், எம். என். நம்பியார், கே. துரைஸ்வாமி, மாஸ்டர் பாஜி, எஸ். வி. சுப்பய்யா ஆகப் பலரும் நடித்து வருகிறார்கள். வி. எல். நரசுவின் தயாரிப்பான "போர்ட்டர் கந்தன்" உள்ளம் உருக்கும் உணர்ச்சிச் சித்திரமாக விளங்க கே. வேம்பு மிகவும் சிரத்தையுடன் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார்.

### கணவனே கண் கண்ட தெய்வம்

நாராயணன் கம்பெனியாரின் "கணவனே கண் கண்ட தெய்வம்" தமிழ்ப் படத்தில் முதன் முறையாக கேவா கலரில் சில காட்சிகளை ரஸிகர்கள் காணப் போகிறார்கள். கதாநாயகன் ஒரு அரிய பொருளைக் கொண்டு வர நாகலோகம் வருகிறான். இந்த நாகலோகக் காட்சிகளை கேவா கலரில் தயாரிக்கப் போகிறார்கள் தயாரிப்பாளர்கள். நாகலோகக் கன்னிகையாக பானுமதி நடிக்கிறார். டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப் படம் தமிழ் வருஷப் பிறப்பு சமயம் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரையிடப்படும். அஞ்சலி தேவி, ஆர். கணேஷ், நாகய்யா, பிரண்ட் ராமசாமி, டி.பி. முத்துலக்ஷ்மி, இப்படியாகப் பலர் நடிக்கும் இப் படத்தின கதை ஒரு கிராமியக் கதையாக இருக்கும் என்று தெரிகிறது.

### கோமதியின் காதலன்

டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸின் "கோமதியின் காதலன்" ரேவதியில் ஜரூராகப் படமாகி வருகிறது. 'ஆனநத விகடன்' "தேவனா"ல் எழுதப் பட்ட, பல முறை பலராலும் நாடகமாக நடிக்கப் பட்ட கதையாகும் இது. ப. நீலகண்டன் டைரெக்ஷனில் படம் உருப் பெற்று வருகிறது. பாரிஸ்டர் வீட்டுக்காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப் பட்டது. அங்கு ஜமீன்தாரின் பிள்ளையைப் போல் ஏமாற்று வேலை செய்கிறான் மணி. அவனுக்கு உடந்தையாக இருக்கிறான் பக்கிரி. அங்கேயே டிரைவராக இருக்கிறான் உண்மை ஆசாமி. மணியாக தங்கவேலுவும், பக்கிரியாக பிரண்ட் ராமசாமியும், டிரைவராக டி. ஆர். ராமச்சந்திரனும் இச் காட்சியில் நடித்தார்கள். இப் படத்தில் கதாநாயகி கோமதியாக

சாவித்திரி நடித்து வருகிருர். மற்றும் கே. சாரங்கபாணி, டி. பாலசுப்ரமண்யம், ஆர். பாலசுப்ரமண்யம், பி. டி. சம்பந்தம், சாயிராம், கே. டி. சந்தானம், வி. பி. எஸ். மணி, டி. பி. முத்துலக்ஷ்மி, எஸ். ஆர். ஜானகி ஆகியோரும் நடித்து வருகின்றனர்.

### எல்லாம் இன்ப மயம்

இம் மாதம் திரைக்கு வரக்கூடிய படங்களில் ஒன்ருக இருக்குமாம் "எல்லாம் இன்ப மயம்" தமிழ்ப்படம். நியூடோன் ஸ்டுடியோவில் ஆர். பத்மநாபன் தயாரித்து வரும் இப் படம், படிப் பிடிப்பு முடிவடைந்து நகாசு வேலைகளைப் பெற்று வருகிறது. டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, டி. கே. ராமச்சந்திரன், பிரண்ட் ராமசாமி, டி. என். சிவதாணு, பொட்டை கிருஷ்ண மூர்த்தி, ராகினி, ராஜ சுலோசன, லட்சுமிப்பிரபா ஆகியோர் படத்தின் முக்கிய நடிகர் நடிகைகள். இப் படத்தின் ஒரு விசேஷம் இந்த நடிகர் நடிகைக ளெல்லாம் இதுவரை நடிக்காத புதுமையான பாகங்களில் நடிக்கிருர்களாம். ஜித்தன் பானர்ஜி டைரெக்ட் செய்து வருகிருர்.

### முல்லை வனம்

இம் மாதம் 11ம் தேதி தமிழ் நாடெங்கும் திரையிடப் படுகிறது " முல்லைவனம் " தமிழ்ப் படம். கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகி முடிவடைந்துள்ள படம் இது. இப்படத்தின் வசனங்களை ஏ. கே. வேலன் என்பவர் எழுதியிருக்கிருர். நீண்ட நாட்களுக்குப் பின் மீண்டும் குமாரி ருக்மணியை இப் படத்தில் ரஸிகர்கள் சந்திக்கலாம். மற்றும் விஜயகுமாரி, பி. எஸ். ஞானம், எம். கே. விஜயா, ஸ்ரீராம், வீரப்பா, எஸ். ஏ. நடராஜன், ஸ்டன்ட் சோமு, கருணாநிதி ஆகியவர்கள் நடிததுள்ளபடம் இது. லலிதா ராவ்–ராஜேஸ்வரி ஜோடியின் நடனம் படத்தில்விசேஷ அம்சமாக இருக்குமாம். படத்தை வி. கிருஷ்ணன் டைரக்ட் செய்துள்ளார்.

### குலேபகாவலி

சமீபத்தில், லக் பேஷ்வா சம்பந்தப்பட்ட காட்சிகள் சில ஆர். ஆர். பிக்சர்ஸின் " குலேபகாவலி"க்காகப் படமாயின பிரகாஷ ஸ்டுடியோவில். லக்பேஷ்வாவாக டி. ஆர். ராஜ குமாரி நடிக்கிருர். படத்தை ராமண்ணு டைரெக்ட் செய்து வருகிருர். படத்தின் ஒளிப் பதிவு வேலையை ராஜாபாதர் ஏற்றிருக்கிரு. ராஜகுமாரியுடன் கூட ஜி. வரலக்ஷ்மி, எம். ஜி. ராமச்சந்திரன், தங்கவேலு, சந்திரபாபு ஆகியோரும் இப் படத்தில் நடித்து வருகின்றனர். கிருஷ்ணன்-மதுரம் ஜோடிக்கும் கூட இப் படத்தில் வேலை யிருக்கும். படம் பெரும் பகுதி உருவாகி விட்டதாம்.

> இம் மாத
> மூவர்ணப் படம்
>
> **எம். எஸ்.**
> **சுந்தரிபாய்**
>
> **'வள்ளியின்செல்வன்'**

### உலகம் பலவிதம்

இம் மாதம் திரைக்கு வந்து விடும் நேஷனல் புரொடக்ஷன்ஸின் தயாரிப்பான "உலகம் பலவிதம்" தமிழ்ப் படம். இப்படத்தின் பூரண உரிமையைப்பெற்றுள்ள–ஆலப்புழை ராதாகிருஷ்ணு பிலிம்ஸார் படத்தை தமிழ் நாட்டின் பல நகரங்களில் ஏக காலத்தில் திரையிட ஏற்பாடுகளில் முனைந்திருக்கிருர்கள். இப் படத்தின் திரைக் கதையை டி. ஆர். ரகுநாதும் வசனங்களை வி. என். சம்பந்தமும் எழுதி யுள்ளனர். சிவாஜி கணேசன், வீரப்பா, தங்கவேலு, டி, கே. ராமச்சந்திரன், ராதாகிருஷ்ணன், லலிதா, எம். சரோஜா ஆகப் பலர் இப் படத்தில் நடித்து வருகின்றனர். படம் முருகேஷ் என்பவர் டைரெக்ஷனில் தயாராகி யிருக்கிறது. நேஷனல் புரொடக்ஷன்ஸாருக்குஅவர்களது முந்திய படங்களைப் போலவே இப் படமும் நல்ல வெற்றியை அளிக்கும் என்று நம்புகிறேம்.

### மேதாவிகள்

" நள்ளிரவில் நடந்தது " என்ற நாடகத்தைத் தழுவி, ரேவதி ஸ்டுடியோவில் தயாராகி வரும் படத்திற்கு "மேதாவிகள்" என்ற பெயர் ஸ்திரமாகி விட்டது. கே. வேம்புவின் டைரெக்ஷனில் முடிவடையும் நிலையில் இருக்கும் இப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், என். என். கண்ணப்பா, தங்கவேலு, டி. கே. பாலசந்தர், பட்டு, எம். என். ராஜம் ஆகியோர் நடிக்கின்றனர்.

# ஆபாசமற்ற—"நல்ல தங்கை"

ஒரு குறிப்பிட்ட கட்சியைத் தாக்கவோ, ஒரு கட்சியின் தலைவரைத் தாக்கவோ, அல்லது தன் கட்சிக்கு ஆதரவு தேடவோ, சினிமா நாடகம் ஆகிய கலைகளை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுவது கண்டிக்கத் தக்கது. அதைப் பன்முறையும் நாம் கண்டித்து எழுதியு மிருக்கிறோம். இப்பொழுது அப்பணியைச் செய்துள்ள "நல்ல தங்கை" படத்தையும் இது விஷயத்தில் கண்டிக்காமல் விடுவதற்கில்லை.

வசனங்களில் பல இடங்களில் நாசூக்காக பிரசாரத்தை கையாண்டிருக்கிறார் வசனகர்த்தா. இது வருந்தத்தக்க செய்கையே. மொத்தத்தில், கதாசிரியர் ஏ. பி. நாகராஜனுக்கு இப் படம் "நால்வர்" மூலம் கிடைத்த புகழை அளிக்கவில்லை. கதையிலும் புதுமை ஏதுவும் இல்லை. முக்கியமாக, கதையின் பிற்பகுதி அவசரக் கோலமாக இருக்கிறது.

நடிப்பு என்று வரும்போது, பட்டிக்காட்டுப் பெண் சுகுணவாக நடிக்கும் சுலோசனாவை முதலில் குறிப்பிடத் தோன்றுகிறது. தம் பாகத்தை உணர்ந்து, வெகு இயற்கையாக நடித்திருக்கிறார் "மாப்பிள்ளை—மக்கு மாப்பிள்ளை" பாட்டைப் பாடிக் கிண்டல் பண்ணும் கட்டத்தில் அசல் குறும்புக்காரப் பெண்ணாக மாறிவிடுகிறார் இவர். அடுத்தபடி, நம்பியாரைக் குறிப்பிடலாம். அவரது பட்டிக் காட்டான் பாத்திரம் சிறப்பாக அமைந்துவிட்டது. நீண்ட நாட்களுக்குப் பின் படத்தில் தோன்றும் மாதுரி தேவியின் நடிப்பிலோ தோற்றத்திலோ முன் அளவு கவர்ச்சியில்லை.

சுந்தராக வரும் எஸ். ஏ. நடராஜன் நல்ல முறையில் நடித்திருக்கிறார். ஆனால், இவர் வில்லன் பாத்திரத்தில் பேசும் அடித் தொண்டைக் குரலை இப் படத்தில் தவிர்த்திருக்கலாம். வில்லனாக வரும் டி. எஸ். பாலய்யாவின் பாகம் சோபிக்காததற்குக் காரணம்—அவர் மீண்டும் மீண்டும் ஒரே மாதிரி கதாபாத்திரங்களிலேயே நடித்து வருவதுதான். தாசியாக வரும் ஸி. ஆர். ராஜகுமாரி சோபிக்கவில்லை. அவரது தோற்றம் ஸெலுலாய்டு பொம்மை மாதிரி இருக்கிறது.

படத்தின் பாட்டுகளில், "துயில் நீங்கி" என்ற பாட்டு நன்றாக இருக்கிறது. மிக இனிமையாகவும் கருத்து அமைந்ததாகவும் இருக்கிறது. வண்டிப் பாட்டு அனுவசியம். "ஏ.பி.ஸி.டி." பாட்டு ஒரு சாராருக்கு ரொம்ப பிடிக்கும். ஒளிப்பதிவு மிகவும் பிரமாதமாக இருக்கிறது. கனவுக் காட்சிகளின் காட்சி ஜோடனை அபாரமாயுள்ளது.

எஸ். ஏ. நடராஜன் டைரெக்ஷனில் வெளிவரும் முதல் படம் இது என்பதனால், "பாதகமில்லை" என்று கூறலாம். பல அநாவசியக் காட்சிகளை நீக்கி, படத்தின் நீளத்தை வெகுவாகக் குறைத்திருக்கலாம்.

மொத்தத்தில், படத்தில் பிரசார வாடை நிறைய வீசுகிறது என்றாலும், இது ஆபாசமற்ற படம் என்பது சந்தோஷிக்கத் தக்கது. —"ஜாம்பவான்"

---

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வனஜாவும்—லலிதாவும் சேர்ந்து ஆடும் நடனமும், வனஜா—கணேசன் ஆடும் நாடோடி நடனமும் கவர்ச்சிகரமாய் இருக்கின்றன. பாட்டுகள் கர்நாடக மெட்டுகளில் அமைக்கப்பட்டிருப்பது ஒரு விசேஷம். இவை இனிமையாகப் பாடப்பட்டுள்ளன.

டைரெக்டர் கொத்தமங்கலம் சுப்புவின் திறமை படத்தின் சிறப்புக்கு உதவியிருக்கிறது. சோகமான சம்பவங்கள் படம் பார்ப்போரின் மனத்தை பாதித்து அலுப்புத் தட்டிவிடாதபடி, ஹாஸ்ய கட்டங்களை அடுத்தடுத்து அமைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு நல்ல அம்சம். தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையைப்பற்றி வள்ளி கற்பனை செய்யும் கட்டத்தைக் காட்டியிருக்கும் முறை நன்றாக இருக்கிறது. கார் விபத்துக் காட்சி புதுமுறையில் நன்கு கையாளப்பட்டுள்ளது. முன் பகுதியை மட்டும் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

மொத்தத்தில், "வள்ளியின் செல்வன்" கதை பழைய சரக்காக இருந்தாலும், ஆபாசமில்லாத, உள்ளத்தைத் தொடும் ஒரு நல்ல படமாக அமைந்திருக்கிறது. —"ஜாம்பவான்"

# வாழ்க்கை வர்ணனை

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

உருட்டிக் கொண்டு செங்கோட்டை, குற்றாலம் முதலிய ஊர்களுக்கெல்லாம் சென்று விட்டு வருவது வழக்கம்.

இது மாதிரி ஒரு முறை சுப்பய்யா குற்றாலத்திற்குச் சென்றிருந்த போது தான் அங்கு விஜயம் செய்திருந்த எஸ். ஜி. கிட்டப்பாவை சந்திக்கும் பாக்கியம் அவருக்கு ஏற்பட்டது. சுப்பய்யா இயற்கையாகவே இனிய குரலைப் பெற்றிருந்தார். காதில் கேட்கும் பாட்டுகளையெல்லாம் அவர் பாடிக் கொண்டிருப்பது வழக்கம். கிட்டப்பா இவரைப் பார்த்ததும், "என்ன தம்பி, உனக்குப் பாடத் தெரியுமா?" என்று கேட்டாராம். சுப்பய்யா மிகுந்த சங்கோஜத்துடன் பாடினராம். "பேஷ்! உனக்கு நல்ல குரல் இருக்கிறது. அடுத்த வெள்ளிக் கிழமை காலையில் என்னை வந்து பார். உன்னை நாடகத்தில் சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறி எட்டணாவை எடுத்துக் கொடுத்தாராம் கிட்டப்பா. அதை வாங்கிக்கொண்டு சுப்பய்யா தம் கிராமத்திற்குத் திரும்பினர்.

கிட்டப்பா குறிப்பிட்ட வெள்ளிக் கிழமையன்று அவரைச் சந்திப்பதற்காக சுப்பய்யா புறப்பட்டார். ஆனல் இடையில் சில பையன்கள் எதிர்ப்பட்டதால் அவர் அவர்களுடன் விளையாட்டில் முனைந்து விட்டார். அவர் சாவகாசமாக சாயங்காலம் குற்றாலத்திற்குப் போன போது "கிட்டபபா காலையிலேயே ஊரை விட்டுப் போய் விட்டார்" என்ற செய்தி அறிந்து மிக வருந்தினர். தம் விளையாட்டு புத்தி காரணமாக ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டோமே என்று தவியாய்த் தவித்தார்.

பையன் மனதில் நாடகத்தைப் பற்றிய எண்ணம நன்கு வேருன்றிப் போயிருந்ததை அறிந்த அவரது மாமன், அந்த வழியிலாவது முன்னுக்கு வரட்டும் என்ற எண்ணத்தில் அவரை சிவகாசியில் நடந்து கொண்டிருந்த ஆனந்த சக்தி வேல் பாய்ஸ் கம்பெனிக்கு அழைத்துச் சென்று அதில் சேர்த்து விட்டுத் திரும்பினர்.

நாடகக் கம்பெனியில் சேர்க்கப்பட்ட பின்னரே சுப்பய்யா வாழ்க்கைப் பொறுப்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கினர். மற்றவர்களைப் போல் தாமும் முன்னணிக்கு வரவேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது. இதன் விளைவாக அவர் நாடக வாத்தியாரிடம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்.

இந்த சமயத்தில், பி. எஸ். கோவிந்தன் நடித்துக் கொண்டிருந்த புளியம்பட்டி கம்பெனி நல்ல நிலைமையில் நடந்து வந்தது. ஆனல், அதிலிருந்து பி. எஸ். கோவிந்தன் விலகுவதற்கு முயன்று கொண்டிருந்தார். இதை அறிந்த நிர்வாகிகள் அவருடைய ஸ்தானத்தில் சுப்பய்யாவைக் கொண்டு வைக்கத் தீர்மானித்தனர். அதற்கிணங்க அவர்கள், அவருடைய மாமன் சுப்பய்யாவை கம்பெனியிலிருந்து தந்திரமாக வாபஸ் பெறுவதற்காக, "உன் தாயாரைப் பாம்பு கடித்து விட்டது; உடனே புறப்பட்டு வா" என்று ஒரு தந்தியை அவருக்கு அனுப்பி வைத்தார்கள். சுப்பய்யா அலறிப புடைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். தாயாரைப் பாம்பு கடிக்கவில்லை என்ற நற்செய்தியோடு, புளியம்பட்டி

அதியற்புதமான

ஸ்டுடியோ போர்ட்ரெய்ட்
பிளாஷ் போட்டோக்கள்
ஸ்டில் போட்டோக்கள்
குரூப் போட்டோக்கள்
டெவலப்பிங், பிரின்டிங்,
என்லார்ஜ்மென்ட்

இவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

தேவன் ஸ்டுடியோ

151 பிராட்வே :: சென்னை-1
தபால் பெட்டி நெ. 1363

போன்: 3607 தந்தி: FOTODYES


கம்பெனியில் சேரவேண்டும் என்ற நற்செய்தியும் அவரை வரவேற்றது.

புளியம்பட்டி கம்பெனியில் வருஷத்திற்கு இருநூறு ரூபாய் வீதம் சம்பளம் பேசிக்கொண்டு சேர்ந்தார். கோவிந்தன் நடித்துக்கொண்டிருந்த பாத்திரங்கள் எல்லாவற்றிலும் இவர் பயிற்சி பெற்ருர். ஆறு மாதங்களுக்குப் பிறகு கோவிந்தன் கம்பெனியிலிருந்து விலகியதும் அவரது ஸ்தானத்தில் சுப்பய்யா கம்பெனியின் பிரதம நடிகராகி விட்டார்.

புளியம்பட்டி கம்பெனியில் அவர் தம் நடிப்பு, பாட்டு இரண்டின் மூலமும் நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளலானுர். கம்பெனி தென்னிந்தியாவில் பல ஊர்களில் நாடகம் நடத்திய பின்னர் சிங்கப்பூர், பினங்கு முதலிய அயல் தேசங்களுக்குச் சென்றது. சென்ற இடங்களி லெல்லாம் சுப்பய்யாவின் புகழ் பரவியது. மலாயா ரஸிகர்கள் சுப்பய்யாவை அபாரமாகப் பாராட்டத் தொடங்கிவிட்டனர். இதன் விளைவாக பினங்கு ரேடியோ நிலையத்தினர் சுப்பய்யாவை அழைத்துப் பாடச் செய்தனர்.

புளியம்பட்டி கம்பெனியில் சுப்பய்யா மூன்று வருஷ காலம் இருந்தார். இக்கம்பெனி இந்தியா திரும்பிய சில மாதங்களுக்கெல்லாம் சுப்பய்யாவின் தொண்டை உடைந்து விட்டது. அதனுல் அவர் கம்பெனியிலிருந்து விலகி, தம் கிராமத்திற்குச் சென்ருர்.

கிராமத்தில் இரண்டு வருஷ காலம் வீண் பொழுதாகக் கழிந்தது. இதனுல் சலிப்புற்ற சுப்பய்யா தம் மூத்த சகோதரியின் வீட்டிற்காவது சென்று விட்டு வரலாமெனத் தென்காசி தாலுக்காவில் உள்ள செட்டியூருக்குச் சென்ருர். சில மாதங்கள் அங்கு தங்கிவிட்டு அவர் டி. கே. எஸ். பிரதர்ஸ் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார்.



சுப்பய்யா சக்தி நாடக சபையில் நடித்துக் கொண்டிருந்தபோது எடுத்த படம்.

டி. கே. எஸ். கம்பெனியில் அவர் மூன்று வருஷ காலம் நடித்து வந்தார். இவருக்கு ராவண வேஷம் முதலான பல வேஷங்களும் கொடுக்கப்பட்டன. அந்த சமயத்தில் சுப்பய்யாவிடம் குறும்புத்தனங்களும், சேஷ்டைகளும் மிக அதிகரித்திருந்தன. தமக்கு ஒரு படி உயர்ந்த நடிகர்களையெல்லாம் அவர் சதா கிண்டல் செய்வதில் ஈடுபட்டார். சகோதரர்களில் மூத்தவரான டி. கே. சங்கரன் பல முறை எச்சரித்துப் பார்த்தார். பலனில்லாது போகவே, அவர் ஒரு நாள் சுப்பய்யாவை நன்கு அடித்து கம்பெனியிலிருந்து வெளியேற்றி விட்டார்.

டி. கே. எஸ். கம்பெனியை விட்ட பின் சுப்பய்யா எந்தக் கம்பெனியிலும் நிலைத்து நிற்காமல் ஒன்றிலிருந்து மற்றதற்கு மாறிக்கொண்டேயிருந்தார். மேடைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த வைரம் செட்டியார் கம்பெனியில் அவர் முதலில் நடிகராகச் சேர்ந்தார். பிறகு வாத்தியாராக்கப்பட்டார். ஆனுல் சம்பளத் தகராறினுல் ஒரே மாதத்தில் கம்பெனியிலிருந்து விலகி விட்டார்.

இதன் பிறகு, அவர் புளியம்பட்டி கம்பெனியில் இரண்டாம் முறையாகச் சேர்ந்தார். "சிவசக்தி லீலா" நாடகத்திற்குப் பயிற்சியளிக்கும் வேலை அவருக்கு அளிக்கப்பட்டது. இந்த நாடகம் திருச்சியில் அரங்கேற்றப்பட்ட பின் சுப்பய்யா இக் கம்பெனியிலிருந்து விலகி, ராசிபுரம் பால கான சபாவில் சேர்ந்து இரண்டு மாத காலம் உழைத்தார். அதன் பின் அவர் பாலய்யாவின் சாயி பால கான சபாவில் சேர்ந்தார்.

அந்த சமயம் காமெடியன் கே. ஏ. தங்கவேலுவும் அதே கம்பெனியில் இருந்தார். இக்கம்பெனியின் நாடகங்கள் வெற்றி பெருமையால் சில சமயம் இவர்கள் பட்டினி கூடக் கிடக்க வேண்டியதாகியதாம். இப்படி ஆறு மாத காலம் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில் — அதாவது பாண்டிச்சேரியில் கம்பெனி நடந்த போது —சுப்பய்யாவுக்கு பிரபல கதை வசன கர்த்தா எஸ். டி. சுந்தரத்தினிடமிருந்து அழைப்பு வந்தது. சுந்தரம் அப்போது புதுக்கோட்டையில் சக்தி நாடக சபாவின் நாடகங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார். பாலய்யா கம்பெனி நாடகங்களில் சுப்பய்யாவைப் பார்த்தது முதல் அவர் ஒரு சிறந்த நடிகர் என்பதை சுந்தரம் தெரிந்து கொண்டிருந்தார். அதன் விளைவாகவே, அவர் சுப்பய்யாவுக்கு அழைப்பு அனுப்பி சக்தி நாடக சபாவில் சேர்த்துக்கொண்டார்.



எஸ். வி. சுப்பய்யாவின் தாயார், மனைவி, மூத்த சகோதரி, இளைய சகோதரி ஆகியோர்.

சக்தி நாடக சபா சுப்பய்யாவுக்கு ஒரு புது சக்தியை அளித்தது. நம்பியார், நடராஜன் ஆகியோருடன் இவரும் சேர்ந்து உற்சாகமாய் நடிக்கலானார். இவருடைய திறமைகளுக்கு நிர்வாகிகள் நிறைய மதிப்பளித்ததால் நாடகங்கள் மணி மணியாக அமைந்ததோடு அதில் நடித்த சுப்பய்யாவுக்கும் பிரமாதமான புகழ் ஏற்பட்டுப் பரவலாயிற்று. "கவியின் கனவி"ல் கவியாகவும், "மனோஹரா"வில் புருஷோத்தமனாகவும், "விதி"யில் வில்லன் விமல நாதனாகவும், "ராம பக்தி"யில் தசரதராகவும் அவர் திறம்பட நடித்து, ரஸிகர்களின் பெருமிதமான பாராட்டுதல்களைப் பெற்றார்.

சக்தி நாடக சபை கோயமுத்தூரை அடைந்த போது, ஜூபிடர் முதலாளியான சோமு நாடகங்களைப் பார்த்துவிட்டு, சுப்பய்யாவை படங்களில் நடிக்க அனுமதிக்கும்படி கேட்டார். ஆனால் டி.கே.கிருஷ்ணஸ்வாமி மறுத்து விட்டார். சுப்பய்யாவுக்கும் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அதனால், கம்பெனி திண்டுக்கல்லை அடைந்ததும் அவர் அதிலிருந்து விலகி ஜூபிடர் பிக்சர்ஸில் சேர்ந்தார்.

சினிமாவில் அவர் முதன் முதலில் நடித்த படம் ஜூபிடரின் "ராஜகுமாரி"யாகும். இப் படத்தில் சுப்பய்யா ராணியின் தகப்பனாராக நடித்திருக்கிறார். பிறகு சென்னையில் தயாரான "திருமழிசை ஆழ்வார்", "ஏகம்பவாணன்", "விஜயலக்ஷ்மி" ஆகிய மூன்று படங்களில் அவர் நடித்திருக்கிறார். இம்மூன்று படங்களும் வெற்றி பெருமையால் சுப்பய்யாவின் பெயர் அதிகமாகப் பரவவில்லை.

பிறகு மாடர்ன் தியேட்டர்ஸின் "ஆதித்தன் கனவு" படத்தில் மிட்டாய் வாலாவாக நடித்திருக்கிறார். அதன்

பின்னர் "அபிமன்யு", "கஞ்சன்", "மாயாவதி" ஆகிய மூன்று படங்களில் நடித்தார்.

ஜூபிடரின் "ராணி" படம் வந்ததே; அதில் ராணியின் தந்தையாக நடித்திருப்பவர் சுப்பய்யா தான். இந்தப் படம் அவர் சிறந்த நடிகர் என்பதை ஓரளவு ஊர்ஜிதமாக்கியது. பிறகு, வெளிவந்த "வேலைக்காரன்" படத்தில் சுப்பய்யாவின் நடிப்பு பாராட்டத்தக்க முறையில் இருந்தது. பின்னர், "புது யுகம்" படத்தில் புரபஸராகவும், "பெற்ற மனம்" படத்தில் கோட்டக்காரனைவும் அவர் நடித்திருக்கிறார். "சுகம் எங்கே ?" படத்தில் நீங்கள் அவரை சமீபத்தில் பார்த்திருப்பீர்கள்.

சென்ற மாதம் வெளிவந்து வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் "வள்ளியின் செல்வம்" படத்தில் சுப்பய்யாவுக்கு மற்றெல்லாப் படங்களையும் விட அதிகமான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது சுப்பய்யா நரஸூவின "போர்ட்டர் கந்தன்" படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அடுத்தபடியாக ஜெமினி தயாரிக்கும் படத்திலும் அவருக்கு "சான்ஸ்" இருக்கும் என்று தோன்றுகிறது. மற்றும் வைத்யா பிலிம்ஸார் தயாரித்து வரும் "பெண் திலகம்" படத்திலும் அவர் நடிக்கக்கூடும்.

சுப்பய்யா யாரிடமும் சங்கீத சிட்சை சொல்லிக் கொள்ளவில்லை யென்றாலும் தாமாகவே நாடகங்களில் பாடிப் பாடி, தம் சங்கீதத் திறமையை விருத்தி செய்து கொண்டிருக்கிறார். "விஜய லக்ஷ்மி", "மாயாவதி", "வள்ளியின் செல்வன்" ஆகிய படங்களில் சுப்பய்யாவே தான் பாடியிருக்கிறார்.

சுப்பய்யா இப்பொழுது கூட நாடக உலகை மறந்தவரல்ல. சமயம் வாய்க்கும் போதெல்லாம் நாடகங்களில் நடித்து வருகிறார்.

சுப்பய்யாவுக்கு தம் தாய் பாஷையான தமிழ் ஒன்று மட்டும்தான் தெரியும். நடிப்பதற்கு மிகவும் கடினமானதும், மனோ உணர்ச்சிகளை நிறைய வெளியிடவேண்டியதுமான பாத்திரங்களையே அவர் பெரிதும் விரும்புகிறார்.

1948ம் வருஷம் ஜனவரி மாதத்தில் அவருக்கும், அருணாசல ஆசாரியின் மகளான கோமதிக்கும் திருமணம் நடந்தேறியது. இவர்களுக்கு (ஐந்தரை வயது நிரம்பப்பெற்ற) குமுதம் என்ற ஒரு பெண் மட்டுமே பிறந்திருக்கிறாள். "வள்ளியின் செல்வன்" படத்தில் அவர் படத்திற்காகவே குழந்தையுடன் கொஞ்சி விளையாடுகிறார். ஆனால், அவரது உண்மைப் பொழுது போக்கே தம் ஏக புத்திரி குமுதத்துடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பதுதானாம்!

---


## சரளா பரதநாட்டியம்

தியாகராய நகர் ஸ்ரீநிவாஸ நிகேதனின் ஆதரவில், வாணி மஹாலில் பிப்ரவரி மாதம் 13ம் தேதியன்று குமாரி சரளாவின் நடன விருந்து மிகவும் விறுவிறுப்போடு நடைபெற்றது.

பதங்களில் 'கண்ணனிடம்', 'தண்டனிட்டேன்', 'துன்பம் நேர்கையில்', 'யாமறிந்த' முதலியவைகள் ஒன்றையொன்று போட்டியிடுவதுபோல் அபிநய அமைப்பு பூரணமாகப் பொருந்தி, அளவோடு அமைந்திருந்தன. 'யாமறிந்த மொழிகளிலே' என்ற பாட்டில் கம்பன், வள்ளுவன், இளங்கோ முதலிய பெரியார்களைக் குறித்த ஹஸ்தங்கள் சற்று பொருத்தம் குறைந்து காணப்பட்டன. இதை பொருத்தமாக அமைக்க இடம் உண்டு. 'துன்பம் நேர்கையில்' என்ற பாட்டில் அபிநயம், சாத்வீகம் பொருந்தியிருக்க, உணர்ச்சித் தொனி இல்லாமல் பாடியது அபிநயத்தின் இனிப்பைக்கூடக் கொஞ்சம் குறைத்து விட்டது. குறத்தி நடனத்தில் நட்டுவனுக்கு இன்னும் அதிகத் திறமையுண்டு. அது முழுமையும் ஏனோ அங்கு காணப் படவில்லை. மார்வாரி நடனத்தின் ஆபாசமற்ற அடக்கமான உடை, மற்ற கலைஞர்கள் பின்பற்ற வேண்டிய உதாரணமாகும். குமாரி சரளாவின் நடனத் திறமையும், சாத்வீக அழகும் தென்னிந்திய நாட்டியத்தின் மீது மேனாட்டவர்களுக்குக்கூட மரியாதையையும், உயர்வான அபிப்பிராயத்தையும் தோன்றச் செய்யும்.

டி. வி. சுந்தரம் அய்யங்காரின் பேத்தியான குமாரி சரளா, கோபால கிருஷ்ணனிடம் நடனப் பயிற்சி பெற்றவர். இந்த நிகழ்ச்சியின் நடுநடுவே மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஓரங்க நாடகங்கள் சிலவற்றை நடித்தனர். —"நந்தி"

**Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.**



கல்லும் கவி பாடுமே!
1
2
3
4
5
!
அடடா, என்ன மணம்! அந்த T·A·S·ரத்தினம் பட்டணம் பொடியிலே எனக்கும் ஒரு சிட்டிகை கொடுங்கோ.
ரோஸாக்
T·A·S·ரத்தினம் பட்டணம் பொடி
S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

GUNDOOSI Regd. No. M. 4924 March 1955
Registered as a News Paper in Ceylon.

